# பாரதி பிறந்தார்

கல்கி

-சந்திரா-

தமிழ்ப்பண்ணை


முதற் பதிப்பு—ஆகஸ்டு, 1946.

விலை ரூ. 4-8-0

தியாகி அச்சகம், தமிழ்ப் பண்ணை. MS 384.

# பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| 1. | பாரதி பிறந்தார் | ... | 16 |
| 2. | திரு. வி. க. | ... | 37 |
| 3. | தீரர் சத்தியமூர்த்தி | ... | 58 |
| 4. | கம்பரும் நானும் | ... | 111 |
| 5. | தெய்வமானார் | ... | 128 |
| 6. | கிட்டப்பா ஞாபகம் | ... | 136 |
| 7. | வீழ்ந்த ஆலமரம் | ... | 151 |
| 8. | சாபம் நீக்கிய கவிஞர் | ... | 168 |
| 9. | பொழுது புலர்ந்தது | ... | 191 |

# முன்னுரை

ஆசிரியர் கல்கியின் ஜாதக விசேஷம் என்னவென்றால், அவர் என்ன எழுதினாலும், அல்லது எந்தக் காரியத்தை ஆரம்பித்தாலும் அதை மற்ற எழுத்தாளரும் பத்திரிகைக்காரர்களும் தாக்க வேண்டும் என்பதுதான்!

ஆனால் மேற்படி வழக்கத்துக்கு விரோதமாகச் சென்ற 1944-ம் ஆண்டில் ஒரு அதிசய சம்பவம் நிகழ்ந்தது. அதாவது ஆசிரியர் கல்கி எழுதிய விஷயத்துக்கும் ஆரம்பித்த காரியத்துக்கும் தமிழ் நாட்டில் மகத்தான வரவேற்புக் கிடைத்தது! அரசியல் பிரமுகர்கள், இலக்கிய விமர்சகர்கள், எழுத்தாளர்கள், பத்திரிகைக்காரர்கள் எல்லோரும் ஒரு முகமாக ஆதரித்தார்கள்.

கல்கி ஆரம்பித்ததாயிற்றே என்று யாரும் கச்சையைக் கட்டிக்கொண்டு எதிர்ப்பு முன்னணி தொடங்கவில்லை. அதற்குப் பதிலாக எல்லாரும் ஒன்று சேர்ந்து ஆதரவு தந்தார்கள்.

அப்படிப்பட்ட காரியம் என்னவென்பதை நேயர்கள் இதற்குள் ஊகித்திருக்கலாம்.

அமரகவி பாரதியாரின் ஜன்ம பூமியாகிய எட்டயபுரத்தில் அவருடைய ஞாபகச் சின்னம் ஒன்று ஏற்படுத்துவதற்காகக் கல்கி ஆரம்பித்த முயற்சிதான்.

அந்த மகத்தான முயற்சிக்கு மூல காரணமாக அமைந்தது கல்கி எழுதிய "பாரதி பிறந்தார்" என்ற ஒரு கட்டுரையே யாகும். அதுவே இந்த நூலின் முகப்புக் கட்டுரையாக அமைந்திருக்கிறது.

*　　　*　　　*

ஆசிரியர் கல்கி அவர்கள் ஸ்ரீ டி. கே. சி. யுடன் ஒரு தடவை எட்டயபுரத்துக்குப் போய் வந்த பிறகு 'பாரதி பிறந்தார்' என்ற கட்டுரையை 8—10—44-ந் தேதி கல்கி இதழில் எழுதினர். அதன் காரணமாகக் கல்கி ஆசிரியருக்குப் பல இடங்களிலிருந்து ஏராளமான கடிதங்கள் வந்து குவிந்தன. அவற்றில் முதன் முதலாக வந்த கடிதத்தில் பிள்ளையார் சுழி போட்டு ஐந்து ரூபாய் செக்கு ஒன்றும் இணைக்கப்பட் டிருந்தது. அந்தக் கடிதம் எழுதியவர் ஸ்ரீ கி. ரகுநாதன் என்பவராவர்.

ஸ்ரீ ரகுநாதன் அவர்கள் சுபகரமாக ஆரம்பித்து வைத்த மேற்படி ஞாபகச் சின்ன நிதியானது நாளடைவில் மிகப் பெரிய நிதியாக மாறிப் "போதும்! போதும்!" என்று ஆசிரியரே அறிவித்துக் கொள்ளும் அளவுக்குப் பெருகி விட்டது. மேற்படி ஞாபகார்த்த நிதிக்குத் தமிழ்நாட்டிலுள்ள தமிழன்பர்களைப் போலவே வடநாடு, அஸ்ஸாம், சிலோன் முதலிய இடங்களிலுள்ள தமிழர்களும் மணியார்டர்களும் செக்குகளுமாய் அனுப்பிக் கல்கி காரியாலயத்தைத் திணற அடித்து விட்டார்கள்.

ஐயாயிரம் ரூபாயாவது சேருமா என்று ரொம்பவும் சந்தேகத்தோடு ஆரம்பித்த நிதியானது நாற்பதினாயிரம் ரூபாய்க்குமேல் எட்டிப் போய்விட்டது.

மேற் கண்டவாறு பாரதி ஞாபகார்த்த நிதியைக் கொண்டு கல்கி ஆசிரியர் தமிழ் மக்களின் பூர்ண சம்மதத் துடன் மற்ெறாரு முக்கியமான காரியத்தையும் செய்து முடித்தார். அதாவது, மேற்படி தொகையிலிருந்து ரூபாய் பத்தாயிரத்தைத் தனியாக ஒதுக்கிப் பாங்கியில் போட்டு அதிலிருந்து வரும் வட்டித் தொகையை மூன்று மாதத்துக்கு ஒரு தடவை 112—8—0 ரூபாய் வீதம் பாரதியாரின் வாழ்க்கைத் துணைவிக்கு அவருடைய ஜீவியகாலம் வரை உதவியாக அளிக்க ஏற்பாடு செய்தார்.

பின்னர், 3-6-45-ல் ராஜாஜியின் தலைமையில் பாரதி மண்டபத்துக்கு அஸ்திவாரக் கல் நாட்டு விழா நடந்ததும் மேற்படி விழாவுக்குத் தமிழ் நாட்டின் பல பாகங்களிலிருந்து பல்லாயிரக்கணக்கான மக்கள் வந்திருந்ததும் நேயர்கள் அறிந்த விஷயமாகும். மேற்கண்ட விவரங்களெல்லாம் இந்தப் புத்தகத்தின் கடைசியில் விசேஷ அனுபந்தமாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

ஒரு கட்டுரையின் மூலம் ரூபாய் நாற்பதாயிரம் வசூல் செய்வதென்பது தமிழ்நாட்டின் சரித்திரத்திலேயே புதிய விஷயமாகும். ஒரு பெரிய அதிசயம் என்று கூடச் சொல்லலாம்.

* * *

மகாகவி பாரதியாருக்கு எட்டயபுரத்தில் ஞாபகார்த்தம் ஏற்படுத்தும் முயற்சியோடு கல்கி ஆசிரியர் திருப்தி அடைந்து விடவில்லை.

ஜீவியவந்தரான மற்றொரு தமிழ்க் கவிஞரையும் தகுந்தபடி உபசரிக்கவேண்டும் என்று விரும்பினர்.

''பாரதியார் மிகக்கொடிய வறுமை மேவப்
பார்த்திருந்த தமிழர் உற்ற பழிதான் என்னே!''

என்றபடி நாமக்கல் கவிஞரையும் அத்தகைய வறுமை மேவப பார்த்திருந்து விட்டார்கள் என்ற பழிக்கும் சாபத்துக்கும் தமிழர்கள் ஆளாகாமல் தமிழ்ப்பண்ணையாளர்கள் தொடங்கி வைத்த நாமக்கல் கவிஞர் நிதிக்குத் தமது பத்திரிகையின் மூலமாகவும் பிற வழிகளிலும் ஒத்தாசை செய்தார்.

நாமக்கல் கவிஞரின் பெருமையையும் அவருக்குப் பெங்களூரிலும் சென்னையிலும் பணமுடிப்பு அளிப்பு வைப வம் நடந்த வரலாற்றையும் பற்றிக் கல்கி அவர்கள் எழுதிக் கொடுத்த சாபம் நீக்கிய கவிஞர் என்னும் கட்டுரை இந்தப் புத்தகத்தின் 'கார்டு வண்டி' கட்டுரையாக அமைந்திருக்கிறது!

மேற்படி இரு கட்டுரைகளோடு கல்கி தமிழ் அறிஞர் களையும் அரசியல் பிரமுகர்களையும் பற்றி எழுதியுள்ள இன்னும் சில முக்கியமான கட்டுரைகளையும் சேர்த்துப் புத்தக ரூபமாகத் தந்திருக்கிறோம்.


தற்காலத் தமிழ் மக்களின் சிறந்த பண்பாட்டையும் அமர கவி பாரதியாருக்கும் ஜீவியவந்தரான நாமக்கல் கவிஞருக்கும் அவர்கள் காட்டிய மரியாதையையும், செலுத் திய அன்புக் காணிக்கையையும், கொண்டாடிய விழாவையும் பற்றி நமது பிற்கால சந்ததிகள் இந்தப் புத்தகத்தின் மூலம் அறிந்து கொள்ளுதல் சாத்தியமாகும்.

* * *

ஒரு காலத்தில் ஆங்கிலம் படித்தவர்களிடையே தமிழ்ப் புத்தகங்களையும் தமிழ்ப் பத்திரிகைகளையும் தொடுவதே கேவலமாகக் கருதப்பட்டது. அத்தகைய மனப் பான்மையைப் போக்கி இன்று தமிழ்நாட்டின் மூலை முடுக்கு களிலெல்லாம் தமிழ் வெள்ளம் பாயும்படி செய்தவர் கல்கிதான் என்பதை யாரும் மறுக்க முடியாது.

பாரதியார் கவிதைக்கு எப்படிப் புது மலர்ச்சியை அளித்தாரோ, அப்படித் தமிழ் வசனத்திற்கு மறு மலர்ச்சி உண்டாக்கியவர் கல்கி. எட்டயபுரம் பாரதி ஞாபகார்த்த மண்டபத்தின் மூலம் அந்த இருவரின் பெயர்களும் ஒன்றாக இணைந்துவிட்டன.

ஸ்ரீ கல்கி அவர்களுக்குத் தமிழ் மக்களின் சார்பாக நன்றி கூறுகிறோம். வாழ்க கல்கி! வாழ்க பாரதி நாமம்!



தமிழ்ப்பண்ணை





அமைதி குலவும்
தமிழ்ச் சொல்லில்—பல
ஆற்றல் புகுத்தி
விட்டவல்லன்
நமது பாரதியின்
பாட்டே—தமிழ்
நலத்தைக் காக்கும்
ஒரு கோட்டை.

பண்டைச் சிறப்பு
களைப் பாடி—கிழப்
பாட்டிகள் கூட்ட
மெனக் கூடி
அண்டிப் பதுங்கி
விட்ட நாட்டில்—நவ
ஆர்வம் வளர்த்த
தவன் பாட்டே.

வாழ்க பாரதியின்
அருமை—அதில்
வளர்க தாய்மொழி
யின் பெருமை
வாழ்க வையகத்தில்
யாரும்—பிணி
வறுமை அச்ச
மற்று வாழ்க.

—நாமக்கல் கவிஞர்.




கடந்த 1945ம் வருஷம் ஜூன் மாதம் மூன்றும் தேதியன்று மகா கவி பாரதியார் பிறந்த எட்டயபுரம் விசேஷ சோபையுடன் விளங்கிற்று.


தமிழ் நாட்டின் பல்வேறு பாகங்களிலிருந்து ஆயிரக்கணக்கான தமிழ் அன்பர்கள் அங்கே விஜயம் செய்திருந்தார்கள். நமது தலைவர் ராஜாஜி, ரசிகமணி டி. கே. சி, நாமக்கல் கவிஞர், முதலிய தமிழறிஞர்கள் விழா மேடையில் பிரசன்னமாயிருந்தார்கள்.

அன்று தான் எட்டயபுரத்தில் மகாகவி பாரதியாரின் ஞாபகார்த்த மண்டபம் கட்டுவதற்கு ராஜாஜி அஸ்திவாரக்கல் நாட்டினார்.

கல்கி ஆசிரியர் ஸ்ரீ ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்களின் முயற்சியின் காரணமாக நடந்த மேற்படி அஸ்திவாரக் கல்நாட்டு விழா உற்சவம் இரண்டு தினங்கள் வெகு விமரிசையாகவும் அமோகமாகவும் நடந்தேறியது. மேற்படி அஸ்திவார விழாவுக்கு காந்தி மகான் தம் கையினாலே தமிழ் மொழியில் எழுதி வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தார், அது தமிழன்பர்களின் உள்ளத்திலே ஒரு புதிய சக்தியை ஊட்டியது.

அத்தகைய சரித்திரப் பிரசித்தி வாய்ந்த மகோற்சவத்தை நேரே பார்த்து அனுபவித்தவர்கள் பாக்யசாலிகள்.


விழாவில் கலந்து கொள்ள இயலாமற்போன அன்பர்கள் இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் படங்களின் மூலம் வைபவத்தின் விமரிசையை ஓரளவு அறிந்து கொள்ளலாம்.



நிலம் உதவிய எட்டயபுரம் மகாராஜாவும் அஸ்திவாரம் போட்ட ராஜாஜியும் நிதி திரட்டிய கல்கியும்.


ஞாபகார்த்த மண்டபத்துக்கு இங்கேதான் அஸ்திவாரம் போட்டார்கள் அஸ்திவார விழாவுக்கு வந்திருந்த கூட்டம் பந்தலுக்குள்ளேயும் வெளியேயும் 'ஜே ஜே' என்று கூடிக் குழுமியிருந்தது.






எட்டயபுரம் மகாராஜா அஸ்திவாரக் கல்லை எடுத்துக் கொடுக்க ராஜாஜி கல்லை நாட்டுகிறார்.









பூஜை நடந்த பிறகு
ராஜாஜிக்குச் சந்தனம்
தாம்பூலம் பழம் முதலியவை
வழங்கப் படுகின்றன.






எட்டயபுரம் ராஜா, டி. கே. சி. ராஜாஜி முதலியவர்கள் விழா மேடைக்குச் செல்லுகின்றனர் ராஜாஜி விழாவை ஆரம்பித்து விட்டார்.



எட்டயபுரத்தில் பாரதி ஞாபகார்த்த மண்டப அஸ்திவார விழா ஆரம்பமாகி விட்டது. பாரதியாருடைய புதல்விகளும் பேத்தியும் "முருகா, முருகா" என்ற பிரார்த்தனையுடன் கூட்டத்தைத் துவக்கி வைக்கின்றனர்.

ஸ்ரீமதி டி. கே. பட்டம்மாள் 'பொழுது புலர்ந்தது' என்னும் பாரதியார் கீதத்தைப் பாடி முடிக்கும்போதே ஸ்ரீ டி. கே. சி. பேசத் தயாராகிறார். தலைவர் ராஜாஜி காரியத்தில் கண்ணாயிருக்கிறார்.





பாரதியாரைப்பற்றி, தலைவர் ராஜாஜியின் அற்புதமான சொற்பொழிவை கூடியுள்ள மக்கள் குதூகலத்துடன் கேட்டுக்கொண்டிருக்கின்றனர். அதோ கதர்க் குல்லாயுடன் கம்பீரமாக வீற்றிருப்பவர் டாக்டர் சுப்பராயன்

ராஜாஜியின் பிரசங்கத்தைக் கேட்கக் கூடியுள்ள ஆயிரக்கணக்கான மக்கள் தங்கள் பசியையும் பொருட்படுத்தாமல் செவிக்கு உணவளித்துக் கொண்டிருக்கின்றனர்.





கூட்டம் முடியும் முன்பாக பாரதியார் ஞாபகார்த்த மண்டபத்திற்கு உதவி செய்த அனைவருக்கும் ஆசிரியர் கல்கி வந்தனோபசாரம் கூறுகிறார்.

கூட்டம் ஆரம்பமானதும் 'கல்கி' பத்திரிகை மானேஜர் ஸ்ரீ டி. சதாசிவம் விழாவுக்கு வந்திருந்த நூற்றுக்கணக்கான வாழ்த்துத் தந்திகளை தந்தி வேகத்தில் படித்து முடிக்கிறார்.





பாரதியாருடைய பெருமையுடன் இணைந்து சிரஞ்சீவித் தன்மை பெற்ற
ஸ்ரீ ரா. கிருஷ்ணமூர்த்தி ஆசிரியர் கல்கி.

# பாரதி பிறந்தார்!

பாரதி தினக் கொண்டாட்டங்கள் வருஷந்தோறும் செப்டம்பர் 11உ தமிழ் நாட்டில் நடக்கின்றன. ஒரு வருஷம் நடந்த ஒரு கொண்டாட்டத்தில் ஒரு பிரசங்கி, பாரதியாரின் பெருமையையும் அவருடைய கவியின் மகிமையையும் பற்றிப் பேசிவிட்டுப் பின்வருமாறு பேச்சை முடித்தார்:

"அப்பேர்ப்பட்ட பாரதியார் இன்றைய தினம் இந்த மண்ணுலகை விட்டுப் பொன்னுலகை அடைந்தார்! அவரை நாம் எல்லோரும் பின் பற்றுவோமாக!"

ஆனால், அந்தக் கூட்டத்தில் இருந்தவர் ஒருவ ராவது அன்றைய தினம் பாரதியாரைப் பின்பற்றவில்லை! பிறருக்குப் போதனை செய்த பிரசங்கிகூட அவரைப் பின்பற்றிப் பொன் னுலகம் சேரவில்லை. எல்லாரும் கல்லுப் பிள்ளையாரைப் போல் உட்கார்ந்திருந்து விட் டுத் தத்தம் வீட்டுக்குச் சென்றார்கள்!

இப்படிப் பட்ட பேச்சு விபரீதங்களுக்குக் காரணமா யிருப்பது என்னவென்றால், பாரதி யாரின் ஞாபகத்தைக் கொண்டாடுவதற்கு நாம் அவருடைய மரண தினத்தை ஏற்படுத்திக் கொண்டதே யாகும். அவர் இறந்துபோனதை ஏன் அவ்வளவு உற்சாகமாகக் கொண்டாட வேண்டும் என்றும், அதற்குப் பதிலாகப் பிறந்ததினத்தைக் கொண்டாடுவது பொருத்த மில்லையா என்றும் ஒரு பிரச்னை வருஷா வருஷம் கிளம்புகிறது.

இந்தக் கேள்விக்கு, காரைக்குடி தேசபக்த ரும் பாரதியாரைப் பார்த்துப் பழகும் பாக்கியம் பெற்றவருமான ஸ்ரீ சா. கணேசன் சென்னை யில் நடந்த கொண்டாட்டத்தில் பதில் சொன்னார்:

“பிறக்கும்போது எல்லா மனிதர்களும் ஒரே மாதிரிதான் பிறக்கிறார்கள். வித்தியா சமே கிடையாது. இறந்து, ஒழிந்து, செத்து, மாய்ந்து, மடிந்து போன பிறகுதான் ஒருவ

ருடைய பெருமையும் மகிமையும் நன்கு புலனாகிறது. ஆகையால், பாரதியார் மாண்ட தினத்தை — மாண்ட அதாவது மகிமை வாய்ந்த தினத்தை — கொண்டாடுவதுதான் சாலப் பொருத்தமானது!''

ஸ்ரீ. சா. கணேசனுடைய பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த போது, எனக்கு ஒரு விஷயம் புலனாயிற்று. பாரதியார் அவ்வளவு அவசரமாக,—நம்மைப் போன்ற துரதிர்ஷ்டசாலிகள் அவரைத் தரிசிக்கும் பாக்கியம் பெறுவதற்கு முன்னாலேயே, — ஏன் காலமானார் என்று தெரிய வந்தது.

இறந்து, ஒழிந்து, செத்து, மாண்டுபோன பிறகுதான் தம்முடைய மகிமையும் பெருமையும் வெளியாகும் என்பது பாரதியாருக்கும் தெரிந்திருக்க வேண்டும். மகிமையும் பெருமையும் அடைவதற்காக யார்தான் கொஞ்சம் அவசரப்பட மாட்டார்கள்?

* * *

பெரியவர்கள் பிறந்த தினத்தைக் கொண்டாடுவதா, இறந்த தினத்தைக் கொண்டாடுவதா என்பது உண்மையில் ஒரு சிக்கலான பிரச்னைதான். நமது பூர்வீக சம்பிரதாயங்களைப் பார்த்தாலும் இந்தச் சிக்கலைத் தீர்க்க உதவி ஏற்படவில்லை. இராமன், கிருஷ்ணன்

முதலியவர்களின் பிறந்த தினத்தைக் கொண் டாடுகிறோம். ஆழ்வார்கள், நாயன்மார்கள் முதலியவர்கள் திருநாடு சேர்ந்த தினத்தைக் கொண்டாடுகிறோம். எது சரியான முறை?

கொஞ்சம் யோசித்துப் பார்த்தால், நமது பூர்வீக சம்பிரதாயத்திலும் ஒரு முறை இருப் பதாகவே தெரிகிறது.

தேவர்கள் வந்து பூலோகத்தில் அவதரிக் கும்போது அவர்களுடைய ஜன்ம தினத்தைக் கொண்டாடுகிறோம்.

சாதாரண மனிதப் பிறவி எடுத்தவர்கள் அரும் பெரும் காரியங்களைச் செய்து விட்டு மரணமடையும் போது, உண்மையில் அவர் கள் அமரர்களாகவும் சிரஞ்சீவிகளாகவும் ஆகிறார்கள்! எனவே, அவர்கள் மனிதப் பிறவியை நீத்து அமரபதவி அடைந்த தினத் தைக் கொண்டாடுவதும் பொருத்தந்தான்!

ஆனாலும் ஒன்று நிச்சயமாகக் கூறலாம். பிறந்த தினத்தைக் கொண்டாடுவது முறையா, மரண தினத்தைக் கொண்டாடுவது முறையா என்னும் பிரச்னை எப்படித் தீர்ந்த போதிலும் பெரியவர்கள் பிறந்த தினமும் முக்கியமானது தான் என்பதில் சந்தேகமில்லை.

ஏனெனில், ஒருவர் மரணமடைவதற்கு ஆதார மான காரியம் அவருடைய பிறப்பேயல்லவா? பிறக்காவிட்டால் இறக்கவும் முடியாதல்லவா?

எனவே, பாரதியார் பிறந்த நாளும் முக்கிய மானதுதான். அதைப் போலவே அவர் பிறந்த இடமும் முக்கியமானது என்பதில் சந்தேகமில்லை.

ஆங்கில மகா கவியான ஷேக்ஸ்பியர் பிறந்த தினத்தை அவர் பிறந்த ஊரிலேயே கொண்டாடுவது பற்றி ஆங்கிலப் பத்திரிகைகளில் படிக்கும் போதெல்லாம் எனக்கு எட்டய புரம் ஞாபகம் வருவதுண்டு.

ஷேக்ஸ்பியர் பிறந்த ஊரில் அவருடைய தாயார் வசித்த குடிசை ஒன்று முக்கியமான காட்சிப் பொருளா யிருக்கிறதாம். அந்தக் குடிசையை ஏறக்குறைய வருஷா வருஷம் புதுப்பித்துக் கட்டவேண்டி யிருக்கிறதாம்! ஏனென்றால், ஷேக்ஸ்பியர் பிறந்த தினத்தில் அவருடைய ஊருக்கு வரும் லட்சக்கணக்கான ஜனங்கள், ஷேக்ஸ்பியரின் ஞாபகார்த்தமாக மேற்படி குடிசையிலிருந்து ஒவ்வொரு சிறு பகுதியைப் பிய்த்து எடுத்துக் கொண்டுபோய் விடுவார்களாம்! அவர்கள் வந்து போன பிறகு அநேகமாக அக் குடிசையில் குட்டிச் சுவர் தான் பாக்கி இருக்குமாம்.

மேற்படி குடிசை ஷேக்ஸ்பியரின் தாயார் வசித்த குடிசை என்பது வெறும் கட்டுக்

கதையே என்று அனைவரும் அறிந்திருந்த போதிலும், அதைப் பற்றி யாரும் கவலைப் படுவதில்லையாம்! ஷேக்ஸ்பியரின் பெயரால் நடக்கும் மோசடியைக் கூட, ஷேக்ஸ்பியர் கொண்டாட்டத்தில் ஒரு முக்கிய அம்சமாகவே கருதி, குதூகலத்துடன் அக்குடிசைக் கூரையில் ஒரு பகுதியைப் பிய்த்துக் கொண்டு போய் விடுவார்களாம்! ஆங்கிலேயர் தங்களுடைய கவிஞரை அப்படிப் பாராட்டுகிறார்கள்!

இதையெல்லாம் படிக்கும்போது எனக்கு எட்டயபுரம் ஞாபகம் வரும். அதோடு எட்டயபுரத்தை இன்னும் ஒரு தடவை கூட நாம் போய் எட்டிப் பார்த்து வரவில்லையே என்று அவமானமாயுமிருக்கும். "பாரதியார் பிறந்த எட்டயபுரம் நமக்கு எட்டாத பழமாகவே இருந்து விடுமோ!" என்றும் சில சமயம் ஆதங்கமடைவேன்.

நல்லவேளையாக, இந்த வருஷத்தில் (1945) பாரதியார் திருநாளுக்குச் சில தினங்களுக்கு முன்னால் எட்டயபுரம் போவதற்கு எனக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. இந்தச் சந்தர்ப்பத்தை எனக்கு ஏற்படுத்தித் தந்தவர்கள் எட்டயபுரத்திலுள்ள ஆரம்பப் பாடசாலை உபாத்தியாயர்களான சில இளைய நண்பர்கள்.

தமிழ்நாடெங்குமே தேசீய உணர்ச்சியையும் தமிழ் அன்பையும் கலை ஆர்வத்தையும், வளர்த்து வரும் திருக்கூட்டம் ஒன்று இருக்கிறது. பட்டணங்களிலிருந்து வெகுதூரமுள்ள கிராமாந்தரங்களிலும், ரயிலைக் கண்ணால் காணாத பிரதேசங்களிலும், மூன்று நாளைக்கு ஒரு தடவை தபால் சேரும் பட்டிக்காடுகளிலும் கூட மேற்படி கூட்டத்தார் அறிவு விளக்கை ஏற்றி வைக்கும் அருந்தொண்டை ஆற்றி வருகிறார்கள். இவர்களுக்கு இங்கிலீஷ் பாஷை தெரியாது; அல்லது அந்தப் பாஷையிலே சொற்பமான, பரிச்சயம்—தபால் மேல் விலாசம் எழுதும் அளவுக்கு—இருக்கும். ஆனால் இங்கிலீஷ் படித்த கூட்டத்தாரைக் காட்டிலும் எத்தனையோ மடங்கு அறிவு விலாசம் உள்ளவர்கள். அறிவை விசாலித்துக் கொள்வதில் ஆர்வமும் கொண்டவர்கள். தமிழ்ப் புத்தகங்களை வெளியிடுவோரும் தமிழ்ப் பத்திரிகை நடத்துவோரும் இந்தக் கூட்டத்தை நம்பியே தங்கள் காரியங்களை நடத்தி வருகிறார்கள். சமீப காலத்தில் தமிழ் நாட்டில் புத்தகப் பிரசுரம் ஓங்கி வளர்ந்திருப்பதற்கும் தமிழ்ப் பத்திரிகைகள் பல வெற்றிகரமாக நடந்து வருவதற்கும் காரண புருஷர்களா யிருப்பவர்கள் இந்த இளைஞர் கூட்டத்தார்தான்.

எட்டயபுரத்தில் உள்ள மேற்கூறிய இனத்தைச் சேர்ந்த இளைஞர்கள் சிலர் "பாரதி இலக்கிய மன்றம்" என்பதாக நமது தேசீயக்

கவியின் பேரால் ஒரு சங்கம் ஏற்படுத்தி நடத்தி வருகிறார்கள். இச் சங்கத்தின் ஆதரவில் தமிழிசை மகாநாடு ஒன்று நடத்த ஏற்பாடு செய்து அதற்கு என்னை வரும்படி அழைத்தார்கள். பாரதியார் பிறந்த ஊரைப் பார்த்துவிட வேண்டுமென்ற ஆவல் காரணமாக நானும் தக்ஷணமே ஒப்புக்கொண்டேன். ஆனால் அவ்வளவு தக்ஷணமாக அவர்கள் குறிப்பிட்ட தேதியில் போக முடியவில்லை. நானாக இரண்டு மூன்று தடவையும், மகாநாட்டுத்தலைவர் டி. கே. சி. இரண்டு மூன்று தடவையும், தள்ளிப் போட்ட பிறகு கடைசியில் நானாகவே "செப்டம்பர் 9உ கட்டாயம் வருகிறேன்; வந்தே தீருவேன்; அப்படித் தான் வருவேன்; வராமல் இருக்க முடியாது" என்று மேற்படி மன்றத்தின் தலைவருக்குத் தந்திமேல்தந்தி கொடுத்துவிட்டுப் போய்ச் சேர்ந்தேன்.

எட்டயபுரத்தில் தமிழிசை மகாநாடு மிகச் சிறப்பாக, பாண்டு வாத்திய முழக்கங்களுடன் ஆரம்பமாயிற்று. மகாநாட்டை எட்டயபுரம் மகாராஜா அவர்கள் கதையில் வரும் மந்திரவாதியைப் போல் திறந்து வைத்தார். அதாவது மகாராஜா "திற!" என்றதும், மகாநாடு திறந்து கொண்டது.

பிறகு, ஸ்ரீ டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்கள் ஏற்கனவே உட்கார்ந்திருந்த அக்கிராசன பீடத்தில் இன்னும் கொஞ்சம் பலமாக அமர்ந்தார்!

பின்னர், உபசாரப் பத்திரம் படித்துக் கொடுத்தல். எனக்குக் கொடுக்க இருந்த பத்திரத்தைப் படிக்க ஆரம்பித்த போது, "நானே படித்துக் கொள்கிறேன்; கொடுத்துவிடுங்கள்!" என்று கையை நீட்டினேன். காரியதரிசி முடியாதென்று மறுத்துவிட்டு, தாமே ஒரு தடவை படித்த பிறகுதான் கொடுத்தார். நான் அதை வாங்கிப் பார்த்த பிறகுதான் இரகசியம் வெளியாயிற்று. உபசாரத்தில் அச்சுப் பிழைகள் தாராளமாயிருந்தன. "உங்கள் பத்திரத்திலே என்று அச்சுப் பிழைகள் அதிகமாக வந்திருக்கின்றன. பாருங்கள்!" என்றார் காரியதரிசி. மற்றவர்கள் படிக்கவே மாட்டார்கள், படித்தாலும் அவர்களுக்குப் பிழை கண்ணில் படாது என்று அவருக்கு அவ்வளவு தைரியம்!

❋ ❋ ❋

மாலையில் மறுபடியும் எட்டயபுரம் தமிழிசை மகாநாடு கூடியது. திருநெல்வேலி காலேஜ் பொருளாதார புரொபஸரும், பிரசித்த ஸாஹித்ய கர்த்தா ஸ்ரீ நீலகண்ட சிவம்

அவர்களின் வம்சத்தில் வந்தவருமான ஸ்ரீமதி சாரதாம்பாள் எம். ஏ. வீணையுடன் தமிழிசை பாடினர். பிறகு, அக்கிராசனர் டி. கே. சி. அவர்களின் பிரசங்கமும் மற்றப் பிரசங்கங்கள் அதிகப்பிரசங்கங்களும் முறைப்படி நடந்து முடிந்தன. எல்லாம் வெகு விமரிசையாக நடந்தது.

இராத்திரி ஸ்ரீ அமிருதஸ்வாமி அவர்களின் இல்லத்தில் நடந்த விருந்து உள்படத்தான்.

அமிருதஸ்வாமி என்பவர் எட்டயபுரம் ஜமீன்தாரின் மைத்துனர்; அதாவது சகோதரியின் கணவர். இவர் இருக்கிறார் என்கிற தைரியத்திலே எட்டயபுரத்து இளைஞர்கள் யாரை வேண்டுமானாலும் அவர்களுடைய பாரதி இலக்கிய மன்றக் கூட்டங்களுக்கு அழைத்து விடுவார்களாம்! அழைக்க வேண்டிய பொறுப்பு அவர்களுடையது; வந்தவர்களுக்கு விருந்தளித்து உபசரிக்க வேண்டிய பொறுப்பு ஸ்ரீ அமிருதஸ்வாமி அவர்களுடையது!

ஸ்ரீ அமிருதஸ்வாமி, பாரதியாரின் ஜீவிய காலத்தில் அவரோடு பழகி, அவருடைய பாட்டைக் கேட்டவராம். பாரதியார் பாடுவது போலவே சில பாடல்களின் முதல் அடிகளைப் பாடிக் காட்டினர். "பாரதியார் இப்படித்தான் பாடுவார்!" என்று டி. கே. சி. சாட்சி கூறினர்.

அன்றைய இரவு எங்களுக்கு வெகு நீண்ட இரவாகத் தோன்றியது. பொழுது எப்போது புலரும் என்று இருந்தது. ஏனென்றால், மகாநாடு முடிந்தது என்றாலும் உண்மையிலே எதற்காக நான் வந்தேனோ, அந்தக் காரியம் ஆகவில்லை. பாரதியார் பிறந்த வீட்டைப் பார்த்தாக வில்லை. மறு நாள் காலையிலேதான் பார்ப்பதாக இருந்தோம்.

மெதுவாகப் பொழுதும் விடிந்தது. பாரதியாரின் மூத்த புதல்வி, ஸ்ரீமதி தங்கம்மாள் முதல் நாள் வைபவத்துக்காக வந்திருந்தபடியால் அவரே எங்களுக்குப் பாரதியார் வீட்டைக் காட்டுவதாக முன்வந்தார். எல்லாருமாகக் கிளம்பினோம்.

எட்டயபுரம் வீதிகளிலே நடந்து போகையிலேயே எனக்கு என்னமோ செய்தது. "இந்த வீதிகளின் வழியாகப் பாரதியார் எத்தனையோ நாள் நடந்து போயிருப்பாரல்லவா? இந்தத் தெருப் புழுதி யெல்லாம் அவர் மேலும் பட்டிருக்குமல்லவா?" என்று நினைத்தபோது, பாரதியாரோடு புதிய உறவு ஏற்பட்டு விட்டதாக எனக்குத் தோன்றியது. பின்னோடு வந்தவர்களில் ஒருவரின் கால் தடுக்கி நான் கீழே விழப்பார்த்து அவர் என்னைப் பிடித்துக்

கொண்டபோது, "அடாடா! விழாமற் போனேமே? இந்த எட்டயபுரத்துப் புழுதியில் இன்னும் கொஞ்சம் சென்னைக்குக் கொண்டு போயிருக்கலாமே?" என்று நினைத்தேன்.

பாரதியாரின் வாழ்க்கையில் ஒரு சிறு சம்பவமும் அப்போது நினைவுக்கு வந்தது.

பாரதியார் சிலகாலம் கடையம் என்னும் கிராமத்தில் தங்கியிருந்தார். அப்போது ஒரு தடவை எங்கேயோ போவதற்காக ரயில்வே ஸ்டேஷனுக்குச் சென்று ரயில் ஏறினார். பெரும்பாலும் மெய்மறந்து பரவச நிலையில் உள்ளவராதலால், ரயில் ஏறும்போது காலைப் படியில் வைப்பதற்குப் பதிலாகப் பக்கத்தில் வைத்துவிட்டார். தடால் என்று பிளாட்பாரத்தில் விழுந்தார்! அருகில் இருந்தவர்கள் எல்லாரும் "ஐயோ! பாரதியார் விழுந்து விட்டாரே!" என்று அலறிப் புடைத்துக் கொண்டு அவரைத் தூக்க வந்தார்கள். "தூக்காதே!" "கிட்டே வராதே!" என்று ஆவேசம் வந்தவரைப் போல் கூவினார் பாரதியார். "இது என்ன வம்பு!" என்று மற்றவர்கள் திகைத்து நிற்க, பாரதியார், மீண்டும் "ஆஹா! இந்தப் புண்ணிய பூமியிலே படுப்பதற்கு, இந்தப் பாரத நாட்டின் புழுதியிலே புரள்வதற்குக் கொடுத்து வைக்க வேண்டாமா? எத்தனை பெரியோர்கள், எத்தனை மகான்கள்,

எவ்வளவு கற்புக் கரசிகள், எவ்வளவு மகா கவிகள், கலைஞர்கள், அவதார புருஷர்கள் வாழ்ந்த தேசம் இது? இப்பேர்ப்பட்ட தாய் நாட்டின் மண்ணில் இன்னும் கொஞ்சம் புரண்டு விட்டு வருகிறேன். எல்லாரும் எட்ட நில்லுங்கள்!'' என்று சொல்லிவிட்டு, அனைவரும் பார்த்திருக்க, அந்த ரயில் ஸ்டேஷன் பிளாட்பாரத்தில் உண்மையிலேயே புரண்டாராம். ரயில் டிரைவரும் கார்டும் கூடப் பிரமித்துப்போய் நின்று, பாரதியார் எழுந்து வந்து ரயில் ஏறிய பிறகுதான் ரயிலை விட்டார்களாம். *

எட்டயபுரத்துப் புழுதியில் விழுந்து புரண்டால் ஒருவேளை அடுத்த ஜன்மத்திலாவது பாரதி யாரைப் போல் ஒரு பாடல் பாடும் சக்தி வராதா என்ற ஆசை எனக்கு அப்போது ஏற்பட்டது. அப்படிச் செய்தால் ஒருவேளை வேஷ்டி அழுக்காய்ப் போய் விடுமோ என்ற

---

* இந்தச் சம்பவம் உண்மையாக நடந்ததா என்று என்னைச் சத்தியம் செய்யச் சொன்னால் செய்ய முடியாது. பாரதியாரின் பத்தினியும் சொந்த மகளும் எழுதிய வாழ்க்கைச் சம்பவங்களையே அவருடைய சீடர்கள் சிலர் மறுத்து "அப்படி ஒன்றும் இல்லை'' என்கிறார்கள். எனவே, மேற்படி சம்பவம் உண்மையில் நடந்தது என்று நான் சத்தியம் செய்வதற்கில்லை. ஆனாலும் பாரதியார் பாடல்களில் அடங்கியுள்ள தேசபக்தி வெறியைப் பார்க்கும் போது, சம்பவம் நடந்திருக்கக் கூடியதுதான் என்று தோன்றுகிறது.

பயம் வந்து மேற்படி ஆசையைத் தடுத்துக் கொண்டது.

சந்து பொந்துகளின் வழியாகச் சென்று கடைசியில் பாரதியார் பிறந்த வீட்டை அடைந்தோம். வீட்டுவாசலில் ஒன்றுக்கு மேல் ஒன்று உயரமாக இரண்டு விசாலமான திண்ணைகள் இருக்கின்றன. மேல் திண்ணையின் ஓரத்தில் சுவரில் ஒரு குறுகலான வாசற் படி காண்கிறது. அதற்குள்ளே இருந்த அறையிலேதான் பாரதியார் பிறந்தார் என்று சொன்னார்கள். ஆகா! பிறந்த குழந்தை "குவா குவா" என்று அழுதபோது, அந்தக் "குவா" சத்தத்தில், தேச வெறியும் தமிழ்ப் பண்பும் பொங்கித் ததும்பும் அழகிய தமிழ்ப் பாடல்கள் எல்லாம் அடங்கியிருக்கின்றன வென்று யாருக்குத் தெரிந்திருக்கப் போகிறது?

அந்த வாசற்படிக்கு வெளியே, திண்ணையில் பாரதியார் தூணில் சாய்ந்து கொண்டு உட் கார்ந்திருப்பது வழக்கம் என்றும் சொன்னார் கள். இப்போது இதே இடத்திலிருந்துதான் பாரதி திருநாளன்று அவருடைய திருவுருவப் பட ஊர்வலத்தை ஆரம்பித்து நடத்துகிறார் களாம்—பாரதி இலக்கிய மன்றத்தைச் சேர்ந்த இளைஞர்கள்தான்.

பாரதியார் பிறந்த வீட்டில் சற்று நேரம் நின்று, உட்கார்ந்து, அங்கு மிங்கும் நகர்ந்து,

பலவிதத்திலும் ஏதாவது பாட்டுப் பாட வருகிறதா என்று பார்த்து விட்டு, ஒன்றும் பயனில்லாமற் போகவே, கோவில்பட்டிக்கு ரயில் வரும் நேரத்தை நினைத்துக் கொண்டு புறப்பட்டோம். ஸ்ரீமதி தங்கம்மாள் வழியிலே பாரதியாரின் தாய் மாமன் வீட்டுக்கு எங்களை அழைத்துச் சென்றார். பாரதியாருடைய தாய் மாமனின் கடைசிப் பெண் சௌ. மீனாட்சி பாரதியார் கீதங்கள் சிலவற்றை மிகவும் இனிமையான குரலில் பாடிக் காட்டினார். அவர் பாடிய மெட்டுக்கள், பாரதியாரின் அசல் மெட்டுக்கள் என்று சொன்னார்கள். பாரதியாருடைய மாமா அந்தக் கீதங்களை அவரைப் போலவே பாடுவார் என்றும், அவரிடமிருந்து தான் அவருடைய குமாரி கற்றுக்கொண்டதாகவும் அறிந்தோம். நாங்கள் போன சமயம் மாமா ஊரில் இல்லை.

மீனாட்சியின் கணவருக்கு எட்டயபுரம் அரண்மனையில் உத்தியோகம் என்று அறிந்தோம். இதைப் பற்றிய பிரஸ்தாபம் வந்தபோது, பாரதியாரும் இரண்டு வருஷ காலம் எட்டயபுரம் அரண்மனையில் உத்தியோகம் பார்த்ததாகத் தெரிய வந்தது. அப்படியானால், கட்டாயம் அந்த அரண்மனையையும் பார்த்து விட வேண்டுமென்று தீர்மானித்தேன். தலைமுறை தலைமுறையாகத் தமிழையும் சங்கீதக் கலையையும் ஆதரித்து வந்தவர்கள் எட்டயபுரம் ஜமீன் வம்சத்தார் என்று அறிந்திருந்தபடி-

யால், அரண்மனைக்குப் போவதில் ஊக்கம் ஏற்பட்டது.

இப்போதுள்ள எட்டயபுரம் ஜமீன்தார் வயதிலேயே இளைஞர். ஆனால் அறிவிலே முதிர்ந்தவர். காலேஜில் படிக்காவிட்டாலும் ஆங்கிலக் கல்வி நன்கு பயின்றவர். அதோடு பயனுள்ள இன்னும் பலவிதக் கல்விகளும் பெற்றிருக்கிறார்.

அரண்மனைத் தோட்டத்தில் ஒரு பகுதியை மேலே நெருக்கமான இரும்பு வலை போட்டு, ஒரு விசாலமான பட்சிக் கூண்டாகச் செய் திருக்கிறது. அதற்குள்ளே விதவிதமான பட்சிகள் நூற்றுக் கணக்கில் வசிக்கின்றன. பற்பல தேசங்களி லிருந்தும் கொண்டுவந்த பட்சிகள் இருக்கின்றன. ஆஸ்திரேலியா வைச் சேர்ந்த ஒரு ஜாதிக் கிளிகளைத் தனியாக ஒரு பக்கத்தில் விட்டிருக்கிறார்கள். சுமார் நூறு கிளிகள் இருக்கும். உருவத்தில் எல்லாம் ஒரு விதந்தான்! ஆனால் வர்ணத்தில் நூறும் நூறுவிதம்! சிவப்பிலே பல வகை, ஊதாவில் பல வகை, பச்சையில் பல வகை, நீலத்தில் பலவகை,—இப்படிக் கண்ணைப் பறிக்கும் நிறங்கள் உள்ள அழகிய பட்சிகள்.

இன்னும் அரண்மனையின் ஒரு தாழ்வாரத்தில், சென்னைக் கடற்கரை மீன் காட்சிச் சாலையில் உள்ளது போலவே, விதவிதமான அழகழ கான வர்ண மீன்கள் கண்ணாடிப் புட்டிகளுக்

குள் காட்சி யளித்துக் கொண்டிருக்கின்றன. சுவர்களில் உலகப் படங்களும், தேசங்களின் படங்களும் தொங்குகின்றன. புத்தகசாலை அறையில் பொது அறிவை வளர்ப்பதற்குரிய எத்தனையோ அபூர்வமான புத்தகங்கள் இருக்கின்றன.

அரண்மனையில் இன்னும் எவ்வளவோ பார்க்கத்தக்க கலைப் பொக்கிஷங்கள் இருக்கின்றன வென்று அறிந்தோமானாலும், ரயிலை நினைத்துக்கொண்டு ஜமீன்தாரிடம் விடை கேட்டோம். அப்போது அவர் போட்ட போடு என்னைத் திகைக்கச் செய்து விட்டது. "டி. கே. சி. யிடம் கம்பன் பாடல் கேட்க வேண்டுமென்று எவ்வளவோ நாளாக எனக்கு ஆசை!" என்றார்.

அவ்வளவுதான்; எழுந்தவர்கள், திரும்ப உட்கார்ந்து விட்டோம்.

குற்றாலத்து மலையில் ஒரு நாள் நான் டி. கே. சி. யிடம், "இதோ இந்தச் சின்ன இடத்துக்குள் நூற்றைம்பது வகை மரங்கள் இருக்கின்றன. பார்த்தீர்களா? ஒரு மரத்தைப் போல் இன்னொன்று இல்லை; ஒரு இலையைப் போல் இன்னொன்று இல்லை; ஒரு இலை நிறம் போல் இன்னொரு இலை நிறம் இல்லை. நூற்

றைம்பது மரத்தின் இலையும் நூற்றைம்பது விதமான பச்சை நிறம்! இது என்ன விந்தை!'' என்றேன்.

அப்போது டி. கே. சி. "இதே விஷயத்தைக் கம்பனும் அநுபவித்து ஆச்சரியப்பட்டிருக்கிறான்!'' என்று கூறி,

**"மறைகளை மறைந்து போய்**
**வனத்துள் வைகுவான்!''**

என்னும் அடியை எடுத்து விளக்கினார்.

மேற்படி வரிக்குச் சாதாரண சம்பிரதாய அர்த்தம் என்னவென்றால்,

"வேதங்களால் அறியப்படாதவனை பரம் பொருள் இராமவதாரம் எடுத்து நாட்டைத் துறந்து காட்டுக்குப் போனான்!''
என்பதுதான்.

டி. கே. சி. அதற்குக் கூறிய அர்த்தம் பின்வருமாறு:—

"ரிஷிகளும் முனிவர்களும் வேத நூல்களில் கடவுளுடைய தத்துவத்தை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அந்த வேத நூல்களைப்படித்து அர்த்தம் செய்து கொள்வது அவ்வளவு எளிதல்ல. படித்து அர்த்தம் தெரிந்தவுடனே, "ஆஹா! எனக்கல்லவா இதன் பொருள் தெரிந்து விட்டது?'' என்று ஆணவம் உண்டாகிறது. ஆணவம் தோன்றிய இடத்திலிருந்து பகவான் உடனே மறைந்து விடுகிறார்.

ஆனால், காட்டுக்குள்ளே போய்விட்டால்,'நான் செய்தேன்' என்ற ஆணவ உணர்ச்சிக்கே இடமில்லாமல் போகிறது. வனத்துக்குள்ளே இருக்கும் மலைகள், விருட்சங்கள், செடி கொடிகள், அருவி எல்லாம் 'நான் செய்தேன்' என்ற உணர்ச்சிக்குச் சிறிதும் இடமின்றிக் கடவுளின் செயலையே நினைவூட்டுகின்றன. எனவே, காட்டுக்குள்ளேதான் மனிதனுடைய ஆணவம் அடியோடு மறைந்து இறைவனுடைய பெருமையை நன்கு உணர முடிகிறது.

குற்றாலத்தில் கேட்ட மேற்படி பாடலைத்தான் எட்டயபுரம் அரண்மனையில் சொல்லும்படி டி. கே. சி. யிடம் கேட்டுக் கொண்டேன். ஜமீன்தாருக்கு விருட்சங்கள், செடிகள், பட்சிகளிடம் உள்ள பிரியத்தைக் கண்டு மேற்படி பாடலை அவர் நன்றாய் அநுபவிப்பார் என்று நினைத்தேன். அது உண்மையாயிற்று. அதை அவர் அநுபவித்த விதத்திலிருந்து அவருடைய ரஸிகத்தன்மை நன்கு புலப்பட்டது.

ஜமீன்தாரிடமும், எட்டயபுரத்தினிடமும் விடை பெற்றுக் கொண்டு புறப்பட்டோம். ஸ்ரீ அமிருத ஸ்வாமியும் பாரதி இலக்கிய

மன்றத்து இளைஞர்களும் கோவில்பட்டி வரையில் வந்து எங்களை ரயில் ஏற்றி விட்டார்கள்.

பாரதியார் பிறந்த எட்டயபுரத்தில் அவருடைய ஞாபகார்த்தமாக ஒரு சிறு புத்தக நிலையமாவது ஏற்படுத்த வேண்டும் என்பது எட்டயபுரத்து இளைஞர்களின் விருப்பம். அதற்கு வேண்டிய ஒத்தாசைகளை நான் செய்ய வேண்டுமென்றும், தமிழ் மக்களை அதில் ஊக்கங் கொள்ளச் செய்ய வேண்டுமென்றும் அவர்கள் ரயில் கிளம்பும் வரையில் ஓயாமல் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

இதோ என்னாலான ஒத்தாசையை நான் செய்தாகி விட்டது. இனிமேல், அந்த ஊக்கமும் உற்சாகமும் உள்ள இளைஞர்களின் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டியது தமிழ் மக்கள் — தமிழன்பர்களின் பொறுப்பு!

# திரு.வி.க.

எழுத்தாளர் உலகில் யாராவது என்னைத் தாக்கும் போதெல்லாம், அந்தத் தாக்குதல்களை அப்படியே நான் வாங்கி, திருச்சி தேசபக்தர் டாக்டர் டி. எஸ். எஸ். ராஜனுக்கு அனுப்பி விடுவது வழக்கம்! ஏனென்றால், எழுத்தாளர் உலகிற்குள் என்னைக் கழுத்தைப் பிடித்துத் தள்ளியவர் டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன்தான்.

சரியாக இருபது வருஷத்துக்கு முன்னால் ஒரு நாள் டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன் என்னைக் கூப்பிட்டு அனுப்பினார்.

"இதோ பார்!...." என்றார்.

பார்த்தேன்.

"நீ கெட்டிக்காரப் பையன்" என்றார். இவருக்கு எப்படித் தெரிந்தது என்று அதிசயித்தேன்.

"நீ முன்னுக்கு வரவேண்டியவன்".... என்றார். முன்னால் போவதற்கு இடம் இல்லாதபடியால் நின்ற இடத்திலேயே நின்றேன்.

"உனக்கு ஒரு கடிதாசி தருகிறேன்" என்றார்.

யாருக்கு? எதற்கு?— என்று சிந்தனை செய்தேன்.

"திரு. வி. கல்யாணசுந்தர முதலியாருக்குக் கடிதம் தருகிறேன். அதை எடுத்துக் கொண்டு போய் அவரைப் பார். மெதுவாக 'நவசக்தி' பத்திரிகையில் சேர்ந்து கொள். பத்திரிகைத் தொழிலில் முன்னுக்கு வருவாய்" என்றார்.

எனக்கு மூர்ச்சை போட்டு விடும்போலிருந்தது. எனினும் சமாளித்து நின்று கடிதத்தை வாங்கிக் கொண்டேன்.

ஆனால், கடிதத்துடன் உடனே போய்த் திரு. வி. க. வைப் பார்க்கவில்லை. ஏனெனில், அது வீண் வேலை— நடக்காத காரியம்—

என்று தோன்றியது. தமிழ்ப் பேரறிஞர் திரு. வி. க. வின் பத்திரிகையிலாவது, நாம் சேருவ தாவது?

❖ ❖ ❖

ஸ்ரீ திரு. வி. கலியாண சுந்தரனாரின் இரண்டாவது பத்திரிகை "நவசக்தி"; அவர் நடத்திய முதல் பத்திரிகை "தேச பக்தன்."

"தேச பக்தன்" தினசரிப் பத்திரிகை. இரண்டரை வருஷ காலந்தான் நடந்தது. ஆனாலும் தற்காலத் தமிழ்நாட்டின் சரித்திரப் பெருமையில் அதற்கு ஒரு முக்கியமான பங்கு உண்டு.

டாக்டர் பெஸண்டு அம்மையாரின் 'ஹோம் ரூல்' இயக்கம் தீவிரமாக நடந்த காலத்தில் "தேசபக்தன்" தோன்றியது. திரு. வி. கலியாண சுந்தரனார் அதன் ஆசிரியர் ஆனார்.

வெஸ்லி கலாசாலைத் தமிழ்ப் பண்டிதர் அந்த வேலையை விட்டு விட்டுத் "தேச பக்தன்" பத்திரிகாசிரியர் ஆனார் என்று அறிந்தபோது தமிழ் நாட்டார் அடைந்த வியப்புக்கு அளவே இல்லை.

"தமிழ்ப் பண்டிதர்" என்றால் அப்போதெல்லாம் "கமலாம்பாள் சரித்திர"த்தில் வரும் அம்மையப்ப பிள்ளைதான் கண்

ணெதிரே நிற்பார். படித்த சமூகத்துக்குள்ளே ஒடுக்கப்பட்டவர்களும், தாழ்த்தப்பட்டவர்களும், தீண்டப் படாதவர்களும், பார்க்கப்படாதவர்களும் தமிழ்ப்பண்டிதர்கள்.

அப்பேர்ப்பட்ட தமிழ்ப் பண்டிதர்களில் ஒருவர் ஓர் அரசியல் தினசரிப் பத்திரிகைக்கு ஆசிரியராக வந்திருக்கிறார் என்றால், ஒரே வியப்பும் திகைப்பும் உண்டாவது இயல்பேயல்லவா?

பின்னர் "தேசபக்தன்" இதழ்களைப் பார்க்கப் பார்க்க, "என்ன துணிச்சல்! என்ன ஆர்வம்! எத்தகைய அரசியல் நுட்பம்? எவ்வளவு தீவிர தேசபக்தி! என்ன தமிழ்!" என்று தமிழ் நாடே வியந்து கொண்டிருந்தது.

எல்லாவற்றிலும் அதிக வியப்பு "என்ன தமிழ்!" என்பதற்காகத்தான்.

அது வரையில் தமிழ் நாட்டில் தனியாட்சி நடத்திக் கொண்டிருந்த, ஒரே தினசரிப் பத்திரிகை "சுதேசமித்திரன்" ஆகும். அதில் வந்த தலையங்கங்கள் ஏறக்குறையப் பின்வரும் முறையில் அமைந்திருக்கும்:—

"பெங்கால் புரொவின்ஷியல் கான்பரன்ஸில் மிஸ்டர் அம்பிகா சரண்மஜூம்தாரின் பிரஸிடென்ஷியல் அட்ரெஸில் இந்தியப் பிரஜைகளின் தேசீய அபிலாஷைகளை அடக்க இங்

திய புயுராக்ரஸி கையாண்டுவரும் ரிப்ரஷன் முறைகளின் உபயோகமற்ற தன்மையைப் பற்றிக் கரதலா மலகமாய்க் கூறி யிருப்பது ஹிஸ் எக்ஸெலென்ஸி வைஸ்ராய் அவர்களின் கவனத்துக்குக் கொண்டு வரப் படுமென்று நம்புகிறோம்.''

(இது பழைய ''சுதேச மித்திரன்'' பத்திரிகையிலிருந்து எடுக்கப்பட்டதன்று; சு. மி. யின் அக்காலத்திய நடையை எடுத்துக்காட்டுவதற்கான சொந்தக் கற்பனை.)

இதே விஷயத்தைத் ''தேசபக்தன்'' பத்திரிகை எழுதி இருக்கக்கூடிய முறை பின் வருமாறு:—

''வங்கத் தாயின் புதல்வர்கள் அண்மையில் மாகாண மகாநாடு கூடினார்கள். திரு அம்பிகா சரண்மஜூம்தார் என்னும் வங்க வீரர் தலைமை தாங்கி அரியதொரு சொற்பொழிவு ஆற்றினார். அச் சொற்பொழிவில் இந்திய அதிகார வர்க்கத்தார் இந்தியக் குடி மக்களின் விடுதலை வேட்கையைத் தகைவதற்குக் கையாளும் அடக்குமுறைகளைக் கடிந்தார். அம் முறைகள் பயனற்றன என்பதை உள்ளங்கை நெல்லிக் கனி போல் தெற்றென எடுத்துக் காட்டி யுள்ளார். இச் செவ்விய உரைகள் மேன்மை தங்கிய இந்திய இராஜப் பிரதிநிதியின் திருச் செவியில் ஏறுங்கொல்!''

அரசியல் விஷயங்களைப் பற்றித் தமிழிலே பேச முடியாது—எழுத முடியாது—என்று

கருதப்பட்டு வந்த அந்தக் காலத்தில் மிகவும் சிக்கலான அரசியல் விஷயங்களெல்லாம் தேச பக்தனில் தூய தமிழில் எழுதப்பட்டு வந்தன; உணர்ச்சியோடும் ஆர்வத்தோடும் எழுதப்பட்டு வந்தன. — தமிழ்நாடு திகைப்பும் வியப்பும் அடைந்ததில் ஆச்சரியம் என்ன ?

1918 - 1919ல் தீவிர தேச பக்தி கொண்ட ஒரு கூட்டத்தார் தமிழ் நாட்டில் அரசியல் உலகில் பிரவேசம் செய்தனர். காங்கிரஸ் ஸ்தாபனத்தைக் கைப்பற்றி, அதன் மூலம் தமிழ்நாட்டைத் தேசீய இயக்கத்தின் முன்னணியில் கொண்டு வந்து நிறுத்த அவர்கள் திட்டம் போட்டுக் கொண்டு வேலை செய்யத் தொடங்கினார்கள். பூரண தேச பக்தர்கள் ஆனபடியால், அவர்களுக்குத் தாய்மொழிப் பற்றும் இருந்தது. ஆனால் அதுவரையில் அரசியல் காரியங்கள் எல்லாம் ஆங்கில பாஷையிலேயே நடந்து வந்தபடியால் தமிழை முன்னணிக்குக் கொண்டு வருவது சுலபமான காரியமாயில்லை. தமிழில் சிலர் பேசவும், எழுதவும் அப்போது ஆரம்பித்திருந்த போதிலும், கொச்சைத் தமிழில் ஏதோ காமா, சோமாவென்று காரியத்தை ஒப்பேற்றுவதாகவே கருதப்பட்டு வந்தது.

ஸ்ரீ திரு. வி. கலியாணசுந்தர முதலியார் தமிழ் நாட்டு அரசியலில் பிரவேசித்த பிறகு

தான், தமிழ் மொழி சுயமதிப்புடன் தலை நிமிர்ந்து நிற்கத் தொடங்கியது.

"தேச பக்தன்" பத்திரிகையில் தூய செந்தமிழ் நடையில் அவர் எழுதியதோடில்லை; பத்திரிகையில் எழுதுவது போலவே, பொதுக் கூட்டங்களிலும் பேசினர். அவருடைய சொற்பொழிவைச் சுருக்கெழுத்தில் எடுத்துப் பார்த்தால், "தேச பக்தன்" தலையங்கம் மாதிரியே யிருக்கும். சொல்லமைப்பு, வாக்கிய அமைப்பு எல்லாம் அப்படியே அச்சாக இருக்கும். அந்தந்த இடத்தில் கால் புள்ளி, அரைப் புள்ளி, முற்றுப் புள்ளி, வியப்புக் குறி, கேள்விக் குறி — இவைகளைப் போட்டு விட்டால் போதும்.

இதனாலெல்லாம் தமிழ்நாட்டின் அரசியல் தலைவர்கள் — தொண்டர்கள் — அனைவருக்கும் ஸ்ரீ திரு. வி. கலியாண சுந்தர முதலியாரிடம் வேறு யாரிடமும் இல்லாத ஒரு தனி மதிப்பு ஏற்பட்டிருந்தது. காங்கிரஸ் காரியங்களில் பாஷை சம்பந்தமாக எந்தப் பிரச்னை வந்தாலும் "திரு. வி. க. வைக் கேளுங்கள்!" என்று சொல்வது வழக்கமா யிருந்தது.

தமிழ்நாட்டின் பிரபல காங்கிரஸ் தலைவர்கள் எல்லாரும் திரு. வி. க. விடம் வைத்திருந்த

நன்மதிப்பை நான் அறிந்திருந்தேன். நானே "தேச பக்தன்" "நவ சக்தி" பத்திரிகை களைப் படித்து அவரிடம் பயபக்தி கொண்டிருந்தேன். ஆனால் என்னுடைய பக்தியானது தூரத்திலேயே—துவஜ ஸ்தம்பத்தினடியிலேயே—நின்று செலுத்தக்கூடிய பக்தியாயிருந்தது. அருகில் செல்வதற் குரியவனாகவே என்னை நான் கருதவில்லை.

ஆகையினாலேதான், டாக்டர் ராஜனுடைய கடிதத்தை உடனே நான் பயன்படுத்தவில்லை. "நவ சக்தி" ஆசிரியர் எங்கே? நாம் எங்கே? அவருடைய தூய செந்தமிழ் நடை எங்கே? நம்முடைய சாமான்யத் தமிழ் எங்கே?—என்று எண்ணிச் சும்மா இருந்து விட்டேன்.

நான் சும்மா இருந்தாலும் விதி சும்மா இருக்கவில்லை. ஏதோ ஒரு மகா நாட்டுக்காகவோ, கமிட்டிக் கூட்டத்துக்காகவோ, திரு. வி. க. திருச்சிக்கு வந்தார். அச்சமயம் அவர் என்னை அழைத்து, "உன்னைப்பற்றி டாக்டர் ராஜன் சொன்னார்" என்றார். "ஆமாம், கடிதம் கூடக் கொடுத்திருக்கிறார்" என்றேன். "இது வரையில் ஏதாவது தமிழில் எழுதியிருக்கிறாயா?" என்று கேட்டார். சில அச்சிட்ட துண்டுப் பிரசுரங்களைக் கொண்டு வந்து கொடுத்தேன். அவற்றில், மகாத்மா காந்தி கட்டுரை ஒன்றின் மொழி பெயர்ப்பைப் படித்துவிட்டு, "தமிழ் நடை பிழையில்லாமல்

இருக்கிறது'' என்றார். பிறகு "சென்னைக்குப் போய்க் கடிதம் எழுதுகிறேன்'' என்று சொல்லிவிட்டுச் சென்றார்.

பிழையில்லாமல் தமிழ் எழுதுவதாகச் சொன்னதை ஒரு பாராட்டுதலாக நான் கருதவில்லை. பின்னால் தான், திரு. வி. க. விடம் அந்தப் பாராட்டுதலைப் பெறுவது எவ்வளவு பெரிய காரியம் என்பதை அறிந்தேன். அப்போது, அவரிடமிருந்து கடிதம் வரும் என்பதாக நான் எதிர்பார்க்கவேயில்லை.

திடீரென்று ஒரு நாள் மாகாண காங்கிரஸ் காரியதரிசி ஸ்ரீ எஸ். ராமநாதனுக்கு ஒரு தபால் கார்டு வந்தது. அதில்,

" திரு ரா. கி........யாண்டுள்ளார்? அவருக்கு 'நவசக்தி'யில் தொண்டாற்ற விருப்பமிருப்பின், இதுபோழ்து இவண் வரலாம்.'' என்று ஸ்ரீ திரு வி. க. எழுதியிருந்தார்.

இரண்டே வாக்கியங்கள் கொண்ட இந்தக் கடிதம் எனக்கு எவ்வளவு பெருமையையும் குதூகலத்தையும் அளித்தது என்பதை இப்போது விவரிக்க முடியாது.

ஸ்ரீ திரு வி. கலியாணசுந்தர முதலியார் 1921 - ம் ஆண்டில் "தேசபக்தன்'' பத்திரி

கையிலிருந்து நீங்கினர். பிறகு "நவசக்தி" என்னும் வாரப் பத்திரிகையைச் சொந்தமாகவே ஆரம்பித்து நடத்தி வந்தார். 1923-ம் ஆண்டில், ஒத்துழையாமைக் கட்சியின் பிரசாரத்துக்காக "நவசக்தி" வாரம் மும்முறையாக மாறியது. இந்த வாரம் மும்முறை "நவசக்தி"யில் தொண்டாற்றுவதற்குத் தான் நான் சென்றேன். எட்டு மாத காலம் "நவசக்தி" வாரம் மும்முறையாக நடந்தது. பிறகு, பழையபடி வாரப்பத்திரிகையாக மாறியது. ஏறக்குறைய நாலு ஆண்டுகள் "நவசக்தி"யில் தொண்டாற்றினேன். அப்போது ஸ்ரீ திரு வி. க. அவர்களிடம் நெருங்கிப் பழகும் பேறு எனக்குக் கிடைத்தது. அவருடைய தூய இலட்சிய வாழ்க்கையைப் பற்றியும், அவருடைய சிறந்த குணங்களைப் பற்றியும் அறிந்து கொள்ள முடிந்தது.

ஒரு சமயம் திரு. வி. க. வை "ராயப்பேட்டை முனிவர்" என்று நான் குறிப்பிட்டிருந்தேன். அரசியல் உலகம், பத்திரிகை உலகம், தொழிலாளர் உலகம் — ஆகிய மூன்று சங்கடமான உலகங்களில் சஞ்சரித்தபோதிலும், அவருடைய சொந்த வாழ்க்கை முனி புங்கவரின் உத்தம வாழ்க்கையாகவே இருந்தது.

அவருடைய தோற்றம் தூய்மையே உருக் கொண்டதுபோல இருக்கும். வெண்மையான எளிய கதர் உடை அணிவார். சநாதன

ஹிந்து தர்மத்தில் அவருடைய ஆழ்ந்த பற்றுக்கு அறிகுறியாக அவருடைய உச்சிக்குடுமி விளங்கும். அவர் எவ்வளவு புரட்சிகரமான சீர்திருத்தக் கருத்துகளை வெளியிட்டபோதிலும், அவற்றிற்கெல்லாம் மூலவேர் சநாதன ஹிந்து தர்மத்திலே தான் நிலைபெற்றிருக்கும்.

ஸ்ரீ திரு. வி. க. சைவ சித்தாந்தத்தில் பிறந்து, சைவ சித்தாந்தத்தில் வளர்ந்து, சைவ சித்தாந்திகளின் கூட்டத்திலேயே பெரும்பாலும் காலங் கழித்தவர். ஆனால் அவருடைய உண்மையான மதம் சர்வ மத சமரசந்தான். வைஷ்ணவம், ஜைனம், பௌத்தம், கிறிஸ்துவம், இஸ்லாம், "கடவுள் என்னத்திற்கு?" என்று கேட்கும் மதம் — ஆகிய இத்தனை மதக் கோட்பாடுகளும் அவருக்கு உடன்பாடானவையே. இவ்வளவு மதங்களைப் பற்றியும் படித்து, ஆராய்ந்து, உண்மை கண்டவர்.

"நவ சக்தி" பத்திரிகையில் எனக்கு ஏற்பட்டிருந்த வேலைகளில் ஒன்று, காந்திஜியின் கட்டுரைகளை மொழி பெயர்த்தல். பொதுவாக, என்னுடைய மொழி பெயர்ப்பு திரு. வி. க. வுக்கு மிகவும் பிடித்திருக்கும். ஒரு முறை மகாத்மா தமது கட்டுரையொன்றில், பரம் பொருளைக் குறிப்பிடும் இடத்தில் "லார்ட் சிவா" என்று எழுதியிருந்தார். தமிழ் மொழி பெயர்ப்பில் நான் 'சிவ பெருமான்' என்று

நியாயமாகப் போட்டிருக்கவேண்டும். எதனுலோ — காரணம் எனக்கே தெரியவில்லை — "இறைவன்" என்று எழுதிவிட்டேன். ஆங்கிலத்தில் கட்டுரையைப் படித்துத் தமிழ் மொழி பெயர்ப்பையும் படித்த திரு. வி. க. வுக்கு என்பேரில் சந்தேகம் உண்டாகிவிட்டது.

அந்தரங்கமாக என்னை அழைத்து என்னுடைய மதக் கோட்பாடுகளைப் பற்றிக் கேட்க ஆரம்பித்தார். "உனக்கு எந்த மதத்தில் அதிகப்பற்று?" என்ருர். "ஒரு மதத்திலும் எனக்குப்பற்றுக் கிடையாது. மதங்களைப் பற்றிய உண்மையை இன்னும் நான் நன்கறியவில்லை" என்றேன். "எந்த மதத்தின் பேரிலாவது கோபம் உண்டா?" என்று கேட்டார். இல்லவே இல்லை; மதம் என்னை என்ன செய்தது?" என்றேன். "ஒரு வேளை சிவனை உனக்கு பிடிக்காதோ?" என்று கேட்டார். "சிவனை எனக்கு ரொம்பப் பிடிக்கும். அவருடைய நெற்றிக் கண்ணை மட்டுந்தான் அவ்வளவாகப் பிடிக்காது. இதெல்லாம் எதற்காகக் கேட்கிறீர்கள்?" என்றேன். அவர் விவரம் சொன்ன பிறகு, "சிவன் என்பதற்குப் பதிலாக 'இறைவன்' என்று போட்டதினுல் சிவனைத் தூக்கித் தானே வைத்திருக்கிறேன்! சிவன் தான் இறைவன் என்று ஏற்படுகிறதல்லவா?" என்று சொல்லிச் சமாளித்துக்கொண்டேன்.

திரு. வி. க. வுக்கு உண்மையில் மத வேற்றுமை உணர்ச்சியே கிடையாது. எனக்கு ஒருவேளை அந்தமாதிரி பைத்தியக்கார வேற்றுமை உணர்ச்சிகள் இருக்குமோ என்று சந்தேகித்துத்தான் மேற்கண்டவாறு குறுக்கு விசாரணை செய்தார். அம்மாதிரி ஒன்றும் இல்லை என்று அறிந்ததும் பெரிதுப் திருப்தி யடைந்தார்.

திரு. வி. க. வுக்கு அரசியலைக் காட்டிலும் அதிக ஆர்வத்தை ஊட்டிய இரண்டு இலட்சியங்கள் இயற்கை வாழ்வும், பெண்ணின் பெருமையும். "பழந் தமிழர்கள் இயற்கையோடியைந்த வாழ்வு நடத்தினார்கள்; பெண்களைப் போற்றினார்கள். இக்காலத் தமிழர்கள் பழம் பெருமையை அடைய வேண்டுமானால் அந்த இயற்கை வாழ்வுக்குத் திரும்பவேண்டும்; பெண் குலத்தைப் போற்ற வேண்டும்" என்பது அவருடைய ஆழ்ந்த நம்பிக்கை. காந்தியடிகள் மீது திரு. வி. க. வுக்கு உள்ள அபார பக்திக்கு ஒரு முக்கிய காரணம், மகாத்மா இயற்கையோடியைந்த வாழ்வை ஆதரிப்பதே யாகும்.

"பெண் தெய்வங்கள்" என்ற சொற்றொடரை முதன் முதலில் திரு. வி. க. தான் உபயோகப் படுத்தினார் என்று நினைக்கிறேன்.

தமிழ்நாட்டிலுள்ள அத்தனை பெண்களையும் திரு. வி. க. அத்தனை தெய்வங்களாகவே கண்டார்.

திரு. வி. க. வின் 'பெண் தெய்வங்கள்' சம்பந்தமாக யாராவது பரிகாசம் செய்தாலும் அவர் அதைப் பொருட்படுத்துவதில்லை. அவர்களுடைய பரிகாசத்துக்கு எதிராக, "எனக்குப் பெண்ணியற்கை உண்டு; என் உள்ளம் பெண் உள்ளம்" என்று அடிக்கடி கூறுவார். இம்மாதிரியே, அவரைப் பற்றிச் சிலர் "முதலியாரா? பரம சாது!" என்று சொல்லுவதுண்டு. இதை முன்னிட்டே அவர் புதிதாக அச்சுக்கூடம் தொடங்கிய போது, "சாது அச்சுக்கூடம்" என்று பெயரிட்டார்.

திரு. வி. க. விடம் உண்மையாகவே பெண் தன்மை உண்டு. பெண் தன்மை யென்றால், பெண்களுக்கு இயற்கையாக உரியதென்று கருதப்படும் இனிய சுபாவந்தான். "நவசக்தி" யில் நான் ஏறக்குறைய நாலு வருஷம் வேலை பார்த்தேன். இந்த நாலு வருஷத்தில் திரு. வி. க. ஒரு தடவையாவது ஒரு வார்த்தை யாவது கடிந்து பேசியதில்லை. முகத்தைச் சிணுக்கியது கூடக் கிடையாது. மேலே கூறிய "சிவபெருமான்" சம்பவத்தைப் பற்றி என்னைக் குறுக்கு விசாரணை செய்ததைத் தவிர, எனக்கும் அவருக்கும் ஒருவிதமான தகராறும் ஏற்பட்டதில்லை.

சமீபத்தில் ஒரு நாள் சாது அச்சுக்கூடத் துக்கு நான் போயிருந்தேன். இருபது வருஷத்துக்கு முன்னால் அங்கே பணியாற்றிய அச்சுக் கோக்கும் தொழிலாளிகளும், பைண்டு வேலை செய்பவர்களும் இன்னும் அங்கே இருந்து வருவதைக் கண்டேன். அவர்கள் முன் போலவே சந்தோஷமாகவும் 'சின்ன முதலியா'ரிடம் (பெரிய முதலியார், திரு. வி. க. வின் தமயனாரான திரு. வி. உலக நாத முதலியாரவர்கள்; சாது அச்சுக்கூடத்து நிர்வாகத் தலைவர்) அளவற்ற அன்புள்ளவர்க ளாகவும் இருப்பதைப் பார்க்க மிகவும் மகிழ்ச்சி யுண்டாயிற்று. திரு. வி. க. வின் இனிய சுபாவத்தின் பெருமைக்கு அவர்க ளுடைய சந்தோஷமான முகங்களே அத் தாட்சியா யிருந்தன.

சாது அச்சுக்கூடத் தொழிலாளிகள் மட்டுந் தானா? சென்னைத் தொழிலாளர் சங்கத் தைச் சேர்ந்த பதினாயிரக் கணக்கான தொழி லாளிகளும் திரு. வி. க. வைத் தங்களுடைய உற்ற நண்பராகவே இன்று வரையில் கருதி வருகிறார்கள். சென்னைத் தொழிலாளர் சங்கம் இன்றைக்கு இருபத்தைந்து ஆண்டு களுக்கு முன்னால் ஆரம்பிக்கப்பட்டது. இந்தி யாவிலேயே முதன் முதலில் அமைக்கப்பட்ட தொழிலாளர் சங்கம் இதுதான் என்று சொல்வார்கள். இதன் அமைப்பில் பங்கு

பெற்றவர்களில் முக்கியமான ஒருவர் திரு. வி. க. ஆரம்ப நாட்களில் சென்னைத் தொழிலாளர் சங்கத்திற்கு எத்தனை யெத்தனையோ ஆபத்துகள் நேர்ந்தன. அந்த ஆபத்துக் காலத்தில் எல்லாம் அளவிலாத தைரியத்துடன் எதிரிகளுக்கு முன்னால் திறந்த மார்புடன் நின்றவர் திரு. வி. க. முதலியார். ஒரு தடவை ஒரு பெரும் தொழிலாளர் கூட்டத்தில் போலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்து, நாலைந்து பேர் மாண்டார்கள். மாண்ட தொழிலாளிகளின் பிரேத ஊர்வலத்துக்குப் பத்தாயிரக் கணக்கில் தொழிலாளர்கள் கூடினார்கள். ஊர்வலத்தைப் போலீஸார் தடுத்தார்கள்.

இந்த விபரீத சம்பவங்களின் போதெல்லாம் போர் முனையில் முன்னணியில் நின்று திரு. வி. க. தொழிலாளர்களுக்குத் துணை புரிந்தார். எந்த நிமிஷத்திலும் தமது மார்பில் துப்பாக்கிக் குண்டு பாயக் கூடும் என்ற நிலையில் அவர் அஞ்சா நெஞ்சுடன் தொழிலாளருக்குத் தொண்டு செய்தார். இதையெல்லாம் சென்னைத் தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த தொழிலாளிகள் மறக்கவேயில்லை. அன்று போலவே இன்றும் தொழிலாளர்கள் தங்கள் திரு. வி. க. வை அன்புடன் போற்றி வருகிறார்கள்.

"நவசக்தி" யில் நான் தொண்டாற்றிய காலத்

தில் சில சமயம் சூளையில் நடந்த தொழிலாளர் கூட்டங்களுக்குச் சென்றிருக்கிறேன். தொழிலாளர் கூட்டந்தானே என்பதற்காகத் திரு. வி. க. தமது பிரசங்கத்தின் நடையை மாற்றிக் கொள்வதில்லை. வழக்கம் போலவே தான் சொற்பொழிவு ஆற்றுவார். அவர் கூறுவதெல்லாம் தொழிலாளர் சகோதரர்களுக்கு விளங்குமா என்று எனக்குச் சில சமயம் சந்தேகம் உண்டாகும். ஆனால், அவர்களுடைய முகங்கள் மட்டும் மலர்ந்துதானிருக்கும். திரு. வி. க. வின் வாயிலிருந்து வரும் சொற்களைக் காட்டிலும், அவருடைய உள்ளத்திலிருந்து பொங்கும் அன்பே அவர்களுடைய முகங்களை அவ்விதம் மலரச் செய்கின்றது என்று எனக்குத் தோன்றும். திரு. வி. க. கடல்மடை திறந்தது போல் பொழிந்த அரிய கருத்துக்களை அவர்கள் உணர்ந்தார்களோ, இல்லையோ, "இதோ நமது அருமைத் தோழர் ஒருவர் பேசுகிறார்!" என்பதை மட்டும் அவர்கள் பரிபூரணமாக உணர்ந்திருந்தார்கள்.

சென்னைத் தொழிலாளர் சங்கத்துடன் திரு. வி. க. வின் தொடர்பு இன்றுவரையில் நிலை பெற்றிருக்கிறது என்பதை அறிந்தபோது எனக்கு வியப்பே உண்டாகவில்லை. திரு. வி. க. வைப் போல் சிநேக தர்மத்தை நன்கு உணர்ந்த தோழர், தொழிலாளர்களுக்கு எங்கே கிடைக்கப் போகிறார்கள்?

"நவசக்தியிலிருந்து நான் விலகிய சம்பவத்தைக் கூறி இக்கக் கட்டுரையை முடிக்க விரும்புகிறேன். ஏனெனில், ஸ்ரீ கலியாண சுந்தர முதலியாருடன் நான் நாலு ஆண்டு பழகிய போது அவர் குணாதிசயங்களை நான் அறிந்ததைக் காட்டிலும், அவரைப் பிரியும் தறுவாயிலே மிக நன்ருக அறிந்துகொள்ள முடிந்தது.

நான் விலகிக்கொள்ள விரும்புவதாகத் திரு. வி. க. விடம் தெரிவித்தபோது அவரால் அதை நம்ப முடியவே இல்லை. வியப்பும் வருத்தமும்கூட அடைந்தார். விலகிக்கொள்ள விரும்புவதற்குக் காரணம் கேட்டதுடன், "இங்கு ஏதாவது குறை உண்டா?" என்றும் விசாரித்தார்.

உண்மை யென்னவென்ருல், "நவசக்தி" காரியாலயத்தில் எனக்கு ஒரு குறையும் இருக்கவில்லை. எந்தப் பத்திரிகாலயத்திலும் ஓர் உதவி ஆசிரியருக்கு அவ்வளவு உரிமையும் மரியாதையும் அளிக்க மாட்டார்கள் என்பதை நன்கு அறிந்திருந்தேன். "நவசக்தி"யில் நான் செய்த தொண்டு எனக்கே அவ்வளவு திருப்தி யளிக்காததுதான் நான் விலகிக் கொள்ள விரும்பியதற்குக் காரணம். பெரும்பாலும் மொழி பெயர்ப்பு வேலைதான் "நவசக்தி"யில் நான் செய்ய நேர்ந்தது. திரு. வி. க. வின் தமிழ் நடையை என்ருல் கையாள

முடியவில்லை. என்னுடைய நடையில் நான் சொந்தமாக எழுத முயன்ற விஷயங்கள் "நவசக்தி" க்குப் பொருத்தமாக அமைய வில்லை. இதனால் என் மனம் அமைதியை இழந்து விட்டது. வேலையில் ஊக்கம் இல்லா மல் போய் விட்டது. அதன் பிறகு "நவசக்தி" யில் இருப்பது திரு. வி. க. வின் அன்பைத் தவருக உபயோகப் படுத்திக் கொள்வதாகும் என்று கருதினேன்.

இதையெல்லாம் இவ்வளவு பட்டவர்த்தனமாக அப்போது திரு. வி. க. விடம் சொல்லவும் முடியவில்லை. "என்னமோ, மனம் அமைதி யிழந்திருக்கிறது. ஆகையினல்தான் விலக விரும்புகிறேன். வேறு ஒரு குறையும் கிடை யாது" என்று வற்புறுத்திக் கூறினேன்.

சில தினங்கள் இவ்விதம் விவாதம் நடந்த பிறகு, கடைசியாக ஒரு நாள் திரு. வி. க. கூறினர்:—

"இதோ பார்! உன்னைப் போகச் சொல்ல எனக்கு விருப்பமில்லை. நீயோ பிடிவாதம் பிடிக்கிருய். உன்னைப்போல் சிலர் அவசரப் பட்டு ஒரு காரியம் செய்து விட்டுப் பிறகு வருத்தப்படுவதும் உண்டு. அதற்கு இடமில் லாமல் செய்து கொள்வோம். உன்னுடைய ஸ்தானத்தை இன்னும் ஆறு மாதத்திற்குக் காலியாக வைத்திருக்கிறேன். இந்த ஆறு

மாதத்திற்குள் நீ எப்போது வேண்டுமானாலும் திரும்ப வந்து சேர்ந்து கொள்ளலாம். ஆறு மாதத்திற்குப் பிறகு உன்னைக் கேட்டுவிட்டு அப்புறம் வேறொருவரை நியமித்துக் கொள் கிறேன்.''

திரு. வி. க. வின் இந்தப் பேரன்பும் பெருந் தன்மையும் என்னைப் பேச்சு மூச்சில்லாமல் அடித்துவிட்டன. உள்ளம் உருகிக் கண்ணீ ரும் துளித்து விட்டது. ஒரு கணம், ''நான் போகவே இல்லை'' என்று சொல்லி விடலா மென்று தோன்றியது. பிறகு, ''பார்த்துக் கொள்ளலாம்: ஆறுமாதத் தவணைதான் கொடுத்திருக்கிறாரே?'' என்று தீர்மானித் தேன். அவருக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து விடை பெற்றுக் கொண்டேன்.

திரு. வி. க. வின் பெருந்தன்மை அச் சமயமே எனக்குப் பெரிதாகத்தான் தோன்றியது. ஆனால் பதினைந்து வருஷத்துக்குப் பிறகு, பல அனுபவங்களுக்குப் பின்னர் இப்போது எண் ணிப் பார்க்கும்போது, அவருடைய பெருந் தன்மை அப்போதைக் காட்டிலும் நூறு பங்கு மகிமை வாய்ந்ததாய்க் காணப்படுகிறது.

திரு. வி. க. வைப் பற்றிய என்னுடைய அனு பவங்களை யெல்லாம் ஞாபகப்படுத்திப் பார்த்

துக் கொண்டு, "அவர் எப்பேர்ப்பட்ட மனிதர்?" என்று சிந்தனை செய்தேன். அவருடைய குணாதிசயங்களுக்குள்ளே என் ஞாபகத்தில் மேலோங்கி நிற்பது, "அவர் எவ்வளவு நல்லவர்!" என்பதே யாகும். இந்த உலகத்தில் ஒரு மனிதன் பெறக்கூடிய பேறு இதைக் காட்டிலும் வேறு என்ன இருக்கிறது?

# தீரர் சத்தியமூர்த்தி

சத்தியமூர்த்திக்காக இரண்டு பக்கம் இருக்கிறது. கட்டுரையை அதற்குள் எழுதிக் கொடுங்கள் என்று துணையாசிரியர் சொன்னதைக் கேட்டதும், நான் அசந்துபோய் உட்கார்ந்துவிட்டேன். ஒன்றும் எழுதுவதற்கே ஓடவில்லை. இரண்டு பக்கம் எங்கே? இருபத்தைந்து வருஷத்து இடைவிடாத தேசத்தொண்டு எங்கே?

இதை நினைக்கும்போது, ஸ்ரீ சத்தியமூர்த்தி காலமாவதற்கு இதைவிட யுக்தமில்லாத காலத்தைத் தேர்ந்தெடுத்திருக்க முடியாது என்று தோன்றுகிறது.

ஸ்ரீ கஸ்தூரி ரங்கய்யங்கார், ஸ்ரீ ஏ. ரங்கசாமி அய்யங்கார் முதலியவர்கள் காலமானபோது நமது தினசரிப் பத்திரிகைகள் செய்த அமர்க் களம் ஞாபகம்வருகிறது. பக்கம்பக்கமாகவும் பத்தி பத்தியாகவும் ஒரு மாதம்வரையில் அவர் களைப் பற்றி அநுதாபச் செய்திகளும், குண நிசய வர்ணனைகளும், கூட்ட நடவடிக்கை களும் வந்த வண்ண மிருந்தன. ஆனால் ஸ்ரீ சத்தியமூர்த்திக்கு மொத்தத்தில் மூன்ற ரைப்பத்திக்கு மேல் கிடைக்கவில்லை.

பத்திரிகைகளுக்குத்தான் காகிதப் பஞ்சம், இடப் பஞ்சம், சர்க்கார் கட்டுப்பாடு - எல்லாம். ஆனால், மனிதர்களுக்கு என்ன பஞ்சம் வந்தது ?—இதை நினைக்க நினைக்கத்தான் இந்த உலக வாழ்க்கையின் புகழ், கீர்த்தி, பாராட்டு, 'ஜே' கோஷம் எல்லாம் எவ்வளவு அநித்தியமானவை — நீர் மேல் குமிழி போன்றவை — என்பதை நான் நன்கு உணர்கிறேன்.

லோகமானிய திலகர், தேசபந்துதாஸ், டாக் டர் டாகூர் முதலியவர்களின் பிரேத ஊர்வலங்களைப் பற்றிக் கேட்டிருக்கிறோம். ஸ்மசானத்தில் மூன்று லட்சம், நாலு லட்சம் ஜனங்கள் கூடியிருந்தார்கள் என்று படித் திருக்கிறோம். அந்த மகத்தான ஜனத்திரள் களின் பகுதியைப் புகைப்படங்களிலும் பார்த்திருக்கிறோம்.

தமிழ்நாட்டின் சிறந்த தலைவர்களில் ஒருவரான ஸ்ரீ சத்தியமூர்த்திக்குக் கடைசி மரியாதை செய்ய ஸ்மசானத்தில் எத்தனை பேர் கூடியிருந்தார்கள்? ஐம்பது அறுபது பேர் இருக்கலாம்! அல்லது பொதுக் கூட்டங்களின் எண்ணிக்கையை அந்தந்தக் கட்சிக்காரர்கள் மதிப்பிடும் முறையில் மதிப்பிட்டாலும், நூறு பேருக்குமேல் இருக்காது! ஸ்ரீ சத்தியமூர்த்தி ஆவி வடிவில் அங்கே நின்று இந்தக் காட்சியை மட்டும் பார்த்திருந்தால் இருபதினாயிரம் முப்பதினாயிரம் ஜனங்கள் அடங்கிய பொதுக் கூட்டங்களில் தாம் கர்ஜனை செய்ததையும் இந்த நூறுபேரையும் ஒப்பிட்டுப் பார்த்துக் — கலகலவென்று சிரித்திருப்பார் என்பதில் சந்தேகமில்லை.

அந்த நூறு பேரடங்கிய கூட்டத்தில் பத்திரிகைகளில் பெயர் வரக்கூடிய பிரமுகர்கள் ஐந்தாறு பேர்தான் இருந்தார்கள். டாக்டர் சுப்பராயன், ஸ்ரீ வெங்கடசாமி நாயுடு, ஸ்ரீ சர்க்கரைச் செட்டியார், ஸ்ரீ ஜே. சிவஷண்முகம், அவ்வளவுதான். — இல்லை, இன்னும் ஒரு பிரமுகரும் இருந்தார். நகர சபைக் கமிஷனர் ஸ்ரீ புல்லா ரெட்டி ஐ. ஸி. எஸ். ஸையும் அங்கே பார்த்தேன். ஸ்ரீ சத்தியமூர்த்தி சென்னை மேயரா யிருந்தபோது அவருக்கும் ஸ்ரீ புல்லாரெட்டிக்கும் அவ்வளவு ஒத்துக் கொள்ளவில்லை என்பது அந்தக்

காலத்தில் பகிரங்க இரகசியமாயிருந்தது. ஆனாலும், ஸ்ரீ புல்லா ரெட்டியார் மாஜி மேயருக்குத் தமது மரியாதையைத் தெரிவித்துக் கொள்ள ஸ்மசானத்திற்கு வந்திருந்தார். ஆனால் ஸ்ரீ சத்தியமூர்த்தியின் பிரபல சிநேகிதர்கள் எல்லாரும் எங்கே? முக்கியமாக மயிலாப்பூர்ப் பெரிய மனுஷர்கள் ஒருவரையும் ஏன் காணவில்லை? லஸ்சர்ச் ரோட்டிலிருந்து-மோப்ரேஸ் ரோட்டிலிருந்து — லாயிட்ஸ் ரோட்டிலிருந்து — எட்வர்ட் எலியட் ரோட்டிலிருந்து — கச்சேரி ரோட்டிலிருந்து —வடக்கு தெற்கு கிழக்கு மேற்கு மாடவீதிகளிலிருந்து — ஏன் ஒருவரையும் அங்கே காணவில்லை? இத்தனைக்கும் அன்று ஞாயிற்றுக் கிழமை ஆயிற்றே? கோர்ட், ஆபீஸ் ஒன்றுமே கிடையாதே?

இந்திய சட்ட சபைத் தேர்தலில் ஸ்ரீ ஏ. ராமசாமி முதலியாரைத் தோற்கடித்து வெற்றி பெற்றபோதும், சென்னை மேயர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட போதும் ஸ்ரீ சத்தியமூர்த்திக்கு நடந்த உபசாரங்கள் எனக்கு ஞாபகம் இருக்கின்றன! எத்தனை டின்னர்கள்? எத்தனை டீ பார்ட்டிகள்? எவ்வளவு வாழ்த்துக் கூட்டங்கள்? உபசாரப் பத்திரங்கள்? — பூமாலைகளுக்குத்தான் அளவு சங்கை உண்டா? "சத்தியமூர்த்தி எங்கே?" என்று கேள்வி போட்டு, "பூமாலைக்குள் புதைந்து கிடக்கிறார்!" என்று பதில்

சொல்லி — விகடம் செய்யும்படியாக வெல்லாம் இருந்தது. அதற்கும் இதற்கும் எவ்வளவு வித்தியாசம்?

நான் நினைக்கிறேன்: ஸ்ரீ சத்தியமூர்த்தியின் மனோ நிலை அந்திய காலத்தில் ரொம்பவும் மாறியிருக்கவேண்டும். புகழும் பூமாலையும் ஜே கோஷமும் எவ்வளவு அர்த்தமற்றவை என்பதை அவர் உணர்ந்திருக்கவேண்டும். உணர்ந்து, அமைதியான ஆடம்பர மற்ற அந்தியக் கிரியைகளை அவர் விரும்பியிருக்க வேண்டும். பகவான் அவருடைய கடைசி மனோ ரதத்தை இவ்விதம் நிறைவேற்றி வைத்தார் போலும்!

ஸ்ரீ சத்தியமூர்த்தி அவ்விதம் விரும்பியிருந்தால் அதில் நம்பத் தகாதது ஒன்றுமிராது. ஏனெனில், அவருடைய இருபத்தைந்து வருஷத்து அரசியல் வாழ்க்கையில் அமைதி என்பதே அணுவளவும் கிடையாது. ஒரே புயலும், மழையும், போர் முழக்கமும், வீர கர்ஜனையுந்தான்.

போர் என்றால், அதுவும் வாக்குப் போர் என்றால், ஸ்ரீ சத்தியமூர்த்தியின் உற்சாகத்தைச் சொல்லி முடியாது. அதிகமாக யோசனை

கூடச்செய்யாமல், போர்க்களத்தில் குதித்து விடுவார். குதித்துவிட்டால் அப்புறம் சண்டப் பிரசண்டந்தான்!

ஸ்ரீ சத்தியமூர்த்தி மிதவாதிகளுடன் போரிட்டிருக்கிறார். ஜஸ்டிஸ் கட்சியாருடன் பெரும் போர் நடத்தியிருக்கிறார். அதிகார வர்க்கத்துடன் இடைவிடாத கடும் போர் புரிந்து வந்திருக்கிறார். காங்கிரஸிற்குள்ளேயே தமக்குச் சரியென்று தோன்றிய வேலைத் திட்டங்களுக்காகத் தீவிரமாகச் சண்டை போட்டிருக்கிறார். மகாத்மாவுடனேயே போரிட்டிருக்கிறார்.

பிரம்மதேவன் பேனாவை விஷத்தில் ஒரு தடவையும் அமிர்தத்தில் ஒரு தடவையும் தோய்த்து எடுத்து ஸ்ரீ சத்தியமூர்த்தியின் நாவில் எழுதியிருக்கவேண்டும்! எதிராளிகளைத் தாக்கும் போது அவருடைய நாவிலிருந்து விஷந்தோய்ந்த சொல்லம்புகள் சரசரவென்று கிளம்பும்.

சில சமயம் ஒரே வார்த்தையினால் எதிராளிகளை மடக்கி உட்கார வைத்துவிடுவார். மறுபடியும் அவர்கள் தலை கிளம்ப முடியாதபடி அடித்துவிடுவார். இதற்கு ஒரு பிரசித்தமான உதாரணம் உண்டு. 1920-ம் ஆண்டில் திருநெல்வேலியில் நடந்த தமிழ் மாகாண மகாநாட்டில் இது நேர்ந்ததென்று ஞாபகம்.

ஸ்ரீ சத்தியமூர்த்தி பிரபலமாகி வந்தகாலத்தில் தமிழ்நாட்டில் ஸ்ரீ வி. எஸ். சீனிவாச சாஸ்திரியாரின் பெயர் ரொம்பவும் பிரபலமாயிருந்தது. சாஸ்திரியார் அரசியலில் மிதவாதி. அதாவது, பிரிட்டிஷ் சர்க்காருடன் ஒத்துழைத்து மனுச் செய்து அவர்களுடைய தயவைக்கொண்டு இந்தியா முன்னேற வேண்டுமென்று நம்பிய கூட்டத்தைச் சேர்ந்தவர். ஆனால் அந்தக் காலத்தில் இருந்த மிதவாதிகளின் செல்வாக்கு தேசத்திலும் காங்கிரஸிலும் இன்னும் குறைந்துவிடவில்லை.

"இங்கிலீஷ் பேச்சுக் கேட்கவேண்டுமென்றால் சீனிவாச சாஸ்திரியாரிடம் கேட்கவேண்டும். அவர் மாதிரி சுத்தமாகவும் மதுரமாகவும் இங்கிலீஷ் பேசக்கூடியவர்கள் இங்கிலாந்திலேயே இரண்டொருவர்தான் உண்டு" என்று அந்தக் காலத்தில் சொல்வார்கள்.

அதோடு, கோகலே சென்னைக்கு வந்து சீனிவாச சாஸ்திரியை அரசியல் தொண்டுக்கு அழைத்ததும், சாஸ்திரியார் தியாக வாழ்க்கையை மேற்கொண்டு கோகலேயின் 'இந்திய ஊழியர் சங்க'த்தில் சேர்ந்ததும், கோகலேக்குப் பிறகு சாஸ்திரியார் மேற்படி சங்கத்தின் தலைவரானதும் அப்போது புதிய சம்பவங்களாயிருந்தன.

அப்படிப்பட்ட நிலைமையில் சாஸ்திரியாரைத் தாக்கி அவருடைய செல்வாக்கைக் குறைக்க

வேண்டிய அவசியம் ஸ்ரீ சத்தியமூர்த்திக்கு ஏற்பட்டது.

ஒரே ஒரு வார்த்தையில் இந்தக் காரியத்தை அவர் செய்துவிட்டார்!

அப்படியொன்றும் ரொம்பக் கடுமையான வார்த்தையில்லை — அவலட்சணமான வசை மொழி இல்லை — நல்ல அழகான சம்ஸ்கிருத வார்த்தைதான்!

அவருடைய தனித்த கம்பீரமான குரலில் — தீர்க்கமான உச்சரிப்பில் — "ஸ்ரீமான் சீனிவாச சாஸ்திரி...." என்று சொல்லி ஒரு கணம் நிறுத்தினர். பிறகு இன்னும் தீர்க்கமாக "....மகானுபாவன்!" என்றூர். உடனே அந்தப் பெரிய சபையில் ஒரு கல கலப்பும் சிரிப்பும் கரகோஷமும் கலந்து கிளம்பின. அந்தச் சிரிப்பானது, ஸ்ரீ சீனிவாச சாஸ்திரியின் அரசியல் கொள்கையைப் பார்த்துத் தேசமே சிரித்தது போலிருந்தது.

பிறகு, சீனிவாச சாஸ்திரியின் பெயரைப் படித்த போதெல்லாம் — கேட்டபோதெல் லாம் — "மகானுபாவன்" என்று ஜனங்கள் உடன் சேர்த்துக் கொண்டார்கள். சாஸ்திரியார் எங்கேயாவது பேசுவதாயிருந்தால், பேச்சைக் கேட்க வருகிறவர்கள் "சீனிவாச சாஸ்திரி — மகானுபாவன்" என்று வாய்க்குள் முணுமுணுத்த வண்ண மிருந்தார்கள். ஸ்ரீ சீனிவாச சாஸ்திரியார் அதற்குப் பிறகு

எத்தனையோ துறைகளில் சிறப்புக்களை அடைந்து பொது மக்களின் அபிமானத்தையும் மரியாதையையும் பெற்றிருக்கிறார். ஆனால், அவருடைய அரசியல் வாழ்க்கை மட்டும் அந்த 'மகாநுபாவர்' பட்டம் கிடைத்ததோடு முடிந்து விட்டதென்றே கருதவேண்டும்.

நேற்று நடந்தது போல் எனக்கு ஞாபகம் இருக்கிறது. திருச்சி டவுன் ஹாலுக்கு எதிரில் பிரம்மாண்டமான கூட்டம் கூடியிருந்தது. (அப்போதெல்லாம் இரண்டாயிரம் பேர் கூடினாலே கூட்டம் 'பிரம்மாண்டந்'தான்!) பெரும்பாலும் மாணாக்கர்கள். அப்போதுதான் ஸ்ரீ சத்தியமூர்த்தி இங்கிலாந்துக்குக் காங்கிரஸ் தூதராய்ப் போய்விட்டுத் திரும்பி வந்திருக்கிறார். எனவே, அவருடைய தோற்றத்திலும் பேச்சிலும் ஒரு பெருமிதம் காணப்படுகிறது. இங்கிலாந்தில் தாம் செய்த பிரசங்கங்களைப் பற்றியும் தம்மைக் கேட்கக் கூடிய கூட்டங்களைப் பற்றியும் விவரித்து வருகிறார். நாங்கள் எல்லோரும் வாயில் யானை புகுந்தால்கூடத் தெரியாத நிலையில் அண்ணாந்து கேட்டுக் கொண்டிருக்கிறோம். அப்போதெல்லாம் பிரசங்கிகளை உற்சாகப் படுத்துவதற்குக் கரகோஷம் செய்யக்கூட நம்மவர்களுக்குத் தெரியாது.

ஸ்ரீ சத்தியமூர்த்தி சொல்கிறார்:—

“அயர்லாந்திலே ஒரு பொதுக்கூட்டத்திலே பேசினேன். இங்கே கூடியிருக்கும் கூட்டத்தை விடப் பெரிய கூட்டம். இந்தியாவின் சுதந்திரக் கோரிக்கையை ஆணித் தரமாக நான் எடுத்துச் சொல்லி வந்தேன். அப்போது கூட்டத்தின் ஒரு மூலையிலிருந்து ஒரு ஆங்கிலேயன் ‘இந்தியாவில் சமூகக் கலவரங்கள் நடப்பதில்லையா?’ என்று கேட்டான். உடனே, நான், ‘ஐயா! இந்தியாவில் சமூகக் கலவரங்கள் நடப்பதாகவே வைத்துக் கொள்வோம். ஆனால், ஆண்டவன் இங்கிலீஷ்காரனை உலகத்தின் ஸ்பெஷல் போலீஸ்காரனாக எப்போது நியமித்தார்?’ என்று கேட்டேன்....”

ஸ்ரீ சத்தியமூர்த்தி இவ்விதம் சொன்னதும் எங்களில் உற்சாகிகள் சிலர் கையைத் தட்டி ஆர்ப்பரித்தோம். பிரசங்கி அரை நிமிஷம் சும்மா இருந்துவிட்டுத் தொடர்ந்து பேசினார்:

“நான் சொன்ன பதிலைக் கேட்டு நீங்கள் கை தட்டினீர்கள். ரொம்ப சந்தோஷம். ஆனால் உங்களுக்கு ஒன்று சொல்கிறேன். அவ்வாறு நான் அந்த ஆங்கிலேயனுக்குப் பதில் சொன்னபோது அந்தக் கூட்டத்தில் இருந்தவர்கள் உங்களைக் காட்டிலும் நூறு மடங்கு

உற்சாகத்துடன் கையைத் தட்டினார்கள்!'' என்றார்.

நாங்கள் மறுமடியும் கை தட்டினோம். ஆனால், "இதிலேகூட இங்கிலீஷ்காரர்களுக்கு நாம் குறைந்துவிட்டோமே?'' என்று வெட்கத்தினால் முன்னைக் காட்டிலும் ஸ்வரம் குறைந்து தானிருந்தது.

மேலே சொன்னது ஸ்ரீ சத்தியமூர்த்தி இங்கிலீஷில் செய்த பிரசங்கம். வெள்ளைச் சட்டையணிந்த மாணாக்கர் — வக்கீல்கள் — முதலியவர் அதிகமாயுள்ள கூட்டங்களில் ஸ்ரீ சத்தியமூர்த்தி இங்கிலீஷில் பேசுவார். மற்றப்படி சாதாரண ஜனங்கள் அதிகமாயுள்ள கூட்டங்களில் தமிழில்தான் பேசுவார். ஆங்கிலப் பேச்சை விடத் தமிழ்ப் பேச்சு சுவாரஸ்யத்திலோ, கார சாரத்திலோ, குறைந்திராது. இங்கிலீஷ் நன்றாய்ப் பேசத் தெரிந்தவர்களுக்குள்ளே முதன் முதலில் தமிழிலும் பேசத் தொடங்கிப் பொது ஜனங்களின் சிந்தையைக் கவர்ந்தவர் ஸ்ரீ சத்தியமூர்த்தி என்றுதான் நினைக்கிறேன்.

அந்தநாளில் தமிழ்நாடெங்கும் ஒரு அரசியல் பல்லவி அதிகமாக அடிபட்டு வந்தது. ஸ்ரீ சத்தியமூர்த்தியின் ஸாஹித்யந்தான் அது.

நாலு பேர் சேர்ந்து அரசியலைப் பற்றிப் பேசத் தொடங்கினால் அவர்களில் யாராவது ஒருவர், திடீரென்று,

**"அவன்தோல் வெளுப்பாம்!**
**என்தோல் கறுப்பாம்!"**

என்று நீர்க்கமான குரலில் சொல்லுவார். மற்றவர்களின் முகத்தில் ஒரு உற்சாகம் காணப்படும். "அடாடா! சத்தியமூர்த்தியின் பேச்சே பேச்சு!" என்பார்கள்.

மேற்படி பல்லவியைச் சில காலம் ஸ்ரீ சத்தியமூர்த்தி தமது பிரசங்கங்களில் கையாண்டு கேட்கும் ஜனங்களைப் பைத்தியமாக அடித்து வந்தார். இந்த தேசத்தில் இங்கிலீஷ்காரர்கள் அநுபவிக்கும் தனி உரிமைகளையும் சலுகைகளையும் ஒவ்வொன்றாக எடுத்துச் சொல்லி மேற்படி பல்லவியுடன் முடிப்பார். உதாரணம்:—

"ஒரு உத்தியோகத்தை ஆங்கிலேயன் பார்த்தால் அவனுக்கு இரண்டாயிரம் ரூபாய் சம்பளம்; அதே உத்தியோகத்தை நான் பார்த்தால் எனக்கு எண்ணூறு ரூபாய்தான் சம்பளம். இந்த வித்தியாசம் எதனால் தெரியுமா? அவன் தோல் வெளுப்பாம்! என் தோல் கருப்பாம்!...."

இப்படியாக உதாரணங்களை அடுக்கிக் கொண்டே போவார். பிரசங்கத்தில் ஜனங்

களின் மனதைக் கவர்ந்து அவர்களுடைய ஆவேசத்தைக் கிளப்புவதற்கு இம்மாதிரி அநேக உத்திகளை அவர் கையாள்வதுண்டு.

குறுக்குக் கேள்வி கேட்கும் எதிராளிகளுக்குச் சுடச் சுடப் பதில் சொல்லி வாயடக்குவதில் சத்தியமூர்த்திக்கு ஈடு சத்தியமூர்த்தியே தான். எவ்வளவு சங்கடமான நிலைமையிலும் ஏதாவது சாதுர்யமாய்ப் பதில் சொல்லிச் சமாளித்துக்கொள்வார். ஸ்ரீ சத்தியமூர்த்தி அரசியலில் புகுந்து அடியோடு டாக்டர் பெஸண்டு அம்மையையும் அவருடைய கோஷ்டியாரையும் மிதவாதிகளையும் தாக்கி அவர்களுக்கெல்லாம் செல்வாக்கு இல்லாமல் செய்துவிட்டாரல்லவா? இதற்கெல்லாம் காலப் போக்கும் அவருக்கு உதவி செய்தது. ஆனால் காலப் போக்குக்கு எதிராகவும் அவர் தமது வாக்கு வன்மையை உபயோகிக்கப் பின் வாங்குவதில்லை. புதிய சட்டசபைகளைக் கைப்பற்றிச் "சிங்கத்தை அதனுடைய குகையிலேயே தாக்கி அதனுடைய பிடரி மயிரைப் பிடித்து உலுக்க வேண்டும்" என்று ஸ்ரீ சத்தியமூர்த்தி கர்ஜனை செய்து வந்த சமயத்தில் மகாத்மா காந்தி தமது மூவகை பகிஷ்காரத் திட்டத்துடன் இந்திய அரசியலில் பிரவேசித்தார். அதாவது சட்ட சபைகளையும், கோர்ட்டுகளை

யும், கலாசாலைகளையும் பகிஷ்காரம் செய்ய வேண்டுமென்று சொன்னார். ஸ்ரீ சத்தியமூர்த்திக்கு இது பிடிக்கவில்லை. ஒரு சமயம் மன்னார்குடியில் மகாத்மாவின் புதுத் திட்டத்தைத் தாக்கி வந்தபோது, "காந்தி சொல்கிறான்" என்று ஏக வசனத்தில் குறிப்பிட்டுவிட்டார். ஒருவேளை இது வாய் தவறி வந்ததாயிருக்கலாம். தமிழ் நாட்டில் "காந்தி பைத்தியம்" அதிவேகமாகப் பரவி வந்த காலம் அது. கூட்டத்தில் சிலருக்குப் பொறுக்கவில்லை. ஸ்ரீ சத்தியமூர்த்தி பேசும்போது குறுக்கே பேசுவதற்கு அவர்களுக்கு எவ்வளவோ பயமாயிருந்தாலும், தங்களையும் மீறி "ஏக வசனமாய்ப் பேசக்கூடாது!" என்று கூச்சல் போட்டார்கள்.

ஸ்ரீ சத்தியமூர்த்தி அந்த நிலைமையைச் சமாளித்த விதம் ரொம்பவும் அதிசயமானது. யோசிப்பதற்கு ஒருகணம் அவகாசம் கூட அவர் எடுத்துக் கொள்ளவில்லை. பளிச் சென்று பதில் கூறினார்:—

"ராமன் வனம் சென்றான் என்று சொல்கிறோம். கண்ணன் வெண்ணெய் திருடினான் என்று சொல்கிறோம். இதனால் ராமனையும் கிருஷ்ணனையும் நாம் அவமதிக்கவில்லை. ராமனையும் கிருஷ்ணனையும் போல் காந்தியை நான் அவதார புருஷனாக மதிக்கிறேன்!"

இதைக்கேட்டதும் கூட்டத்தில் உண்டான மகத்தான கரகோஷம் அவரிடம் ஏற்பட்டிருந்த அதிருப்தியை யெல்லாம் பறக்க அடித்து விட்டது.

ஸ்ரீ சத்தியமூர்த்தி பொதுஜன மனப்பான்மையை அறிந்து நடக்கும் ஆற்றல் உள்ளவர். மிதவாதிகள் விஷயத்திலும், ஜஸ்டிஸ் கட்சியார் விஷயத்திலும் கையாண்ட முறையை மகாத்மாவின் விஷயத்தில் கையாளுவது பெரிய பிசகாகும் என்பதை விரைவிலேயே அவர் அறிந்தார்.

உண்மையாகவே, மகாத்மா காந்தியினிடம் அவருடைய மரியாதையும் பக்தியும் நாளுக்கு நாள் அதிகமாகி வந்தது. இன்னும் மகாத்மாவிடம் பழகப் பழக அவருடைய மோகன சக்திக்கு வசப்பட்டு அவரிடம் அன்பு கொள்ளவும் தொடங்கினர்.

* * *

சமீபத்தில் ஒரு தடவை ஸ்ரீ சத்தியமூர்த்தி வட நாட்டுக்குப் போய்விட்டுத் திரும்பினர். வரும்போது வர்தாவில் இறங்கி மகாத்மாவைப் பார்த்து விட்டு வந்தார். வந்து கொஞ்ச நாள் வரையில் ஒரே மகாத்மா மயமாக இருந்தார். "என்னதான் சொல்லு;

மகாத்மா என்றால் மகாத்மாதான்! அவருக்கு எவ்வளவு வேலை? எவ்வளவு தொல்லை? என்னைப் பார்த்ததும், 'லக்ஷ்மி சௌக்யமா?' என்று கேட்டாரே? குழந்தையைப் பற்றி ஞாபகம் வைத்துக் கொண்டு கேட்பதென்றால்' — மகாத்மாவைத் தவிர வேறு யாரால் முடியும்?'' என்று சொல்லிச் சொல்லிப் பூரித்துப் போனார்.

ஸ்ரீ சத்தியமூர்த்தியின் செல்வப் புதல்வியின் பெயர் லக்ஷ்மி என்று நேயர்கள் அறிந்திருக்கலாம். மகாத்மா சௌ. லக்ஷ்மியைப் பற்றிக்கேட்டுவிட்டதற்காக ஸ்ரீ சத்தியமூர்த்தி இவ்வளவு பரவசமடைகிறாரே என்று அப்போது எனக்குச் சிறிது வியப்பாகத்தானிருந்தது. இந்த வியப்பு திருச்சி சிறையிலே மாறிற்று. இந்திய சுயராஜ்யத்துக்கு அடுத்தபடியாக ஸ்ரீ சத்தியமூர்த்தியின் உள்ளத்தின் ஆசையையெல்லாம் கொள்ளை கொண்டவள் லக்ஷ்மி என்று அங்கே தெரிந்து கொண்டேன். லக்ஷ்மி வெள்ளிக்கிழமை 'இண்டர்வியூ'வுக்கு வருவதாயிருந்தால் இவர் புதன் கிழமை முதலே 'லக்ஷ்மி நாளன்று வருகிறாள்!' என்று பார்த்தவர்களிடமெல்லாம் சொல்லிக் கொண்டிருப்பார். வியாழக்கிழமை இரவு, சாதாரணமாய் ஒரு மணிக்கு வருகிற தூக்கங்கூட அவருக்கு வராது. வெள்ளிக்கிழமை காலையிலிருந்து இருப்புக்கொள்ளாத

பரபரப்பு. சிறை வாசலில் லக்ஷ்மி வந்தா யிற்று என்று கேட்டதும், பிளாக்கிலிருந்தே 'லக்ஷ்மி!' என்று கூவிக்கொண்டு விரைந்து போவார்.

லக்ஷ்மியைப் பற்றி மகாத்மா விசாரித்ததில் ஸ்ரீ சத்தியமூர்த்திக்கு ஏன் அவ்வளவு குதூ கலம் என்பதை அப்போது நன்கு தெரிந்து கொண்டேன். மகாத்மாவினுடைய அநேக பெருமைகளில் இதுவும் ஒன்று. சிநேகிதர் களுடைய தேக சௌக்கியத்தைப் பற்றியும், அவர்களுடைய குடும்ப யோக க்ஷேமங்களைப் பற்றியும் ரொம்பவும் கவலையெடுத்துக் கொள் வார். 1941-ல் ஸ்ரீ சத்தியமூர்த்தி சிறையி லிருந்து வந்ததும் காங்கிரஸ் திட்டத்தை மாற்றும்படி பிரசாரம் செய்யத் தமக்குப் பேச்சு சுதந்திரம் வேண்டும் என்று மகாத்மா வுக்கு ஒரு பெரிய கடிதம் எழுதினர். அதற்கு மகாத்மா, "பேச்சு சுதந்திரம் உங்களுக்குத் தாராளமாக உண்டு" என்று சொல்லிவிட்டு, ஆனல் "உங்களுடைய தேக ஆரோக்கியம் எப்படி யிருக்கிறது? அதை முக்கியமாய்க் கவனிக்கவும். உடம்பைப் பார்த்துக்கொண்டு எது வேணுமானலும் செய்யுங்கள்" என்று பதில் எழுதினர்.

மகாத்மாவிடம் ஸ்ரீ சத்தியமூர்த்தியின் பக்தி வளர்ந்து வந்ததுபோலவே, மகாத்மாவுக்கும் ஸ்ரீ சத்தியமூர்த்தியின் திறமையில் மரியாதை வளர்ந்து வந்தது. ஒரு சமயம் காந்தி மகான் வேறு யாருக்கும் கொடுக்காத ஒரு தனிச் சிறப்பை ஸ்ரீ சத்தியமூர்த்திக்கு அளித்தார். "என் இஷ்டத்துக்கு விடுவதாயிருந்தால், சட்ட சபை வேலைக்கு ஸ்ரீ சத்தியமூர்த்தி ஒருவரை மட்டும் நியமித்து அனுப்புவேன்!" என்றார். இதிலிருந்து சத்தியமூர்த்தியின் சட்டசபை வேலையை மகாத்மா எவ்வளவு தூரம் மதித்தார் என்று அறியலாம். சட்டசபைத் திட்டத்தை ஓரளவு மகாத்மா சகித்துக் கொள்வதற்குக் காரணமாயிருந்ததே ஸ்ரீ சத்தியமூர்த்தியின் வேலைத்திறம் என்பதில் சந்தேகமில்லை.

ஆனால் மகாத்மாவின் ஆரம்ப பயம் ஓரளவு உண்மையேயாயிற்று. காங்கிரஸ்காரர்கள் புகுவதால் சர்க்காரின் சட்ட சபைகளுக்கு மதிப்பு அதிகமாகுமென்று மகாத்மா சொன்னார். அவ்விதமே நடந்தது. முக்கியமாக, ஸ்ரீ சத்தியமூர்த்தியின் வேலை காரணமாகச் சட்டசபைகளின் மதிப்பு உயரத்தான் செய்தது. அதற்கு முன் சட்ட சபை நடவடிக்கைகளையே கவனியாதவர்கள் எல்லாம் தினசரிகளில் சட்ட சபைப் பத்திகளை ஆவலுடன் கவனிக்கத் தொடங்கினார்கள். அவர்களில் நானும் ஒருவன்.

1921-ம் ஆண்டிலும் அதற்குப் பிறகு சுய ராஜ்யக் கட்சி ஆரம்பமானபோதும் தேசத்தில் இன்னும் பலரைப்போல் நானும் ஸ்ரீ சத்தியமூர்த்தியிடம் கோபம் கொண்டிருந்தேன். "மகாத்மா உலகத்துக்கே ஒரு புதிய வழியைக் காட்டப் போகிறார். அவருக்கு விரோதமாக நம்மூர்க்காரர் ஒருவர் பேசுகிறாரே?" என்று எங்களுக்கு எரிச்சலாகயிருந்தது. ஸ்ரீ சத்தியமூர்த்தி சட்டசபையில் செய்த அபார வேலையைப் பார்க்கப் பார்க்க, ஒருவாறு கோபம் மாறி அவர்மேல் மதிப்பும் மரியாதையும் கொள்ளத் தொடங்கினோம்.

சென்னைச் சட்டசபையில் இருந்த வரையில் ஸ்ரீ சத்தியமூர்த்தி பெரும்பாலும் ஜஸ்டிஸ் கட்சிக்குக் குழி வெட்டும் வேலையிலேயே ஈடு பட்டிருந்தார். இந்தக் குழி வெட்டும் வேலையானது வெகு காலம் வரையில் அவரை விடவேயில்லை. ஒவ்வொரு தேர்தலின் போதும், "இந்த வகுப்பு துவேஷ ஜஸ்டிஸ் கட்சியை ஆழமாகக் குழிதோண்டிப் புதைப்போம்" என்று கர்ஜிப்பார். தேர்தலில் ஜயமடைந்ததும், "ஆழக் குழி தோண்டிப் புதைத்து விட்டோம்!" என்பார். மறுபடியும் மறுபடியும் அந்தக் கட்சி முளைத்துக்கொண்டு தானிருக்கும். ஸ்ரீ சத்தியமூர்த்தியும் சலிக்

காமல் குழி தோண்டிப் புதைத்துக் கொண்டிருப்பார்.

1930-ம் வருஷத்து உப்பு சத்தியாக்கிரஹத்தின் போது ராஜாஜி ஸ்ரீ சத்தியமூர்த்தியின் கையைப் பிடித்துச் சிறைக்கு அழைத்துக் கொண்டு போனார். அதிலிருந்து தமிழ் நாட்டு தேசத் தொண்டர் அநேகருக்கு அவர் மீதிருந்த அவநம்பிக்கை யெல்லாம் நீங்கிற்று. "சத்தியமூர்த்தி வெறும் பேச்சுக்காரர்" என்ற பேச்சும் அடிபட்டுப் போயிற்று.

1933-ல் மறுபடியும் ஸ்ரீ சத்தியமூர்த்தி "கிராமப்பஞ்சாயத்துச் சபையிலிருந்து இந்திய சட்டசபை வரையில் எல்லா ஸ்தானங்களையும் காங்கிரஸ்காரர்கள் கைப்பற்ற வேண்டும்" என்னும் தமது கொள்கையைப் பிரசாரம் செய்ய ஆரம்பித்தார். டாக்டர் அன்ஸாரி, ஸ்ரீ புலாபாய் தேசாய், டாக்டர் பி. ஸி. ராய் முதலியவர்களும் இந்த இயக்கத்தில் கலந்துகொண்டார்கள். கடைசியாக, காங்கிரஸே அதை ஒப்புக்கொண்டது. 1934-ல் நடந்த இந்திய சட்டசபைத் தேர்தலில் காங்கிரஸ் வாதிகள் பிரமாதமான உற்சாகத்துடன் ஈடுபட்டார்கள்.

சென்னை நகரில் ஜஸ்டிஸ் கட்சியின் சிறந்த வாசாலகரான ஸ்ரீ ஏ. ராமசாமி முதலியாருடன் போட்டி போடும் பெருமையும் உரிமையும் ஸ்ரீ சத்தியமூர்த்திக்குக்

கிடைத்தன. அப்போது அவர் நடத்திய தேர்தல் முயற்சியைக் கிட்ட இருந்து நான் பார்க்கும்படி நேர்ந்தது. அவருடைய சலியா உழைப்பின் மகிமையை அப்போதுதான் முழுமையும் நான் அறிந்து கொண்டேன்.

"என் அன்பார்ந்த சகோதர சகோதரிகளே..............." என்று அழைத்து அவர் செய்த பிரசங்க முழக்கங்கள் இன்னமும் சென்னையின் மேல்வான வெளியில் நிறைந்திருக்குமென்றே நினைக்கிறேன். ஒரு நாளைக்கு நாலைந்து பொதுக் கூட்டங்களில் அவர் பேசுவது சர்வ சாதாரணம.

கூட்டங்களில் பேசுவது மட்டுமல்ல; தனித் தனியாக வோட்டர்களின் வீடு தேடிச் சென்று அவர் வோட்டுக் கேட்ட விதம் தேசத் தொண்டர்களுக் கெல்லாம் ஓர் அபூர்வ உதாரணமா யிருந்தது.

எங்கேயோ ராயபுரத்தின் ஒரு மூலையில் ஒரு கிராமணியாரின் வீட்டில் ஒரு மூதாட்டிக்கு வோட்டு இருக்கும். அந்த வீட்டைத் தேடிக் கொண்டு ஸ்ரீ சத்தியமூர்த்தி போவார். பின்னோடு வருகிறவர்கள் பேசட்டுமென்று காத்திருக்க மாட்டார். வோட்டர் பெண் மணி வாசலில் வந்ததும் ஆரம்பித்து விடுவார்:—

"அம்மா! நான் தான் சத்தியமூர்த்தி. காங்கிரஸ் மகா சபையின் கட்டளையைச்

சிரமேற் கொண்டு இந்திய சட்ட சபைக்கு நிற்கிறேன். உங்களுடைய வோட்டை அபேட்சிக்கிறேன். எனக்கு உங்கள் வோட்டைக் கொடுத்தால் இந்தியா சுயராஜ்ய மடைவதற்காக அல்லும் பகலும் அனவரதமும் பாடுபடுவேன்" என்று விநயமாகத் தெரிவித்துக் கொள்வார். இவ்விதம் அந்தத் தேர்தலின் போது இந்திய சட்டசபை வோட்டர் ஒவ்வொருவரையும் அநேகமாக அவர் நேரில் பார்த்துச் சொல்லி யிருக்கிறார் என்றால், ஸ்ரீ ஏ. ராமசாமி முதலியாரை இருந்த இடம் தெரியாமல் அடித்துத் தேர்தலில் மகத்தான வெற்றி யடைந்ததில் ஆச்சரியம் என்ன இருக்கிறது?

ஸ்ரீ சத்தியமூர்த்தி இந்திய சட்டசபைக்குப் போன பின்னர், அவருடைய திறமை இந்தியா முழுவதற்கும் தெரியலாயிற்று. தென்னாட்டின் கௌரவமே ஒருபடி உயர்ந்தது.

எதிராளிகளின் வாயடைத்துப் போகும்படி காரசாரமான கேள்விகளைக் கேட்டு, பளிச்சுப் பளிச்சென்று பதில் சொல்லும் ஸ்ரீ சத்தியமூர்த்தியின் திறமை இந்திய சட்டசபையில் வெகு நன்றாகச் சோபித்தது.

அப்போது வைஸ்ராய் நிர்வாக சபையில் சட்ட இலாகா அங்கத்தினராக யிருந்தவர் ஸர்

என். என். சர்க்கார். இவர் வங்காளத்தின் பிரசித்த வக்கீல்; மாஜி அட்வகேட் ஜெனரல்; சென்னையில் ஸர் அல்லாடி கிருஷ்ணசாமி ஐயருக்கு எவ்வளவு பிரபலமோ அவ்வளவு பிரபலம் வங்காளத்தில் அடைந்தவர்.

ஒரு சமயம் ஸ்ரீ சத்தியமூர்த்தி பேசும் போது "சட்ட மெம்பர் தனது சட்ட ஞான மனச்சாட்சியை உபயோகப் படுத்த வேண்டும்!" என்றார்.

"எனக்கு மனச்சாட்சி உண்டென்று கனம் அங்கத்தினர் குற்றம் சாட்டுகிறாரா?" என்று சாதுர்யமாய்க் கேட்டார், என். என். சர்க்கார்.

"தப்புத்தான்; மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்!" என்று உடனே பதில் கொடுத்தார் சத்தியமூர்த்தி.

பொக்கிஷ மெம்பர் ஸர் ஜேம்ஸ் கிரிக் யமகாதகர் என்று பெயரெடுத்தவர்; இப்போது பிரிட்டிஷ் மந்திரி சபையில் யுத்த மந்திரியாக விளங்குகிறார். அவரைச் சத்தியமூர்த்தி படாத பாடு படுத்தி வைத்தார்.

ரூபாய் நாணயத்தைப் பற்றி ஸ்ரீ சத்தியமூர்த்தி உப கேள்விகள் கேட்டுக்கொண்டிருக்கையில் "இந்த விஷயத்தைப் பற்றிக் கவர்ன்

மெண்டார் நிபுணர்களின் அபிப்பிராயத்தைக் கலந்தார்களா?'' என்றார்.

ஸர் கிரிக்:—நான் ஒரு நிபுணன் என்று கனம் அங்கத்தினர் ஒப்புக் கொண்டால் நிபுணரால் ஆலோசிக்கப்பட்டது என்று சொல்லலாம்.

சத்தியமூர்த்தி:—ஆமாம்; துரதிர்ஷ்ட வசமாக நீர் ஒரு நிபுணர்தான்!

இந்த மாதிரி எத்தனையோ வாக்கு பாணங்களை ஸ்ரீ சத்தியமூர்த்தி விடுத்திருக்கிறார்.

வாக்குப்போர் என்று வரும்போது எதிராளி கடைசி வார்த்தை சொல்லுவதற்கு ஸ்ரீ சத்தியமூர்த்தி ஒருநாளும் விடுவதில்லை. இவருடைய வார்த்தைதான் கடைசி வார்த்தையாயிருக்கும்.

அடக்குமுறைச் சட்டங்களை ரத்துச் செய்ய வேண்டுமென்று காங்கிரஸ் கட்சியார் கொண்டு வந்த மசோதாவின் பேரில் ஸ்ரீ சத்தியமூர்த்தி பேசிக் கொண்டிருந்தார். அப்போது நிர்வாக சபையிலுள்ள இந்திய அங்கத்தினரைத் தாக்கத் தொடங்கினார்.

என். என். சர்க்கார்:—நீங்களும் மந்திரியானால் அடியோடு மாறிப் போவீர்கள்.

சத்தியமூர்த்தி:—அப்படி மாருமலிருக்க உங்களுடைய உதாரணமே எச்சரிக்கையாயிருக்குமே!...........

அக்கிராசனர் (ஸர் அப்துர் ரஹீம்):—தனிப்பட்ட மனிதர்களைத் தாக்குவது ரொம்ப அதிகமாகி வருகிறது.

என். என். சர்க்கார்:—நான் அதைச் சிறிதும் பொருட்படுத்தவில்லை. இன்னும் கொஞ்சம் தாக்கட்டும். (சிரிப்பு)

சத்தியமூர்த்தி:—அப்படியானல் நிறுத்தி விடுகிறேன். நான் சொல்வது எதுவும் அவருக்கு உறைக்கவில்லையென்று தெரிகிறது! மனுஷர் கொஞ்சம் சுரணை யுள்ளவர் என்று நினைத்திருந்தேன்!

மேற்கண்ட விவாதத்தின் போதே பின்னல் ஒருதடவை என். என். சர்க்காருக்கும் சத்திய மூர்த்திக்கும் போராட்டம் மூண்டது.

"மாகாணங்களில் மந்திரிகளின் சர்க்கார் ஏற்படும்போது, அந்த மந்திரிகளுக்கு எதிராகப் பிரசாரம் செய்து விரோதம் உண்டு பண்ணு விட்டால், ஒரு மந்திரி சபை மாறி இன்னொரு மந்திரி சபை எப்படி ஏற்பட முடியும்?" என்பது ஸ்ரீ சத்தியமூர்த்தியின் வாதங்களில் ஒன்று.

சத்தியமூர்த்தி:—நல்லது; நாளைக்கு நான்தான் மந்திரியாகிறேன். எப்போதும் மந்திரியாகவே

இருக்க விரும்புகிறேன். எனது கனம் நண்பர் (என். என். சர்க்கார்) என்ன செய்வார்? என் பேரில் 'விரோதம்' 'துவேஷம்' உண்டு பண்ணுதபடி எப்படி எதிர்ப் பிரசாரம் செய்வார்?

சர்க்கார்:—'எனது நண்பர் ரொம்ப தங்கமான மனுஷர்; ஆனால் தப்புகள் செய்திருக்கிறார்' என்று சொல்வேன்.

சத்தியமூர்த்தி:— அப்படிச் சொன்னால் வோட்டே கிடைக்காது. (சிரிப்பு)

சர்க்கார்:—இது வோட்டுப் பிடிக்கும் வேலை யென்று அப்போதே சந்தேகித்தேன்.

சத்தியமூர்த்தி:— ஆமாம்; ஜனநாயகத்தில் நம்பிக்கையுள்ளவர்கள் நாங்கள் வோட்டுப் பிடிப்பவர்கள்தான்; வைஸ்ராய்கள் — கவர்னர்களுடைய வால் பிடிப்பவர்கள் அல்ல! (சிரிப்பு)

திருச்சி சிறையில் இருந்தபோது ஸ்ரீ சத்திய மூர்த்திக்கு அடிக்கடி சட்டசபை ஞாபகம் வந்துவிடும். அதிகார வர்க்கத்தைச் சேர்ந்த எவராவது அதிகப்பிரசங்கமாய்ப் பேசிய தாகப் பத்திரிகையில் வந்தால் ஸ்ரீ சத்திய மூர்த்தி துடியாய்த் துடிப்பார். "இப்போது நான் மட்டும் இந்தியச் சட்டசபையில் இருந் தால் அவன் மண்டையில் அடித்திருப்பேனே இல்லையோ?" என்பார். "இதில் இன்னொரு

முக்கிய விஷயம் இருக்கிறது. பார்! வெளியில் பேச முடியாத விஷயங்களை யெல்லாம் இந்தியச் சட்டசபையில் தாராளமாய்ச் சொல்லலாம். 'ஆக்ஷன்' எடுத்துக் கொள்ள முடியாது. இதெல்லாம் வல்லபாய் படேலுக்கும் ஜவாஹர்லால் நேருவுக்கும் தெரிந்தால்தானே ?'' என்பார்.

இந்த உரிமையை — அதாவது வெளியில் பேச முடியாத விஷயங்களைச் சட்டசபையில் பேசக் கூடியதான உரிமையை — ஸ்ரீ சத்திய மூர்த்தி பூரணமாக உபயோகப்படுத்திக் கொண்டிருக்கிறார்.

கிரிமினல் லா அமெண்ட்மெண்ட் மசோதா வின் மீது விவாதம் நடந்துகொண்டிருந்தது. மிஸ்டர் எப். இ. ஜேம்ஸ் (சென்னை ஐரோப் பியர் பிரதிநிதி) சர்க்காரின் ஆட்சியை ஆத ரித்துப் பேசி வந்தார்.

ஜேம்ஸ்:—பயங்கர இயக்கத்தைச் சாதாரண சட்டங்களால் அடக்க முடியாது. மசோதாவை எதிர்ப்பவர்கள் வேறு என்ன வழி காட்டுகிறார்கள்?

சத்திய:—சுயராஜ்யம். (கேளுங்கள் கேளுங்கள்.)

ஜேம்ஸ்:—கிளிப் பிள்ளையைப் போல் 'சுய ராஜ்யம்' என்று கத்துகிறார் கனம் நண்பர்.

அவர் தென்னிந்தியாவில் செய்த ஒரு பிரசங்கத்தில் 'சுயராஜ்யம் வந்ததும் வானத்திலிருந்து மழை கொட்டும்!' என்ருர்.

சத்திய:—நான் அப்படிச் சொல்லவில்லை. 'சுயராஜ்யம் கிடைத்தால் வானத்திலிருந்து பொழிகிற மழையைக் கடலில் போய் விழுந்து வீணுகும்படி விடமாட்டோம். அணைக்கட்டுப் போட்டுத் தேக்கி விளைச்சலுக்கு உபயோகப் படுத்துவோம்' என்றேன்.

ஜேம்ஸ்:—கோடை காலத்தில் இன்னும் எவ்வளவோ என் நண்பர் சொன்ஞர்..........

சத்திய:—நீர் கூடத்தான்.

ஜேம்ஸ்:—உலகத்திலேயே சுதந்திரத்தில் அதிகப் பற்றுள்ள தேசம் இங்கிலாந்து தான்........

சத்திய:—எகிப்தையும், அயர்லாந்தையும், அமெரிக்காவையும் கேளுங்கள்!

ஜேம்ஸ்:—பின், யார் கீழே இருக்க விரும்புவீர்கள்? ஜெர்மனியின் கீழா? இத்தாலியின் கீழா?

சத்திய:— ஜெர்மனியின் கீழுமில்லை, இத்தாலியின் கீழுமில்லை, உங்கள் கீழேயுமில்லை. உங்கள் எல்லோரையும் உதைத்து வெளியேற்றுவோம்! (**We will kick you all out!** )

மற்றொரு சமயம் ஸர் ஜேம்ஸ் கிரிக்கின் அதிகப் பிரசங்கத்தைப் பற்றி விவாதம் நடந்தது. அப்போது ஸ்ரீ சத்தியமூர்த்தி பின்வருமாறு பேசினர்:—

"அக்கிராசனர் அவர்களே! தெய்வங்கள் யாரை அழிக்க உத்தேசித்திருக்கின்றனவோ, அவர்களை முதலில் பைத்தியம் பிடிக்கச் செய்கின்றன. கனம் வரவு செலவு அங்கத்தினரின் வியாதி இந்திய சர்க்காரின் அழிவுக்கு அறிகுறியாகும். தங்களுக்கு முடிவு நெருங்கி விட்டதென்று அவர்களுக்கே தெரியும். அதனல்தான் இப்படிப் பேசுகிறார்கள்!"

பின்னல் ஸர் ஜேம்ஸ் கிரிக் குறுக்கிட்ட போது ஸ்ரீ சத்தியமூர்த்தி சொன்னர்.

"பொறுங்கள். நீங்கள் அழியப்போகிறீர்கள் என்று எனக்குத் தெரியும். ஐரிஷ்காரன் ஒருவன் 'நான் அப்படித்தான் தண்ணீரில் மூழ்கிச் சாவேன்; என்னை ஒருபயலும் எடுக்கக் கூடாது!' என்ருனும். அப்படித்தான் உங்களுக்கும் நேரப்போகிறது!"

அதிகார வர்க்க ஆட்சிக்கு ஸ்ரீ சத்தியமூர்த்தி கொடுத்த சாபம் எப்போது சத்தியமாகப் போகிறதோ, தெரியவில்லை.

சட்டசபையில் மட்டுமல்ல, காங்கிரஸ் கூட்டங்களிலேயும் ஸ்ரீ சத்தியமூர்த்தியின்

வாக்கு பாணங்கள் அடிக்கடி கிளம்பும். 1939-ல் நாகபுரியில் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி கூட்டம் நடந்தது. பண்டித ஜவாஹர்லால் நேரு பேசிக் கொண்டிருந்தார்.

காங்கிரஸ் கூட்டங்களில் நேருஜி பேசும் போது குறுக்கிடுவதற்கு யாருமே பயப்படு வார்கள். அவ்வளவு முன் கோபக்காரர். அதிலும் சர்வ தேசீய விஷயங்களைப் பற்றிப் பேச ஆரம்பித்துவிட்டால் கேட்க வேண்டிய தில்லை. மகாத்மா காந்தியே "சர்வ தேசீய விஷயங்களில் ஜவாஹர்லால்ஜி வைத்தது தான் எனக்குச் சட்டம்" என்று சொல்லி யிருக்கிறார்.

அப்பேர்ப்பட்ட ஜவாஹர்லால்ஜி மேற்படி கூட்டத்தில் சர்வ தேசீய விஷயங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தபோது பின் வரும் சின்ன வாக்கு யுத்தம் நடந்தது.

ஜவாஹர்:—இந்தியாவை ருஷியா தாக்கும் என்ற பயத்துக்கு ஆதரவே யிருக்க முடியாது.

சத்திய:—ஏன் முடியாது?

ஜவாஹர்:— சர்வ தேசீய நிலைமையைப் பற்றி என்னுடைய ஆராய்ச்சியிலிருந்து அது தெரிகிறது.

சத்திய:— வேறு காரணம் ஏதாவது?

இதைக்கேட்ட பண்டிட்ஜி திகைத்துப் போனார். சற்று நிதானித்துவிட்டு, "உங்களிடம் பிறகு தனியாகப் பேசி விஷயத்தை விளக்குகிறேன்" என்று சொல்லி மேலே பேசத் தொடங்கினார்.

வடநாட்டுத் தலைவர்களைத் தமிழ் நாட்டார் அளவுக்கு மீறித் தலையில் தூக்கி வைத்துக் கொண்டு கூத்தாடுவது ஸ்ரீ சத்தியமூர்த்திக்குப் பிடிப்பதில்லை. முக்கியமாக வடநாட்டுக்கு அவர் ஒரு தடவை போய்த் திரும்பியவுடன் அவரைப் பார்த்தால், இதைப்பற்றி அதிகமாகப் பேசுவார். "வடக்கேயிருந்து வந்துவிட்டால் நாம் என்ன பாடு படுத்துகிறோம்? நாம் அங்கே போனால் ஒருத்தனும் கவனிக்கிறதில்லை. நீ சொல்லுகிறது ரொம்ப சரி. நம்மை நாமே மதித்தால்தானே பிறத்தியானும் மதிப்பான்?" என்பார்.

"நீ சொல்லுகிறது ரொம்ப சரி" என்று அவர் குறிப்பிடுவது எதைப்பற்றி என்றால்:—

ராஜாஜியை நான் அளவு மீறி ஸ்தோத்திரம் செய்கிறேன் என்ற அபிப்பிராயம் ஸ்ரீ சத்தியமூர்த்திக்குக் கொஞ்சம் உண்டு. சில சமயம் என்னைப் பார்த்ததும், "ஏன் அப்பா! இந்திரன், சந்திரன், பிரம்மா, விஷ்ணு எல்லாரும் இராஜகோபாலாச்சாரியார் தானே? இருந்தாலும் இவ்வளவு ஹீரோ ஒர்ஷிப் (வீர பூஜை) கூடாது!" என்பார்.

"ஆகட்டும், ஆகட்டும். உங்களையும் இந்திரன், சந்திரன், பிரம்மா, விஷ்ணு என்று ஒரு சமயம் சொல்லப் போகிறேன். அப்போது என்ன செய்வீர்களோ, பார்க்கலாம்!" என்பேன்.

அவருடன் அவகாசமாகப் பேச நேர்ந்தால் "நீங்கள்தான் வடநாட்டுத் தலைவர்களுடன் பழகி இருக்கிறீர்களே? அவர்களை அந்தந்த மாகாணத்தார் எவ்விதம் போற்றுகிறார்கள்? நமது தலைவர் அவர்களைக் காட்டிலும் எந்த விதத்தில் குறைந்தவர்? தென்னாட்டில் நமது ராஜாஜியைப்போல் அறிவாற்றலுள்ள ஒரு பெரியவர் இக்காலத்தில் தோன்றி யிருப்பது நமது அதிர்ஷ்டமல்லவா? அவரை நாம் கொண்டாடாவிட்டால் வடநாட்டார் நம்மை எவ்விதம் மதிப்பார்கள்?" என்பேன். இந்த விஷயம் சம்பந்தமாகத்தான் ஸ்ரீ சத்திய மூர்த்தி வடநாட்டிலிருந்து திரும்பி வந்ததும் "நீ சொல்லுகிறது ரொம்ப சரி" என்று சில சமயம் சொல்வது வழக்கம்.

* * *

ஸ்ரீ சத்தியமூர்த்திக்கும் ராஜாஜிக்கும் இருந்த சம்பந்தத்தைப் பற்றிச் சிலருக்குத் தவறான அபிப்பிராயம் இருந்து வருவதாய்த் தெரிகிறது. முக்கியமாக, காங்கிரஸ் விரோதிகளும்

தேசத்துக்காக ஒரு துரும்பைக் கூட எடுத்துப் போடாதவர்களும் மேற்படி தவருன அபிப்பிராயத்தைப் பரப்பி வருகிருர்கள். ஸ்ரீ சத்திய மூர்த்தியின் மரணத்தைக் குறித்து அநுதாபப் பட்ட ஒரு பெரிய மனிதர் அவருக்கு மந்திரி உத்தியோகம் கிடைக்காதது பற்றி ஒரு குடம் கண்ணீர் வடித்தார்!

இவர்களுக்கெல்லாம் மந்திரி உத்தியோகம் என்ருல், அதிலுள்ள சம்பளம், அதிகாரம், இதர செளகரியங்கள் இவை மேலேதான் ஞாபகம். காங்கிரஸ் மந்திரி பதவி வகிப்பதும் சுதேச சமஸ்தானத்தில் திவான் வேலை பார்ப்பதும் ஒன்று என்பது இவர்களுடைய எண்ணம். சுதேச சமஸ்தானத்தில் திவாஞ யிருந்தால் ஒரு மகாராஜாவுக்கும் ஒரு ரிஸிடெண்டுக்கும் நல்ல பிள்ளையாய் நடந்து கொண்டால் போதும். மற்றப்படி பெரும்பாலும் திவான்மார்கள், "வைத்தால் குடுமி—சிரைத்தால் மொட்டை" என்ற ரீதியில் ஆட்சி செலுத்தலாம்.

காங்கிரஸ்காரர்கள் மந்திரி வேலை பார்த்தது இப்படியல்ல. காங்கிரஸ்காரர்கள் மந்திரி பதவியை ஆசைப்பட வேண்டிய ஒரு பதவியாகவோ பரிசாகவோ கருதவில்லை; அதை ஒரு கடினமான பொறுப்பாகவே நினைத்தார்கள். பொதுஜனத்தின் யஜமானர்களாக

அவர்கள் தங்களை நினைக்கவில்லை; பொது ஜனத்தின் ஊழியர்களாகவே நினைத்துக் கொண்டார்கள்.

ஆகையினால்தான், ஸ்ரீ சத்தியமூர்த்தி ராஜாஜியைச் சென்னைச் சட்ட சபைக்கு நிற்கும்படியும், பிரதம மந்திரி வேலையை ஒப்புக் கொள்ளும்படியும் வற்புறுத்தினார். அவர் இவ்விதம் வற்புறுத்திய ஒரு சந்தர்ப்பத்தில் நான் அருகில் இருக்க நேர்ந்தபடியால் இதைத் திட்டமாய்ச் சொல்கிறேன். தமக்குச் சேரவேண்டிய ஒரு பரிசை ராஜாஜி கொண்டு போக வந்து விட்டார் என்ற எண்ணம் அவர் மனதில் கொஞ்சமாவது அச்சமயம் இல்லையென்பது நிச்சயம். அப்படி யிருந்தால் அவரும் வற்புறுத்தியிருக்க மாட்டார்; ராஜாஜியும் ஒப்புக்கொண் டிருக்கமாட்டார்.

இந்தச் சென்னை மாகாணத்தில் தமிழ்—ஆந்திரா—மலையாளத் தகராறுகள், பிராமணர்—பிராமணரல்லாதார் தகராறுகள்,—இப்படியாக மற்ற மாகாணங்களில் இல்லாத தகராறுகள் பல உண்டு; காங்கிரஸுக்குள்ளும் உண்டு. இந்தத் தகராறுகளை யெல்லாம் கூடிய வரையில் தீர்த்து எல்லாரையும் சரிக்கட்டித் திறமையாக ஆட்சி நடத்துவதற்கு ராஜாஜிதான் எல்லா விதத்திலும் தகுந்தவர் என்று காங்கிரஸ்வாதிகள் அநேகர் கருதியது போல்தான் ஸ்ரீ சத்தியமூர்த்தியும் அப்போது

நம்பினார். அது எவ்வளவு உண்மையென்பது பின்னால் நன்கு விளங்கிற்று. ராஜாஜி விலகிய பின்னர் கூடிய காங்கிரஸ் சட்டசபை அங்கத்தினர் கூட்டத்தில் ராஜாஜிக்குப் பதிலாக ஒரு தலைவரைத் தேர்ந்தெடுக்க முடியாமல் ஒத்தி வைத்ததிலிருந்து மேற்படி உண்மை இன்னும் ஸ்பஷ்டமாயிற்று.

ராஜாஜியைப் பொறுத்த வரையில், ஸ்ரீ சத்தியமூர்த்தியினிடம் அவருடைய அபிமானம்—பல அரசியல் விவாதங்களையெல்லாம் மீறி—ஒரே விதமாயிருந்தது என்பதை நான் அறிவேன். சிறையிலும் வெளியிலும் இதை நான் கண்டிருக்கிறேன். சிறையில் ஸ்ரீ சத்தியமூர்த்தி படும் கஷ்டங்களைக் குறித்து யாராவது அநுதாபமின்றிப் பேசினால் உடனே ராஜாஜி கண்டிப்பார்.

ஒருதடவை மாகாணக் கமிட்டிக்கு ஸ்ரீ சத்தியமூர்த்தியைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று ராஜாஜி வற்புறுத்தியதனால் காங்கிரஸ் தொண்டர்கள் பலருடைய அதிருப்திக்கு ஆளானதை நான் அறிவேன்.

ஸ்ரீ சத்தியமூர்த்தியைச் சில சமயம் நான் கடுமையாகத் தாக்கவேண்டி நேர்ந்திருக்கிறது. (எழுத்திலேதான்!) அப்போதெல்லாம் ராஜாஜி தமது ஆட்சேபத்தைத் தெரிவிக்காமல் இருப்பது கிடையாது. கடைசியில்

ஸ்ரீ சத்தியமூர்த்தி ஜெனரல் ஆஸ்பத்திரியில் நோய்ப்படுக்கையில் இருந்தபோது அவரைப் போய் நான் தரிசிக்கும்படி நேர்ந்ததும் ராஜாஜியின் மூலமாகத்தான். இப்போது அவருடைய உடல் நிலை கவலைக் கிடமாகவே இருந்ததாயினும் இவ்வளவு சீக்கிரத்தில் இறுதி நேருமென்று எதிர்பார்க்கப் படவில்லை. எதிர்பார்த்திருந்தால் ஒருவேளை ராஜாஜி தமது வடநாட்டுப் பிரயாணத்தைக் கூட நிறுத்திவைத்து அவருடைய நோய்ப் படுக்கையின் அருகில் இருந்திருப்பார்.

ஸ்ரீ சத்தியமூர்த்தியின் ஆப்த நண்பர்களில் ஒருவரான நுங்கம்பாக்கம் ஸ்ரீ துரைசாமி ஐயர் அன்று மயானத்தில் துயரம் ததும்பப் பேசியபோது, “ஏ சத்தியமூர்த்தி! இருபத்தைந்து வருஷத்துக்கு முன்னால் நீயும் நானும் ரிக்ஷாவில் போய்க் காங்கிரஸ் தொண்டு செய்தோமே? அதை எப்படி மறப்பேன்!” என்று கதறினார். எனக்கு அவ்வளவு நீண்ட காலப் பழக்கம் ஸ்ரீ சத்தியமூர்த்தியுடன் கிடையாது. சுமார் பதினைந்து வருஷத்துக்கு முன்னாலேதான் அவருடன் அறிமுகம் ஏற்பட்டது. அது எப்படி என்றால்:—

திருவண்ணாமலையிலோ காஞ்சீபுரத்திலோ நடந்த மாகாண மகாநாட்டுக்கு அடுத்த நாள் மாகாணக் காங்கிரஸ் கமிட்டி கூடிற்று. அந்தக் காலத்தில் காங்கிரஸ் சம்பந்தமான எந்தக் கூட்டம் கூடினாலும் தேசிய கீதம் பாடாமல் ஆரம்பிப்பது கிடையாது. மேற்படி கூட்டத்தில் தேசீய கீதம் பாடுவதற்கு ஒருவரும் இல்லை. ஸ்ரீ அண்ணாமலை பிள்ளை கூட எங்கேயோ போய்விட்டார். யாரோ ஒருவர் எனக்குப் பாடத் தெரியும் என்று சொல்லி விடவே, "பாடு!" "பாடு!" என்று நாலா புறத்திலிருந்தும் ஆஞ்ஞை வந்தது. நான் எவ்வளவு தடுத்துச் சொல்லியும் கேட்கவில்லை. "சரி, பாடித்தான் இவர்களைத் தண்டிக்க வேண்டும்!" என்று தீர்மானித்து ஒரு பாரதி பாட்டைப் பாடி வைத்தேன். பாட்டு முடிந்ததும் ஸ்ரீ சத்தியமூர்த்தி என்னை அருகில் அழைத்து, "பாட்டு நன்றாகத்தானிருந்தது; ஆனால் சுருதியோடு சேரவில்லை" என்றார். அதற்கு நான், "அடாடா! அது எனக்கு மட்டுந்தான் தெரியும் என்று நினைத்தேன். தங்களுக்கும் தெரிந்திருக்கிறதே!" என்றேன். ஸ்ரீ சத்தியமூர்த்தி சிரித்தார்.

இப்படி எங்களுக்குள் ஏற்பட்ட பழக்கம் சங்கீதம் மூலமாகவே அதிகம் வளர்ந்து வந்தது. சென்னையில் எந்த சங்கீதக் கச்சேரியில் என்னை அவர் கண்டாலும், எழுந்து போகும்

போது. "சுத்த மட்டம்" "பாட்டு தேவலை; பக்க வாத்தியம் மோசம்" "கச்சேரி முதல் தரம்" என்று இப்படி ஏதாவது ஒரு அபிப்பிராயம் சொல்லாமல் போக மாட்டார். அரசியலைக் காட்டிலும் சங்கீதம் முதலிய கலைத்துறைகளில் எங்களுடைய அபிப்பிராயம் அதிகமாக ஒத்திருந்தது.

யாராவது ஒருவரையே பிடித்துக்கொண்டு "அவர் பாட்டுத்தான் ஒசத்தி; மற்றதெல்லாம் பாட்டே இல்லை" என்று சொல்லும் ரஸிகர் கூட்டத்தை ஸ்ரீ சத்தியமூர்த்தி சேர்ந்தவர் அல்ல. யாருடைய பாட்டில் என்ன நல்ல அம்சம் இருக்கிறதோ அதை அநுபவித்து மகிழ்வார். எந்தெந்த சமயத்தில் யார் நன்றாய்ப் பாடுகிறார்களோ, அவர்களை மதித்துப் பாராட்டுவார்.

ஐந்தாறு வருஷங்களுக்கு முன்னால் ஒரு தடவை மியூஸிக் அகாடமியின் ஆதரவில் லிங்கச் செட்டித் தெருவில் இருந்த அகாடமி ஆபீஸ் மாடியில், ஒரு இளம் வித்வானின் கச்சேரி நடந்தது. கச்சேரி முடிவில் ஸ்ரீ சத்தியமூர்த்தியைப் பேசச் சொன்னார்கள். எங்கே, எந்த சந்தர்ப்பத்தில், எதைப் பற்றிப் பேசச் சொன்னாலும் அழகாய்ப் பேசும் சக்தி வாய்ந்த ஸ்ரீ சத்தியமூர்த்தி வெண்கலக் கடையில் யானை புகுந்தாற்போல் ஜம்மென்று

பேசினார். "இந்தப் பாடகர் தெலுங்குப் பாட்டுக்களைப் பாடி வந்தபோது எவ்வளவு அலுப்பா யிருந்தது? தமிழ்ப் பாட்டுப் பாடி யதும் சபையில் எவ்வளவு கலகலப்பு உண்டா யிற்று? எத்தனை நாளைக்கு அர்த்தம் தெரியாத பாஷையிலேயே நமது வித்வான்கள் பாடிக் கொண்டிருக்கப் போகிறார்கள்? — தமிழிலே திவ்யமான கீர்த்தனங்கள் இல்லையா?" என்று கேட்டு விட்டு, "இங்கே 'கல்கி'யும், டி. கே. சிதம்பரநாத முதலியாரும் இருப்பதற்காக நான் இவ்விதம் பேசவில்லை! உண்மையாக என் அபிப்பிராயம் இதுதான்!" என்றார்.

அப்போதெல்லாம் ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியார் தமிழிசை இயக்கத்தை ஆரம்பித் திருக்கவில்லை. டி. கே. ஸி.யும் நானுந்தான் அடிக்கடி "தமிழ்ப் பாட்டு" என்று சொல்லிக் கொண்டிருந்தோம். ஆகையினால்தான் ஸ்ரீ சத்தியமூர்த்தி அவ்விதம் எங்களைக் குறிப் பிட்டார். அவர் பேசிவிட்டு வந்து ஆசனத் தில் அமர்ந்ததும், "எங்களை நீங்கள் குறிப்பிட் டிருக்கவே வேண்டியதில்லை. மகாத்மா காந்திக்காகவே நீங்கள் உங்கள் அபிப்பிரா யத்தை மாற்றிக் கொள்ள மாட்டீர்களே! எங்களுக்காக மாற்றிக் கொள்வீர்களா?" என்றேன். பக்கத்திலிருந்து கேட்டுக்கொண் டிருந்தவர்களும் என்னை ஆமோதித்தார்கள்.

கடைசிவரையில் ஸ்ரீ சத்தியமூர்த்தி இதே அபிப்பிராயந்தான் கொண்டிருந்தார். ஸ்ரீ தியாகராஜ உற்சவக் கச்சேரிகளின் ஆரம்ப தினத்தில் அவர் பேசியபோதுகூட தமிழ் இசை இயக்கத்தை ஆதரித்தார். தியாகராஜ ஸ்வாமிகள் தமிழ் நாட்டைத் தான் சேர்ந்தவர்; அவரை நான் போற்றுகிறேன். ஆனாலும் தமிழ்ப் பாட்டைத்தான் என்னால் நன்றாக அநுபவிக்க முடிகிறது. முசிரி 'திருவடி சரணம்' பாடும்போது என் உள்ளம் உருகுவது போல் தெலுங்குப் பாட்டைக் கேட்கும் போது உருக வில்லை என்றார்.

ஸ்ரீ சத்தியமூர்த்தியைப் பற்றிய இன்னொரு தப்பபிப்பிராயம் பலருடைய மனதில் உண்டு என்பதை அறிவேன். அது அவர் சாதிப் பற்று உள்ளவர் என்பதுதான். உண்மையில், அவர் மதப்பற்று உள்ளவர்; மதத்தின் வெளிச் சின்னங்களிலே கூட அவருக்கு நம்பிக்கை உண்டு. யாராவது ஒரு பெண் குழந்தை நெற்றிக்கு இட்டுக் கொள்ளாமல் இருப்பதைப் பார்த்தால், "ஏன், அம்மா, பாழும் நெற்றியுடன் இருக்கிறாய்? குங்குமம் இட்டுக் கொண்டு வா!" என்பார்.

ஊரில் இருக்கும் நாட்களில் அவர் காலையில் எழுந்ததும் ஸ்நானம் செய்து வெண்பட்டு

உடுத்தி, விபூதியும் கீற்றுச் சந்தனமும் தரித்து, ஸ்ரீ ராம பட்டாபிஷேக படத்தின் முன்னால் உட்கார்ந்து, வால்மீகி ராமாயண பாராயணம் செய்வதை நான் பலமுறை பார்த்திருக்கிறேன்.

அவருடைய மத பக்தியையும், பழமைப் பற்றையும் பார்த்துவிட்டுத்தான் பலர் அவர் சாதிப் பற்று உள்ளவர் என்று தவறாக எண்ணினார்கள். உண்மையில், அவர் சாதிப் பற்று உள்ளவரா யிருந்தால், ஸ்ரீ காமராஜ், ஸ்ரீ அண்ணாமலைப் பிள்ளை போன்ற பல நண்பர்களின் நீடித்த நட்புக்கு உரியவரா யிருந்திருக்க முடியாது.

ஸ்ரீ சத்தியமூர்த்தியின் மரணத்தினால், சென்னை மாகாணத்தின் பொது வாழ்வில் ஒரு பெரிய சூன்யம் ஏற்பட்டிருக்கிறது. நாம் ஒவ்வொருவரும் சொந்த வாழ்க்கையில் ஒரு பெரிய நஷ்டத்தை அடைந்திருக்கிறோம்.

சென்ற இருபத்தைந்து வருஷமாக ஸ்ரீ சத்திய மூர்த்தி நம் ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் கலந்து போயிருந்தார். அவர் நம் ஊருக்கு வருகிறார் என்றால் அதில் ஒரு குதூகலம்; அவர் பொதுக் கூட்டத்தில் பேசுகிறார் என்றால், அதைக் கேட்கப் போவதில் ஒரு உற்சா

கம்; அவருடைய பேச்சைக் கேட்பதில் மகத்தான ஆனந்தம்; பிறகு அதைப் பற்றி நாம் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்வதில் எவ்வளவோ திருப்தி. சட்டசபையிலோ, பொதுக் கூட்டத்திலோ, அவர் பேசியது பத்திரிகையில் வந்திருக்கிறதென்றால், அன்று பத்திரிகையைப் பிரிக்கும்போதே ஆர்வம். "சத்தியமூர்த்தி வெளுத்திருக்கிறார், பார்த்தீரா?" என்று நண்பர்களைக் கேட்பதிலே மகிழ்ச்சி. இப்படியெல்லாம் ஸ்ரீ சத்தியமூர்த்தி நமது தினசரி வாழ்க்கையில் இடம் பெற்றிருந்தார். அந்த இடம் இப்போது சூன்யமாயிருக்கிறது.

பத்து வருஷத்திற்கு முன்னால் நடந்த சம்பவம். ஒரு நாள் இரவு பதினொரு மணி. அமாவாசை இருட்டு. கிராமாந்தரத்துச் சாலை ஒன்றில் முச்சந்தி. பெரியசாலையிலிருந்து பக்கத்திலுள்ள கிராமத்துக்குப் பிரிந்து செல்லும் சிறு பாதையைக் காட்டிக்கொண்டு கைகாட்டி மரம் ஒன்று நிற்கிறது. அதன் அடியில் ஏழெட்டு மனிதர்கள் நிற்கிறார்கள். அவர்களில் ஒருவர் கையில் லாந்தர் வைத்துக் கொண்டிருக்கிறார். புகை படைந்த அந்த லாந்தரிலிருந்து முணுக், முணுக் என்று வெளிச்சம் வருகிறது.

இந்த மனிதர்கள் யார்? ஏன் இந்த நள்ளிரவை நெருங்கும் நேரத்தில் சாலை ஓரத்தில் நிற்கிறார்கள்? ஒரு வேளை வழிப்பறிக் கொள்ளைக்

காரர்களோ? யாராவது பெரிய பணக்கார வீட்டார் கல்யாணத்துக்குப் போகிறார்களோ? அவர்களை வழிப்பறி செய்ய இவர்கள் நிற்கிறார்களோ?

ஆம்! நாம் சந்தேகப்பட்டது சரியாய்ப் போச்சே! அதோ ஒரு மோட்டார் வருகிறது. இல்லை, இரண்டு மோட்டார்கள் வருகின்றன! சாலை ஓரத்தில் நின்றவர்கள் சட்டென்று சாலையின் மத்தியில் போய் நிற்கிறார்கள். மோட்டார் முகப்பு விளக்குகளின் வெளிச்சம் பளீரென்று விழுந்து, கண்களைக் குருடாக்குகிறது. ஆயினும் இவர்கள் நகரவில்லை. கைகளை மேலே தூக்கிக் கொண்டு எல்லாரும் சேர்ந்து சத்தம் போடுகிறார்கள்!

"மகாத்மா காந்திக்கு ஜே!"

"வந்தே மாதரம்!"

"பாரதமாதாவுக்கு ஜே!"

ஓகோ இவர்கள் தாய்நாட்டின் பெயரைச் சொல்லிக்கொண்டு பணக்காரரைக் கொள்ளையடிக்கும் புரட்சிக் கூட்டத்தாரா, என்ன?

இதோ முதலில் வந்த கார் திடீரென்று 'பிரேக்' போட்டதனால் ஏற்படும் பயங்கரமான 'வீல்' சத்தத்துடன், சாலைமத்தியில் ஜனக் கூட்டத்தினருகில் வந்து நிற்கிறது. பின்னால் வந்த காரும் அப்படியே நிற்கிறது.

ஜனக்கூட்டம் இரண்டு கார்களையும் சூழ்ந்து கொள்கிறது.

மறுமடியும் "மகாத்மா காந்திக்கு ஜே!" என்ற கோஷங்கள்.

முதல் வண்டியில் முன்னால் உட்கார்ந்திருந்தவருக்கும், சாலையில் நின்ற கூட்டத்தின் தலைவருக்கும் பின்வரும் சம்பாஷணை நடக்கிறது. "சார், சார்! கட்டாயம் நீங்கள் மணலூர்ப் பேட்டைக்கு வந்துவிட்டுப் போகவேணும். இங்கிருந்து மூன்றே மைல்தான் இருக்கிறது."

"முடியவே முடியாது. அவரும் மனுஷர்தானே ஐயா? அவரை ஒரே நாளில் கொன்றுவிடுவதா?"

"அப்படிச் சொல்லக்கூடாது. ஜனங்கள் இன்று சாயங்காலத்திலிருந்து காத்துக் கொண்டிருக்கிறார்கள். மேடை, பந்தல் எல்லாம் போட்டு வைத்திருக்கிறோம்."

"உங்கள் மேடைக்கும் பந்தலுக்கும் தலைவரைப் பலி கொடுக்க வேண்டும் என்கிறீர்களா?"

"அப்படியெல்லாம் சொல்லக்கூடாது. எல்லாரும் ரொம்ப ரொம்ப ஆவலாயிருக்கிறார்கள்........"

"ஆவலா யிருப்பவர்கள் அடுத்த ஊருக்கு வருவதற்கு என்ன? இப்போது மணி என்ன தெரிகிறதா? பன்னிரண்டு அடிக்கப் போகிறது. இன்றைக்கு மொத்தம் 21 கூட்டத்தில் பேசியிருக்கிறார்........"

"இருபத்தொன்றோடு இன்னும் ஒன்றுதானே ஸார்! எதிலும் ஒற்றைப்படை உதவாது, ஸார்! இருபத்திரண்டா யிருக்கட்டும்."

"முடியவே முடியாது."

"ஸார்! ஸார்! மணலூர்ப்பேட்டையிலும் பக்கத்து கிராமத்திலும் மொத்தம் 120 வோட்டுகள். எல்லாம் எதிர்க்கட்சிக்குப் போய்விடும்........"

"இதென்ன இப்படி நெஞ்சிரக்க மில்லாமல் பேசுகிறீர்களே? அவருக்கு மூல ரோகம் ஐயா! சரியாக உட்கார முடியாமல் தவிக்கிறார்! ........"

"நாற்காலியில் மெத்தை போட்டு வைத்திருக்கிறோம். உட்கார முடியா விட்டால் நின்று கொண்டே நாலு வார்த்தை பேசட்டும், ஸார்! அவர் முகத்தைக் காட்டினால் போதும்!"

"அதென்னமோ எனக்குத் தெரியாது; நீங்களே போய் அவரைக் கேட்டுக் கொள்ளுங்கள்........"

இச் சமயத்தில் பின்னால் வந்த காரிலிருந்து ஒரு கம்பீரமான குரல் கேட்கிறது.

"அப்பா! வெங்குசாமி! அங்கே என்ன கலாட்டா?— காரை நடுச்சாலையில் நிறுத்திக் கொண்டு!"

முன் வண்டியி லிருந்தவர் கீழே இறங்கிப் பின்னால் நின்ற காருக்குப் போகிறார்.

"பக்கத்தில் மூன்று மைலில் மணலூர்ப் பேட்டை என்ற கிராமத்துக்குப் போக வேணும் என்கிறார்கள். ஜனங்கள் சாயங் காலத்திலிருந்து காத்திருக்கிறார்களாம்."

"பின்னே, திருப்பிவிட்டேன் காரை! என்ன யோசனை!"

"உங்களுடைய உடம்பைப் பற்றித்தான் யோசனை., இன்றைக்கு 21 கூட்டத்தில் பேசியிருக்கிறீர்கள்........"

"இருபத்தொன்றோடு இன்னும் ஒன்று. இரட்டைப் படையா யிருக்கட்டும்! இந்த மாதிரி சந்தர்ப்பத்துக்கு இல்லாமல் தேகம் வேறு என்னத்திற்குத்தான் இருக்கிறது? விடச் சொல்லு காரை!"

உடனே சாலையில் காத்திருந்தவர்கள் குதூ கலத்துடன் "வந்தே மாதரம்" "மகாத்மா காந்திக்கு ஜே!" என்று கோஷிக்கிறார்கள்.

இரண்டு காரிலும் இரு புறத்திலும் தொத்திக் கொள்கிருர்கள். கார்கள் குறுக்குப் பாதையில் போகின்றன.

இரவு சரியாக நடுஜாமத்திற்கு மணலூர்ப் பேட்டையில் பொதுக் கூட்டம் நடைபெறுகிறது. வழிமறைத்து அழைத்துக் கொண்டு வரப்பட்ட தலைவர் மேடையில் நின்று பேசுகிருர்.

"என் அன்பார்ந்த தமிழ் நாட்டுச் சகோதர சகோதரிகளே!" என்று ஆரம்பிக்கிருர். ஆங்கில ஆட்சிமுறையையும் அதிகார வர்க்கத்தையும் பிய்த்துப் பிய்த்து வாங்குகிருர். அன்னிய அதிகாரவர்க்கத்தின் ஒத்துக்கு மத்தளம் போடும் ஜஸ்டிஸ் கட்சியை ஆழக் குழி தோண்டிப் புதைக்கிருர்.

"ஆகையால் மகா ஜனங்களே! உங்களுடைய வோட்டுகளை தேசீய மகாசபையான காங்கிரஸ் மகா சபைக்கே கொடுங்கள். மஞ்சள் பெட்டியில் உங்கள் வோட்டைப் போடுங்கள்" என்று முடிக்கிருர்.

இந்தத் தலைவர் யாரென்று தமிழ் நாட்டைச் சேர்ந்த எவருக்கும் நாம் சொல்லவேண்டியதில்லை. வேறு யார்? தீரர் சத்தியமூர்த்திதான்!

ஏழு வருஷத்துக்குப் பிறகு இன்னொரு சம்பவம்.

மத்திய மாகாணத்தில் ஒரு சின்ன ரயில்வே ஸ்டேஷன். ஸ்டேஷனில் போலீஸ் பந்தோபஸ்து தடபுடல் படுகிறது. ரயிலில் யார் வருகிறார்கள்? யாராவது கவர்னர் அல்லது கவர்னர் ஜெனரல் வருகிறாரா, என்ன?

ரயில் வந்து பிளாட்பாரத்தில் நிற்கிறது. வண்டிக்குள்ளே இருந்து முதலில் ஆயுத பாணிகளான போலீஸ் சேவகர்கள் இறங்குகிறார்கள்.

பிறகு கைதிகள் இறங்குகிறார்கள்.

"மகாத்மா காந்திக்கு ஜே!" என்ற கோஷம் எழுகிறது. ஆனால் ஸ்வரம் ஈனஸ்வரமா யிருக்கிறது.

வந்தவர்கள் எல்லாரும் தமிழ் நாட்டிலிருந்து — வேலூர் சிறைச்சாலையிலிருந்து— கொண்டுவரப்பட்ட தேசியக் கைதிகள். எல்லாரும் நெடுந்தூரப் பிரயாணத்தினால் களைத்துப் போனவர்கள். பலர் நோயில் அடிபட்டு மெலிந்தவர்கள்.

ஆயிரம் மேடைகளில் வீர கர்ஜனை புரிந்த தீரர் சத்தியமூர்த்தியும் அவர்களிலே ஒருவராக இருக்கிறார்.

ஆனால் ஏன் இப்படி இருக்கிறார்? அவருடைய முகத்திலே ஜொலித்த பிரகாசம் எங்கே? குரலிலே தொனித்த கம்பீரம் எங்கே? உடம்பிலே இருந்த தெம்பு எங்கே? நடையிலே காணப்பட்ட பெருமித மிடுக்கு எங்கே?

"ஐயோ! இவர்தானா சத்தியமூர்த்தி?" என்று சொல்லும்படி சிறைவாசமும் உடல் நோயும் சேர்ந்து அவரை இப்படி வாட்டி, மெலியச் செய்திருக்கின்றன!

'தேசபக்தி' என்ற பெருங் குற்றத்தைச் செய்ததற்காகச் சிறைப்படுத்தப்பட்ட அந்தக் கைதிகளை ஸ்டேஷனுக்கு வெளியே கொண்டு போகிறார்கள். இரண்டு போலீஸ் லாரிகள் அங்கே தயாராய் நிற்கின்றன.

கைதிகள் லாரிகளில் ஏற்றப்படுகிறார்கள். அவர்களுடைய படுக்கை முதலிய சாமான்களும் ஏற்றப்படுகின்றன.

கால்களையும் கைகளையும் தேகத்தையுமே ஒடுக்கிக் கொண்டு லாரியில் உட்காருகிறார்கள். இரண்டு பக்கத்திலும் ஆள் நெருக்கம். எதிரே காலை நீட்ட முடியாமல் உச்சிவரை சாமான்கள். பின்னால் இரும்புக் கம்பிகள்.

லாரிகள் போக ஆரம்பிக்கின்றன. படுமோசமான சாலை. பள்ளத்திலும் மேட்டிலும்

லாரி தூக்கித் தூக்கிப் போடுகிறது. எதிரே முழங்கால் முட்டி அடிபடுகிறது. பின்னால் முதுகெலும்பு அடிபடுகிறது.

சற்று நேரத்துக்கெல்லாம் மழை வருகிறது. 'சோ' என்று பிடித்துக்கொண்டு கொட்டு கொட்டு என்று கொட்டுகிறது.

தீரர் சத்தியமூர்த்தி தம் அருகிலுள்ள சகோதரக் கைதியைப் பார்த்துச் சொல்கிறார்:—

"அப்பா! அருணாசலம்! வேலூரிலிருந்து கிளம்புகிறபோதே சொன்னேனே? வட இந்தியச் சிறைக்கு மாற்றினால் நாம் திரும்பி உயிரோடு வரப்போவதில்லை என்று. அது சரியாய்ப் போச்சோ இல்லையோ? அம்ரோதி சிறைக்குப் போவதற்குள்ளேயே கொன்று விடுவார்கள் போலிருக்கிறதே!"

ஆம்; கொட்டுகிற மழையில், மோசமான சாலையில், போலீஸ் லாரியில் நூறு மைல் பிரயாணம் செய்து அமராவதி சிறைச் சாலைக்குப் போய்ச் சேர்வதற்குள்ளேயே ஸ்ரீ சத்தியமூர்த்தி பயந்தபடி ஆகிவிட்டது. அந்தப் பிரயாணத்திலே அவருடைய முதுகெலும்பு முறிந்துபோய் விட்டது; சிறைக்குள்ளே போனதும் படுத்த படுக்கையானார்!

சுமார் ஒரு வருஷத்திற்குப் பிறகு இன்னொரு காட்சி.

சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் ஸ்ரீ சத்திய மூர்த்தி படுத்திருக்கிறார்.

அவரைப் பார்ப்பதற்காக இரண்டு பழைய நண்பர்கள் வருகிறார்கள்.

ஆஸ்பத்திரி தாழ்வாரத்தில் அவர்கள் டாக்டரைச் சந்திக்கிறார்கள்.

“டாக்டர்! சத்தியமூர்த்தி எப்படி இருக்கிறார்? பிழைத்துக் கொள்வாரா?” என்று கேட்கிறார்கள்.

“பிழைப்பது ஏது? மனுஷருக்கு எப்படியோ ‘ஸ்பைனல் காலம்’ (முதுகெலும்பு) முறிந்து போயிருக்கிறது. உயிரோடிருந்த வரையில் லாபம்! ஆனால் இதைப்போய் அவரிடம் சொல்லாதீர்கள்!” என்கிறார் டாக்டர்.

நண்பர்கள் முகத்தில் புன்சிரிப்பை வரவழைத்துக் கொண்டு ஸ்ரீ சத்தியமூர்த்தி படுத்திருந்த அறைக்குள் பிரவேசிக்கிறார்கள்.

“வாருங்கள்!” என்று மெலிந்த குரலில் வரவேற்பு.

“உங்களுக்கு உடம்பு சுமாரா யிருக்கிறதே! என்னமோ என்று பயந்துகொண்டல்லவா வந்தோம்!” என்றார் ஒரு நண்பர்.

“ஆமாம்; முகத்திலே நல்ல களை இருக்கிறது. சீக்கிரம் சொஸ்தமாகி விடும்” என்றார் இன்னொரு நண்பர்.

ஸ்ரீ சத்தியமூர்த்தியின் முகம் உண்மையாகவே மலர்கிறது. சொல்கிறார்:—

“ஏதோ உங்கள் எல்லாருடைய வாக்கும் பலித்தால் சரிதான். எனக்கு இரண்டே இரண்டு ஆசை. இந்த நாட்டுக்குச் சுயராஜ்யம் வந்து பார்க்கவேண்டும். லக்ஷ்மிக்குக் கல்யாணம் செய்து பார்க்க வேண்டும். இந்த இரண்டு ஆசையும் நிறைவேறி விட்டால் போதும்! அப்புறம் உயிரைப்பற்றிக் கவலை இல்லை.”

இது நடந்து இரண்டு நாளைக்கெல்லாம் ஸ்ரீ சத்தியமூர்த்தி கண்ணை மூடினார். தாய் நாட்டின் தொண்டில் உயிர்த் தியாகம் செய்த வீர புருஷர்கள் எந்தப் புண்ணிய உலகத்துக்குப் போவார்களோ, அந்த உலகத்துக்கு அவரும் போய்ச் சேர்ந்தார்.

இருபத்தைந்து வருஷ காலம் அல்லும் பகலும் அனவரதமும் தேசத் தொண்டு செய்து இறுதியில் உயிரையும் தாய்நாட்டுக்காகத் தியாகம் செய்த தீரர் சத்தியமூர்த்தியைத் தமிழ்நாடு

என்றென்றைக்கும் மறக்கமுடியாது

காலம் இப்படியே இருந்துவிடாது. மறுபடியும் திருவல்லிக்கேணி கடற்கரையிலோ, காங்கிரஸ் மைதானத்திலோ, தேசியப் பொதுக் கூட்டங்கள் நடக்கும் நாட்கள் வரலாம். அப்போதெல்லாம் நமக்கு "ஸ்ரீ சத்தியமூர்த்தி இல்லையே?" என்ற எண்ணம் தோன்றும்; வயிறு பகீர் என்னும்.

ஸ்ரீ சத்தியமூர்த்தி ஞாபகச் சின்னம் ஏதாவது ஏற்படுமோ, என்னமோ தெரியாது. ஆனால் ஞாபகச் சின்னம் எதுவும் இல்லாவிட்டாலும் அவருடைய ஞாபகம் மட்டும் நமக்கு இருக்கத்தான் செய்யும். ஸ்ரீ சத்தியமூர்த்தி போன வழியை நாமும் பின்பற்றும் காலம் வரும் வரையில் நமக்கு அவருடைய ஞாபகம் இல்லாமற் போகாது.

# கம்பரும் நானும்

கம்பரும் நானும் என்ற தலைப்புடன் ஒரு கட்டுரை எழுதவேண்டுமென்னும் எண்ணம் எனக்கு வெகு காலமாக உண்டு. கம்பர் என்னைப் படுத்தி வைத்திருக்கிற பாட்டுக்கு, அவர் மேல் பழிக்குப் பழி வாங்க இந்த ஒரு வழிதான் எனக்கு இருக்கிறது. சமீபத்தில் தமிழ் நாட்டின் பல இடங்களிலும் கம்பர் விழாக் கொண்டாடப் பட்டதை முன்னிட்டு, என்னுடைய வெகுநாள் உத்தேசத்தை இப்போது நிறைவேற்றிக் கொள்ள விரும்புகிறேன்.

முதன் முதலில், "விநோத ரஸ மஞ்சரி" என்னும் புத்தகத்தில் கம்பரைப்பற்றி நான் படித்தேன். "கம்பரும் சோழனும்" "கம்பரும் ஒட்டக்கூத்தரும்" "கம்பர் ராமாயணம் பாடி அரங்கேற்றியது" முதலிய விஷயங்கள் படிப்பதற்கு ரஸமா யிருந்தன. ஆனால் அவற்றிலிருந்து கம்பரின் கவிதைச் சிறப்பைக் குறித்து ஒன்றுமே தெரிந்து கொள்ள முடியவில்லை.

சில காலத்துக்குப் பிறகு ஸ்ரீ வ. வே. சு. ஐயர் கம்பரைப்பற்றி எழுதிய சில கட்டுரைகளைப் படித்தேன். உலக மகா கவிகளுக்குள்ளே முதன்மை ஸ்தானம் கம்பருக்குத் தான் உரியது என்று அவர் அழுத்தமாகச் சொல்லி யிருந்தார். வால்மீகியையும், காளிதாஸனையும், ஹோமரையும், ஷேக்ஸ்பியரையும் விடக் கம்பன்தான் சிறந்த கவி என்றும் எழுதி யிருந்தார். அவ்வளவு பெரியவர் அவ்வளவு பிரமாதமாகச் சொல்லுகிறஅந்தக் கம்ப ராமாயணத்தை வாசித்துத் தான் விடவேண்டும் என்று தீர்மானித்தேன். ராமாயணம் வாசிக்க ஆரம்பிக்கிறவர்கள் முதலில் சுந்தரகாண்டம் படிக்க வேண்டும் என்னும் சம்பிரதாயத்தை யனுசரித்துக் கம்ப ராமாயணம் சுந்தர காண்டம் ஒன்றை விலைக்கு வாங்கினேன். பதவுரை, பொழிப்புரை, விரிவுரை, பாடபேதக் குறிப்பு—இவற்

றுடன் கூடிய பெரிய புத்தகம்; விலை ரூபாய் ஐந்தும் புத்தகத்தின் கனத்துக்கே கொடுக்கலாம்.

சுந்தர காண்டத்தில் முதல் படலம். "கடறுவு படலம்" சாதாரணத் தமிழில் "கடல்தாவு படலம்" அதைப் படிக்க ஆரம்பித்தேன். மூன்றாவது பாட்டிலேயே தலைவலி கண்டு விட்டது. ஏழெட்டுப் பாட்டு வாசிப்பதற்குள் தலை 'விண் விண்' என்று தெறிக்க ஆரம் பித்தது. அனுமார் எப்படியோ கடலைக் கடந்து விட்டார்; ஆனால் என்னால் 'கடறுவு படல'த்தைக் கடக்க முடியவில்லை. அடுத் தடுத்துப் பல நாள் முயன்றும் பயனில்லை.

* * *

பாட்டுக்குப் பொருள் விளங்குவது கஷ்டமா யிருந்தது என்பதை மட்டும் நான் சொல்ல வில்லை. கஷ்டப்பட்டு அர்த்தம் தெரிந்து கொண்ட பிறகு ஏதேனும் ரஸம் இருக்க வேண்டுமல்லவா?

கம்பனுடைய பாட்டைக் கவிதை யென்று சொல்லலாமா என்பதே எனக்குச் சந்தேக மாகி விட்டது. உண்மையான கவிதை ஒன்றைப் படித்தோமானால், அதையே திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்க

ஆசை உண்டாக வேண்டும்; சொல்லும் போது செவிக்கின்பம் தருவதோடு விஷயம் உள்ளத்தைக் கவர வேண்டும். அதுதான் உண்மையான கவிதை. "கடறாவு படல"த்தில் அம்மாதிரி கவிதை இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. "கம்பனைப்போல் உலகத்திலேயே கிடையாது" என்று எல்லாரும் எதற்காகக் கொல்கிறார்கள் என்று ஆச்சர்யமாயிருந்தது. பிள்ளையாரின் தொப்புளில் விரலை விட்டு, அங்கிருந்த தேளினால் கொட்டப் பெற்றவர்கள் "ஆகா! என்ன வாசனை!" என்று வியந்த கதையைப்போல் அல்லவா இருக்கிறது.

சில வருஷ காலம் கம்பராமாயணம் — சுந்தர காண்டம் — சுகமாய்த் தூங்கிக் கொண்டிருந்தது. ஸரஸ்வதி பூஜையின்போது, எல்லாப் புத்தகங்களுக்கும் மேலே வைப்பதற்கு உபயோகப்பட்டது. இராமாயணம், புண்ணியக் கிரந்தம் அல்லவா?

ஸ்ரீ திரு. வி. கலியாண சுந்தர முதலியார் அவர்களின் கீழ் "நவசக்தி" பத்திரிகையில் சில வருஷம் வேலை பார்த்த பிறகு, மறுபடியும் கம்பராமாயணம் படிக்கலாமென்ற எண்ணம் உண்டாயிற்று. முன்னே தமிழறிவு போதாமை

யால் ஒருவேளை கம்பனை ரஸிக்க முடியாமற் போயிருக்கலாம்—இப்போது படித்தால் ஒரு வேளை அநுபவிக்க முடியலாம் என்றெண்ணி, குங்கும சந்தன அலங்காரங்களுடன் விளங்கிய சுந்தர காண்டத்தை மீண்டும் எடுத்தேன். இந்தத் தடவையும் 'கடலுவு படல'த்தைக் கடப்பது சாத்தியமாயில்லை. சட்டென்று ஒரு யோசனை உதித்தது. அனுமார் கடலைத் தாண்டியல்லவா கடந்தார்? நாமும் இந்தக் கடலுவு படலத்தைத் தாண்டி கடந்து விட்டாலென்ன ?

இந்த யோசனை தோன்றிய உற்சாகத்தில் சுமார் நூறு பக்கத்துக்குமேல் ஒரே தள்ளாக தள்ளினேன். அப்படித் தள்ளிய பிறகு வந்த பக்கம், காட்சிப் படலத்தில் ஒரு கட்டமாயிருந்தது. அசோக வனத்தில் சிறையிருந்த சீதை, இராம பிரானை எண்ணி உருகும் இடம்:—

"தெம்ம டங்கிய சேணிலம் கேகயர்
தம்ம டங்கை உன் தம்பிய தாமென
மும் மடங்கு பொலிந்த முகத்தினன்
வெம் மடங்கலை உன்னிவெ துப்புவாள்."

மேலேயுள்ள பாட்டில் இரண்டொரு வார்த்தைகளுக்கு அர்த்தம் தெரியாவிட்டாலும், சொல்லழகும் விஷயச் சிறப்பும் மனதைக் கவர்ந்து விட்டன. தெரியாத வார்த்தைகளுக்குப்

பொருள் தெரிந்துகொண்ட பின்னர் மகிழ்ச்சி அதிகமாயிற்று. அடுத்த பாட்டில் அத்தகைய கஷ்டங்கூட ஏற்படவில்லை.

"மெய்த்தி ருப்பதம் மேவென்ற போதினும்
இத்தி ருத்துறந்(து) ஏகென்ற போதினும்
சித்தி ரத்தின் அலர்ந்தசெந் தாமரை
ஒத்தி ருக்கும் முகத்தினை உன்னுவாள்."

இந்தப் பாடலைப் படித்ததும், "இது கவிதை தான்; கவிதையிலும் ஒப்புயர்வற்ற கவிதை" என்று தோன்றியது. மேலே போகப் போக, உருக்காட்டுப் படலம், நிந்தனைப் படலம், சூடாமணிப் படலம் இவற்றில் பல பாடல்கள் செவியையும் சிந்தையையும் கவர்வனவாயிருந்தன! அவற்றை மீண்டும் மீண்டும் படிப்பதற்கு ஆசையுண்டானதோடல்லாமல், பிறருக்குப் படித்துக் காட்டுவதற்கும் ஆசை உண்டாயிற்று.

1930-ல் கோயமுத்தூர் சிறையில் இருந்த போது இந்த ஆசையை ஒருவாறு நிறைவேற்றிக் கொண்டேன். அங்கே நாலைந்து இளம் அரசியல் கைதிகளைப் பிடித்து உட்கார வைத்து, "கம்பராமாயணம் கேளுங்கள்" என்றேன். முதலில் உற்சாகம் இல்லாமல் வந்தவர்கள் வர வர ரொம்பவும் உற்சாக மடைந்தார்கள். அவர்களில் சிலர் "பாட்டுக்களை

ஏன் விட்டு விட்டு வாசிக்கிறீர்கள்? ஆரம்பத்திலிருந்து தொடர்ச்சியாக வாசியுங்கள்'' என்று சொன்னார்கள். "பிற்பாடு நீங்களே சாவகாசமாகத் தொடர்ச்சியாய் வாசித்துக் கொள்ளுங்கள்'' என்று சொல்லி அவர்களைச் சமாதானப் படுத்தினேன்.

பின்னும் சில வருஷங்களுக்குப் பிறகு, ஸ்ரீ டி. கே. சிதம்பரநாத முதலியாரைப் பற்றிக் கேள்விப்பட்டேன். திரு பி. ஸ்ரீ. ஆச்சாரியார் தான் முதன் முதலில் அவரைப் பற்றிச் சொன்னார். டி. கே. சி. சிறந்த கவிதா ரஸிகர் என்றும், தமது வாழ்நாளையே கம்ப ராமாயண ஆராய்ச்சிக்கு அர்ப்பணம் செய்தவர் என்றும் தெரிந்தது. அவரைப் பார்க்க வேண்டுமென்ற மனோரதம் சீக்கிரத்திலேயே நிறைவேறியது. முதல் நாள் சந்திப்பில், டி. கே. சி. ஒரு கம்பன் பாட்டைச் சொன்னார். அசோக வனத்தில் சீதை ராமனை நினைந்து உருகும் கட்டந்தான்.

"ஆழ நீர்க்கங்கை அம்பி கடாவிய
ஏழை வேடனுக்(கு,) 'எம்பி நின் தம்பி, யான்
தோழன், மங்கை கொழுந்தி' எனச்சொன்ன
வாழி நண்பினை உன்னி மயங்குவாள்.''
[அம்பி கடாவிய — தோணி செலுத்திய]

டி. கே. சி. இந்தப் பாட்டைப் பூர்வ பீடிகையுடன், ஒவ்வொரு வரியையும் ஒரு தடவைக்குப் பல தடவையாக நிதானமாகவும் மனதில் நன்கு பதியும்படியும் சொன்னார்.

அவர் சொல்லி முடித்ததும், "இந்தப்பாட்டில் ஏதாவது மாறுதல் செய்திருக்கிறதோ ?" என்று கேட்டேன்.

டி. கே. ஸி. புன்னகையுடன், "எப்படித் தெரிந்தது?" என்று கேட்டார்.

" இந்தப் பாட்டை முன்னமே நான் படித்திருக்கிறேன். ஓரிடத்தில் ரொம்ப தடங்கலாயிருந்தது. நீங்கள் சொல்லும்போது அந்தத் தடங்கலைக் காணோம்" என்றேன்.

" ஆமாம்; ஒரு சிறு மாறுதல் செய்திருக்கிறது" என்று டி. கே. ஸி. சொல்லி அவருடைய புத்தகத்தை எடுத்துக் கொடுத்தார்.

"ஏழை வேடனுக்கு எம்பி நின் தம்பி நீ" என்று புத்தகத்தில் அச்சிடப்பட்டிருந்தது. இதில் " நீ " என்பதை, " யான் " என்று அடித்து எழுதியிருந்தது.

இந்தச் சிறு வார்த்தை மாறுதலினால் விஷயம் எவ்வளவோ தெளிவாகி விட்டது. இதன் மேல் நான் சற்றுத் தைரியமடைந்து, "கடறுவு

படல"த்தைப் பற்றிய என்னுடைய அநுபவத்தைச் சொன்னேன்.

"கடறுவு படலத்தில் நீங்கள் கஷ்டப்பட்டதில் ஆச்சரியமில்லை" என்றார் டி. கே. ஸி.

"ஏன்?" என்று கேட்டேன்.

" அது கம்பன் பாட்டல்ல " என்று அழுத்தமாய்க் கூறினர். அதை அவர் சொன்ன தோரணையில், யாராவது அதைக் கம்பன் பாட்டுத்தான் என்று சொல்ல முன் வந்தால் அவர்களை ஒரு கை பார்த்துவிட அவர் தயாராயிருக்கிறார் என்பது தெரிய வந்தது.

ஆனல் நான் அப்படி யொன்றும் அவருடன் சண்டை பிடிக்கத் தயாராயில்லை. உண்மையில், "கடறுவு படலம் கம்பன் பாட்டு அல்ல" என்று சொன்னதும், என் தலையில் சுமந்திருந்த மூட்டைகளில் ஒரு பெரிய மூட்டை கீழே இறங்கியதாகத் தோன்றியது.

அன்றைக்குப் பிறகு நானே கம்ப ராமாயணம் வாசிப்பது என்பதை அநேகமாக விட்டுவிட்டேன். சந்தர்ப்பம் கிடைத்த போதெல்லாம் டி. கே. ஸி. யைச் சந்தித்து அவரிடம் இராமாயணப் பாடல்களைக் கேட்பதுடன் திருப்தியடைந்தேன். இதனல் நான் அடைந்த நன்மைகளைச் சொல்லி சாத்தியமில்லை. கம்பன் பாட்டல்லாத பாடல்களை வைத்துக்கொண்டு,

அவற்றுக்கு அர்த்தம் செய்வதிலும், அவற்றில் ஏதாவது வெளிக்குத் தெரியாத அழகு மறைந்து கிடக்கிறதோ என்று யோசிப்பதிலும், மண்டையை உடைத்துக் கொள்ளும் அவசியம் இல்லாமல் போயிற்று.

இதுமட்டுமல்ல; டி. கே. ஸி. கம்பன் பாடல்களை—ஏன், எல்லாக் கவிதைகளையுந்தான்—படித்துக் காட்டும் விதமே ஒரு தனி மாதிரி. அவரிடம் கேட்ட பிறகுதான் பாடல்களை எப்படிப் படிக்க வேண்டுமென்று தெரிந்தது. அம்மாதிரி படித்தால்தான் கவிதைகளின் ஓசை இன்பத்தைப் பூரணமாய் அநுபவிக்க முடியும் என்றும் கண்டேன்.

இன்னும், உண்மையான கம்பன் பாட்டுக்களிலும் எங்கேயாவது ஒரு இடத்தில் அழகுக் குறைவோ, பொருள் சிதைவோ இருப்பதுண்டு. ஆயிரம் வருஷத்துக்கு மேலாக ஓலைச் சுவடிகளில் எழுதப்பட்டு வந்த பாடல்களில் பிழைகள் ஏற்பட்டிருப்பது இயல்புதான். சாதாரணமாய் ஒவ்வொரு பாட்டுக்கும் ஏழெட்டு பாட பேதங்கள் கொடுக்கப்படுவதிலிருந்தே இம்மாதிரி பிழைகள் பல ஏற்பட்டுத்தான் இருக்க வேண்டுமென்று ஊர்ஜிதமாகிறது. ஒரு சிறு திருத்தம் செய்து விட்டால் அதன் அழகு பரிபூரணமாகிவிடும். அப்படிப்பட்ட திருத்தங்களை எல்லாருமே செய்ய முடி

யாது. வாழ்நாளெல்லாம் கவிதை ஆராய்ச்சியில்—முக்கியமாகக் கம்பன் ஆராய்ச்சியில்—செலவிட்ட ஒருவர் தான் அம்மாதிரி திருத்தங்களைச் செய்ய முடியும்.

அத்தகைய தகுதியை நான் அறிந்தவர்களுக்குள்ளே டி. கே. ஸி. ஒருவரிடந்தான் கண்டேன். கம்பன் பாட்டில் டி. கே. ஸி. ஒரு திருத்தம் செய்தாரானல், பாட்டின் அழகையும் பொருள் வளத்தையும் அது நிச்சயம் மிகுதிப் படுத்துவதாகவே இருக்கும். "கம்பன் இப்படித்தான் பாடியிருக்கவேண்டும்" என்று தைரியமாகச் சொல்லும்படி இருக்கும். டி. கே. ஸி. ஊகத்தினல் செய்த சில திருத்தங்களுக்கு, பின்னல் கிடைத்த ஓலைச் சுவடிகளில் ஆதாரம் கிடைத்திருக்கின்றன என்றும் நண்பர்களின் மூலம் தெரிய வந்தது.

நாளாக ஆக, டி. கே. ஸி. யின் கவிதைப் பண்பில் எனக் கேற்பட்ட நம்பிக்கையும் மதிப்பும் வளர்ந்துகொண்டே வந்தன. உண்மையான கவிதையின் உருவத்தையும் ஆத்மாவையும் நன்குணர்ந்து, அவற்றைப் பிறருக்கும் புலப்படும்படி காட்டக்கூடியவர் தமிழ் நாட்டிற்குள் டி. கே. ஸி. யைப்போல் வேறு யாருமில்லை என்று கருதத் தொடங்கினேன். டி. கே. ஸி. யிடம் சில காலம் பழகிய பிறகு நமது தலைவர் ராஜாஜியும் அதே அபிப்பிராயத்துக்கு வந்தார்கள். பிறகு கேட்கவேண்டுமா? டி. கே. ஸி. யினல் தள்ளப்பட்ட ஒரு

பாட்டைக் கம்பனே நேரில் வந்து "இதை நான்தான் எழுதினேன்" என்று சொன்னாலும், என்னால் ஒப்புக்கொள்ள முடியாது! —அவ்வளவு நம்பிக்கை டி. கே. ஸி. யின் கவிதை உணர்ச்சியில் ஏற்பட்டது.

சென்ற வருஷ ஆரம்பத்தில் நான் சிறை செல்ல ஆயத்தமானபோது டி. கே. ஸி. யிடம், "சிறையில் நான் எத்தனை காலம் கழிக்கும்படி இருக்குமோ தெரியாது. அத்தனை காலமும் கம்பனை விட்டுப் பிரிந்திருக்க முடியுமா? ஒன்று, நீங்களும் சிறைக்கு வாருங்கள்; இல்லாவிட்டால், கம்பராமாயணம் ஏதாவது ஒரு காண்டம் திருத்திக் கொடுங்கள்" என்றேன்.

"ஏற்கெனவே, உங்களுக்காக அயோத்தியா காண்டம் திருத்தி வைத்திருக்கிறேன்" என்று சொல்லி, டி. கே. ஸி. எடுத்துக் கொடுத்தார்.

அந்தக் காண்டத்தில் கிட்டத்தட்ட பாதிப் பாட்டுக்களுக்கு, — இம்மாதிரி கழித்தல் குறி போட்டிருந்தார்! கம்பன் பாட்டு அல்ல என்பதற்கு அது அடையாளம். மற்றைப் பாடல்களில் சில வார்த்தைகள் திருத்தியிருந்தார்.

சிறையில் சாவகாசமாக இந்தத் திருத்தங் களைப் பற்றி ஆராய்ச்சி செய்ய முடிந்தது. திருத்திய பாட்டுக்கும் அச்சிட்டபடி உள்ள பாட்டுக்கும் சில சமயம் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம் இருந்தது. இத்தனைக்கும் ஒரு வார்த்தைதான் திருத்தப்பட்டிருக்கும். ஒரு உதாரணம் தருகிறேன்:—

இராமருக்குப் பட்டாபிஷேகம் என்று அறிந் ததும், அயோத்தி ஜனங்கள்— ஸ்திரீ புருஷர் கள் எல்லாரும்—மகிழ்ச்சிக் கடலில் ஆழ்கிறார் கள். எப்படி மகிழ்கிறார்கள் என்பதைக் கம்பர் வர்ணிக்கிறார்:

**"மாதர்கள் வயதின் மிக்கார்**
**கோசலை மனத்தை ஒத்தார்;**
**வேதியர் வசிட்டன் ஒத்தார்;**
**வேறுள மகளிர் எல்லாம்**
**சீதையை ஒத்தார்; அன்னாள்**
**திருவினை ஒத்தாள்; அவ்வூர்**
**சாதன மாந்தர் எல்லாம்**
**தயரதன் தன்னை ஒத்தார்."**

அதாவது, வயது முதிர்ந்த மாதர்கள் கோசலையை ஒத்தவர்களாகி, தத்தம் மகனுக்கே பட்டாபிஷேகம் நடக்கப் போவதாக எண்ணி மகிழ்கிறார்கள்; இளம் பெண்கள் சீதையை ஒத்தவர்களாகி, தத்தம் கணவன்மார்களே முடிசூட்டிக் கொள்ளப் போவதுபோல் ஆனந் தப் படுகிறார்கள்........இப்படிக் கம்பர் சொல் லிக்கொண்டு போகிறார்.

அச்சிட்ட பாடலில், முதல் வரி.

"மாதர்கள் கற்பின் மிக்கார்
கோசலை மனத்தை ஒத்தார்"

என்றிருக்கிறது. நேயர்களுக்கு என்ன தோன்றுகிறது? "கற்பின்" என்பதை "வயதின்" என்று மாற்றியது ரொம்ப சரி என்று தோன்றுகிறதோ, இல்லையோ? வயதானவர்கள் கோசலையையும், இளம் பெண்கள் சீதையையும் ஒத்தார்கள் என்று சொல்வது எவ்வளவு உலக இயற்கைக்குப் பொருத்தமாயிருக்கிறது? இதற்குப் பதிலாக, "கற்பின் மிக்கார்" என்று முதல் அடியில் வைத்துக் கொண்டோமானால், "வேறுள மகளிர்" என்பதற்கு "கற்பு இல்லாதவர்" என்றல்லவா அர்த்தம் கொள்ள வேண்டி வருகிறது? இது அனர்த்தமாக வல்லவா முடிகின்றது? அயோத்திமா நகரின் பெண்களைக் கற்புள்ளவர்கள் என்றும் கற்பில்லாதவர்கள் என்றும் கம்பன் பிரிவினை செய்திருப்பானா? "நைடதம்" "சீவக சிந்தாமணி" ஆசிரியர்கள் கூட அவ்வளவு பயங்கரமான பிரிவினையைச் செய்திருக்க மாட்டார்களே?

சரி; டி. கே. ஸி. யின் திருத்தங்களின் முக்கியத்தைக் காட்டுவதற்கு இந்த ஒரு உதாரணமே போதும். ஆனால் அவர் தள்ளிவிட்ட பாடல்களைப் பற்றி என்ன? கிட்டத்தட்ட, பாதிப் பாடல்களையா தள்ளி விடுவது? என்ன அநியாயம்? எப்படித்தான் அவருக்கு மனது வந்தது?

நம்மில் அநேகருக்கு இது சங்கடமாய்த்தா ணிருக்கும். நம்முடைய உடைமைப் பற்றுனது அப்படிச் செய்து விடுகிறது. வீட்டிலுள்ள கிழிந்த கூடைகள், பீத்தல் முறங்கள் ஆகிய வற்றைக் கூட வெளியில் எறிய நமக்கு மனது வருவதில்லை. அப்படி யிருக்க, கம்ப ராமாய ணத்தில் படலம் படலமாகத் தள்ளி விடுவது என்றால்? — மனதுக்குக் கஷ்டம் தரும் விஷயந்தான்.

ஆயினும், இதற்கும் ஒரு உதாரணம் சொல்ல விரும்புகிறேன். டி. கே. ஸி. திருத்திக் கொடுத்த அயோத்தியா காண்டத்தைச் சிறை யில் நான் படித்ததோடு, சில நண்பர்களுக் கும் படித்துக் காட்டினேன். இராமர் வனம் செல்கிறார் என்ற செய்தியைக் கேட்டு அயோத்தி ஜனங்கள் துயருறும் கட்டம். "மண் செய்த பாவம் இது!" என்கிறார்கள் சிலர். நமது "கண் செய்த பாவம் கடலிற் பெரிது!" என்கிறார்கள் சிலர். "ஆளான் பரதன் அரசு" என்பவர்கள் வேறு சிலர். "கையால் நிலந்தடவிக் கண்ணீர் மெழுகுவார்" இன்னும் சிலர். இம்மாதிரி அருமையான உணர்ச்சி ததும்பும் பாட்டுக்களை வாசித்துக் கொண்டு வந்து, பின் வரும் பாட்டையும் படித்தேன்:

**"கிள்ளையொடு பூவை யழுத கிளர் மாடத்து**
**உள்ளுறையும் பூசை யழுத உருவறியாப்**
**பிள்ளை அழுத பெரியோரை என்சொல்ல**
**வள்ளல் வனம்புகுவான் என்றுரைத்த மாற்றத்தால்."**

இதைப் படித்தவுடனே, "இதென்ன மட்டமா யிருக்கிறதே!" என்று, கேட்டுக் கொண்டிருந் தவர்கள் அவ்வளவு பேரும் சொன்னார்கள்! இந்தப் பாட்டுக்கு டி. கே. ஸி. கழித்தல் குறி போட்டிருந்தார். ஆனால் வேறு சில கம்ப ராமாயண ரஸிகர்கள் இதைப் பிரமாதமாகச் சொல்வது வழக்கமாதலால், வேண்டுமென்றே அதை நான் படித்தேன். அது வரையில் நல்ல கவிதைகளையே கேட்டுக்கொண்டு வந்த வர்களாதலால் உடனே "மட்டம்" என்று சொல்லி விட்டார்கள்! டி. கே. ஸி. யின் கழித்தல் குறியை அவர்களுக்குக் காட்டி மிகவும் திருப்தி யடைந்தேன்.

சிறையிலிருந்து வெளியில் வந்து டி. கே. ஸி. யைப் பார்த்ததும், "கம்ப ராமாயணத்தி லிருந்து கம்பன் பாட்டுக்களைப் பொறுக்கி உடனே புத்தகம் போட்டுவிட வேண்டும். இந்தக் காரியத்தை நீங்கள் செய்யாவிட்டால் தமிழர்களுக்குப் பெரிய துரோகம் செய்த தாகும்" என்று சொன்னேன். இன்னும் பல நண்பர்களும் வற்புறுத்தினார்கள். தமிழர் களுக்கு நல்லகாலம் பிறந்தது. டி. கே. ஸி. முனைந்து வேலை செய்யத் தொடங்கினார். 'கம்பராமாயணம்' பாலகாண்டம்-அயோத்யா காண்டம் வெளிவந்து விட்டது. பாலகாண்

டத்தில் 169 பாட்டுக்கள்; அயோத்தியா காண்டத்தில் 553 பாட்டுக்கள். அந்த இரண்டு காண்டத்திலும் உள்ள உண்மையான கம்பன் பாட்டுக்கள் இவை. டி. கே. ஸி. தள்ளிவிட்ட பாடல்களைப் பற்றி ஏதாவது சந்தேகம் இருந்தால் இலக்கிய ஆராய்ச்சி யாளர்கள் மற்றப் பதிப்புகளை பார்த்துக் கொள்ளலாம். உங்களுக்கும் எனக்கும் இந்த 722 பாட்டுக்கள் எதேஷ்டம். இவற்றை நன்கு படித்து அநுபவிப்பதற்கு வேண்டிய உதவி கள் எல்லாம் இப் புத்தகத்தில் இருக்கின்றன. கவிதையையும் கம்பனையும் பற்றி 45 பக்கம் கொண்ட விஸ்தாரமான டி. கே. ஸி. யின் முகவுரை இருக்கிறது. ஒவ்வொரு பாட்டுக் கும் முன்னுரையும் பொருள் விளக்கமும் இருக்கின்றன. "சீரும் சந்தமும்" என்ற முதல் அநுபந்தத்தில், பாட்டை எவ்விதம் படிக்க வேண்டும் என்று தெளிவாகக் கூறப் படுகிறது. இரண்டாவது அநுபந்தத்தில் டி. கே. ஸி. யின் திருத்தங்கள் எல்லாவற்றுக் கும் ஜாபிதா இருக்கிறது. அவற்றை வேறு கம்பராமாயணப் பதிப்புகளுடன் ஒப்பிட்டுத் திருத்தங்களின் அவசியத்தைத் தெரிந்து கொள்ளலாம்.

# தெய்வமானார்

கஸ்தூரிபாய் அன்னை விடுதலை அடைந்தார்!

பிரிட்டிஷ் சர்க்காரின் சிறையிலிருந்தும் உடம்பாகிய சிறையிலிருந்தும் அவர் ஒருங்கே விடுதலை பெற்றார்!

புண்ணிய சிவராத்திரி யன்று அவருடைய புனித உயிர் மண்ணுலகை நீத்துப் பொன்னுலகை அடைந்தது!

அன்னையின் தூய உடல் அக்கினிக்கு இரையாயிற்று. அவருடைய எலும்புகள் கங்கா நதியில் கரைக்கப்பட்டன. அக்கினியும் கங்கையும் மாசு நீங்கிப் பரிசுத்தமானார்கள். அன்னையின் வரவினாலே அமரர் உலகமும் புதிய புனிதத்தை அடைந்தது!

ஹிந்து தர்மத்தைச் சேர்ந்த பத்தினிப் பெண்கள் பெரிதும் விரும்பும் மரணப் பேற்றை ஸ்ரீமதி கஸ்தூரிபாய் பெற்றார்.

நெற்றியில் குங்கும திலகத்துடன் பதியின் மடியில் தலை வைத்துப் படுத்தவண்ணம் அவர் ஆவி பிரிந்தது.

பாரத நாட்டு பத்தினி தெய்வங்களான சீதை, சாவித்திரி, சந்திரமதி, கண்ணகி ஆகியவர்களைப்போல், கஸ்தூரிபாய் அன்னையும் இன்று தெய்வமாக விளங்குகிறார்!

இமயமலையும் கங்கா நதியும் உள்ள வரைக்கும் கஸ்தூரிபாயின் பெயரும் இந்நாட்டில் நிலைத்து நிற்கும் என்பதில் சந்தேகமில்லை.

சின்னஞ்சிறு வயதில் கன்னி கஸ்தூரிபாய் ஸ்ரீ மோகன்தாஸ் கரம்சந்த் காந்திக்கு மாலையிட்டார். அன்று முதல் ஆவி பிரியும் வரையில் உண்மையான வாழ்க்கைத் துணைவியாகவும், ஸகதர்மிணியாகவும், பதிக்கேற்ற சதியாகவும் விளங்கி வந்தார்.

கஸ்தூரிபாய் ஏட்டுக் கல்வி அதிகம் கற்கவில்லை. ஆனால், ஆயிரக்கணக்கான வருஷங்களாக வாழையடி வாழையாய் வளர்ந்து வந்த பாரத நாட்டின் பண்பாடு—கேள்விச்செல்வம் — அவரிடம் குடிகொண்டிருந்தது. இதன்

காரணமாகக் கல்வி யறிவிற் சிறந்த கணவருடன் சமத்துவ உணர்ச்சியுடன் அவர் வாழ்க்கை நடத்த முடிந்தது.

மகாத்மா காந்தி அன்னை கஸ்தூரிபாயைப் படுத்தி வைத்த கஷ்டங்களுக்கு அரிச்சந்திரன் சந்திரமதியைப் படுத்தி வைத்த கஷ்டங்களைத் தான் ஒப்பிடக்கூடும்.

அரிச்சந்திரன் சத்தியத்தைக் காப்பதற்காகத் தன்னையும் கஷ்டப்படுத்திக் கொண்டு, சந்திரமதியையும் சொல்லொணுத கஷ்டங்களுக்கு உள்ளாக்கினுன்.

மகாத்மா காந்தியும் கடினமான சத்திய சோதனையில் ஈடுபட்டு அளவில்லாத கஷ்டங்களைத் தமக்குத் தாமே வருவித்துக் கொண்டார்.

சத்திய சோதனையில் உள்ள ஆர்வத்திஞல் மகாத்மாவுக்கு அந்தக் கஷ்டங்களையெல்லாம் சகிப்பது சாத்தியமாயிருந்தது.

ஆனல் அன்னை கஸ்தூரிபாயோ, அத்தகைய ஆர்வம் எதுவுமில்லாமலே, பதியின் கஷ்டங்களையெல்லாம் தாமும் அநுபவிக்க வேண்டியிருந்தது.

ஹிந்துமத சம்பிரதாயங்களில் அளவிலாத நம்பிக்கை ஸ்ரீமதி கஸ்தூரிபாயின் இரத்தத்திலே குடிகொண்டிருந்தது. ஆயினும், பதிபக்தியாகிய பலிபீடத்தில் அந்த நம்பிக்கையையும் கஸ்தூரிபாய் பலி கொடுத்தார்.

பாரிஸ்டர் காந்தி மேனுட்டு நவநாகரிகத்தை மேற்கொண்டபோது கஸ்தூரிபாயும் அந்த நவநாகரிக வாழ்வைப் பின் பற்றினுர். சத்திய சோதகர் காந்தி, எளிய வாழ்க்கையைக் கைக் கொண்டபோது கஸ்தூரிபாயும் எளிமையை மேற்கொண்டார். உணவுப் பரிசோதகர் காந்தி, கடலைக் கொட்டையும் பச்சைக் கீரை யும் அருந்தியபோது கஸ்தூரிபாயும் அதே உணவை அருந்தினுர் !

பாரிஸ்டர் காந்தி பங்களாவில் வசித்த போது கஸ்தூரிபாயும் பங்களாவில் வசித்தார். மகாத்மா ஆசிரமம் ஸ்தாபித்தபோது கஸ்தூரி பாயும் ஆசிரமத் தலைவியாகிச் சமையல் தொண்டை மேற்கொண்டார்.

ஸ்ரீ மோகன்தாஸ் காந்தி கப்பல் ஏறியபோது கஸ்தூரிபாயும் கப்பல் ஏறினுர். தீனபந்து காந்தி தீண்டாமையைக் கொன்று ஹரிஜனங் களுக்குத் தொண்டு செய்தபோது, கஸ்தூரி பாயும் தம் இரத்தத்தில் ஊறிப்போயிருந்த அருவருப்பைப் போக்கிக்கொண்டு ஹரிஜனத் தொண்டில் ஈடுபட்டார்.

மகாத்மா காந்தி சத்யாக்கிரஹப் போர் தொடங்கிச் சிறை புகுந்தபோது கஸ்தூரி பாயும் சிறை புகுந்தார்.

மேற்கூறியதை யெல்லாம் விட, கடும் சோதனையையும் மகாத்மா காந்தி அன்னை கஸ்தூரி பாய்க்கு ஏற்படுத்தினர்.

"இருபத்தோரு நாள் உண்ணுவிரதம்" என்றும் "சாகும் வரையில் உண்ணுவிரதம்" என்றும் மகாத்மா கடும் விரதம் மேற்கொண்ட போதெல்லாம், நாளுக்கு நாள் அவர் மெலிந்து எலும்புந் தோலுமாகி வரும் கொடூரக்காட்சியை அன்னை கஸ்தூரிபாய் பார்த்துச் சகித்துக் கொண்டிருக்க வேண்டியதாயிருந்தது.

மகாத்மாவின் கட்டளையினாலும் அவருக்குச் சிசுருஷை செய்ய வேண்டிய அவசியத்தினாலும் அவரை உண்ணுவிரதத்தில் பின்பற்ற முடியவில்லை.

அப்போதெல்லாம் உயிர் வாழ்வதற்கு வேண்டிய அளவு ஒரு வேளை அரை வயிறு உணவு அருந்திக்கொண்டு அந்தக் கற்பரசி கணவருக்குப் பணிவிடை செய்தார்.

ஹிந்து சம்பிரதாயங்களில் கஸ்தூரிபாய்க்கிருந்த அழியா நம்பிக்கை காரணமாக, மகாத்மாவின் உண்ணுவிரதங்கள் அவருக்கு இன்னொரு பெருங் கவலையை யளித்தது. "ஐயோ! வேண்டுமென்று உயிரை மாய்த்துக் கொள்கிறவர்களின் ஆவி அமைதியடையாமல் பிசாசாக அலையும் என்கிருர்களே? இவருக்கு அப்படி நேராமல் இருக்க வேண்டுமே?" என்று பதறினர்.

ஆனால் அன்னை கஸ்தூரிபாயின் மாங்கல்ய பலம் மகாத்மாவை ஒவ்வொரு தடவையும் உண்ணாவிரத விபத்திலிருந்து தப்புவித்தது.

அன்று சத்யவானுடைய உயிரைச் சாவித்திரி காத்ததுபோல் கஸ்தூரிபாயின் தவ வலிமையே காந்திமகானின் உயிரைக் காப்பாற்றியது.

"பதிக்கு முன்னால் நான் உயிர் விட வேண்டும்!" என்ற அவருடைய மனோரதம் கடைசியாக நிறைவேறி விட்டது.

அன்னை கஸ்தூரிபாய் வாழ்க்கையிலேயே பாக்கியசாலியா யிருந்ததுபோல் மரணத்திலும் பாக்கியசாலி என்பதில் சந்தேகமில்லை.

ஆனால், அந்தப் புனிதவதி, சந்திரமதி, அறுபது வருஷம் மகாத்மாவுடன் இணை பிரியாமல் வாழ்க்கை நடத்திய உத்தம பத்தினி, சிறைச் சாலையிலே உயிர் விடுவதற்குக் காரணமாயிருந்தவர்களைப் பற்றி என்னவென்று சொல்வது ?

இந்தியாவிலே பிரிட்டிஷ் அதிகார வர்க்கத்தின் ஆட்சிக்கு இது ஒரு கொடூரமான களங்கம்; பயங்கரமான அவகேடு; சொல்லமுடியாத அவமானம்; மறக்க முடியாத பாதகம்.

ஆனால், களங்கமும் அவகேடும் அவமானமும் பாதகமும் பிரிடிஷ் சர்க்காருக்கு மட்டுந்தானா? நாம் நாற்பது கோடி மக்கள் உயிரோடு இருக்கிறோமே, நமக்கு அவகேடு அவமானம் ஒன்று மில்லையா ?

உண்டு; உண்டு. கட்டாயம் உண்டு.

"'இந்தியாவில் 1944-ம் வருஷத்தில் 40 கோடி மக்கள் உயிரோடிருந்தார்கள்; 'அன்னை கஸ்தூரிபாய்' என்று அவர்கள் அருமையுடன் அழைத்த மாதரசியைச் சிறையிலே சாகும்படி விட்டார்கள்'' என்ற அபகீர்த்தி ஒரு நாளும் நம்மை விட்டுப் போகப் போவதில்லை.

அன்னை கஸ்தூரிபாயைச் சிறையில் சாக விட்டதோடு நாம் நிற்கிறோமா? இல்லை.

"ஐயோ! அன்னை போய்விட்டாரே! மகாத்மாவாவது வேதாந்தி. அவர் மனந் தேறுவார். எங்களை யார் தேற்றுவார்கள் ?'' என்று பொய்யழுகை அழுகிறோம்.

நமது பொது வாழ்க்கை அத்தகைய பொய் வாழ்க்கையாகி விட்டது.

தலைவர்களைப் பலி கொடுத்து நாம் நன்மையடையப் பார்க்கிறோம்.

தலைவர்கள் சிறையில் இருப்பதினாலோ, இறப்பதினாலோ இந்தியா சுய ராஜ்யம் அடைந்து விடாதா என்று ஆசைப்படுகிறோம்.

நம்மில் இன்னும் சில பாவிகள் இருக்கிறார்கள். தலைவர்கள் சிறையில் இருந்தால் தான் இந்த யுத்த காலத்தில் தாங்கள் பணம் கொள்ளையடிக்கலாம் என்று நினைக்கிறார்கள். இந்தச் சுயநலப் பாதகத்துக்காக "தேசபக்தி" யின் பெயரால் ஒற்றுமை முயற்சிகளுக்குக் குறுக்கே நிற்கிறார்கள்!

அன்னை கஸ்தூரிபாயின் மரணமாவது இந்த நாட்டு மக்களின் கண்ணைத் திறக்காதா? போலித் தேச பக்தர்களின் பொய்ப் பிரசாரம் முடிவடையாதா? தேசத்தில் ஒற்றுமை ஏற்படாதா? சுதந்திரம் கிட்டாதா?

உலக வாழ்வை நீத்து இறைவன் திருவடி நிழலில் அமர்ந்திருக்கும் பத்தினித் தெய்வமான அன்னை கஸ்தூரிபாய் அருள் புரியட்டும்.

# கிட்டப்பா ஞாபகம்

சந்தேக இறந்த காலம்'' என்றால் என்ன?—யாருக்காவது தெரிந்தால் தயவு செய்து சொல்லுங்கள், பார்க்கலாம்.

வாலாஜாபேட்டையிலுள்ள கிட்டப்பா பள்ளிக்கூடத்தில் படிக்கும் சிறுமிகளைப் பார்த்து அத்தியட்சகர் ஆக்கூர் அனந்தாச்சாரியார் மேற்படி கேள்வியைக் கேட்டார். எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. மேற்படி வகுப்பில் நான் சேர்ந்து உட்கார்ந்திருப்பதாகவும், என்னைப் பார்த்தே மேற்படி கேள்வி கேட்பதாகவும் ஒரு கணம் பிரமை உண்டாயிற்று. சட்டென்று பதில் ஒன்றும் தோன்றவில்லை. பயத்தினால் உடம்பு வியர்த்து விட்டது. ஆழ்ந்து யோசனை செய்தேன். பளிச்சென்று

நேதாஜி சுபாஷ் சந்திர போஸின் ஞாபகம் வந்தது. அவர் ஆகாசப் பிரயாணம் செய்து வீர சொர்க்கம் அடைந்தது உண்மையா இல்லையா என்ற சந்தேகம் ஏற்பட்டிருக்கிறதல்லவா? அது தான் சரி! அத்தியட்சகர் ஆக்கூர் அனந்தாச்சாரியார், நேதாஜி சுபாஷ் சந்திர போஸைப் பற்றித்தான் கேட்கிறார் போலும்!

........இப்படி நான் வியர்க்க விருவிருக்க யோசனை செய்து கொண்டிருக்கும்போது வகுப்பில் இருக்கிற சிறுமிகளில் ஒருத்தி,— சுமார் எட்டு வயதிருக்கும், —"வஹ் கயா ஹோகா" என்று பதில் சொன்னாள். பிறகு அத்தியட்சகர் கேட்டதின் பேரில் தமிழிலும் "அவன் போயிருக்கலாம்?" என்று தர்ஜமா செய்து கூறினாள்.

இத்தோடு விஷயம் முடியவில்லை. அக்கிராசனத் திண்ணையில் அமர்ந்திருந்த ராஜாஜி அவர்கள், "அவன் போயிருக்கலாம் என்பது எப்படிச் சந்தேக இறந்த காலம்?" என்று கேட்டார். அதற்கு அந்த எட்டு வயதுச்சிறுமி பதில் சொல்ல யோசித்துக் கொண்டிருக்கும் போதே, ஏழு வயதுச் சிறுமி ஒருத்தி பின் வருமாறு பதில் சொன்னாள். "போனார் என்பது இறந்த காலம். இருக்கலாம் என்பது சந்தேகம். போயிருக்கலாம் என்பது சந்தேக இறந்த காலம்" என்றாள்.

குழந்தைகள் ஹிந்தி புத்தகம் ஒன்றைத் தலைக்கு இரண்டு மூன்று வரியாகப் படித்து வந்தார்கள். அதில் பஞ்சாப்பைச் சேர்ந்த உருது கவியான ஸர் முகம்மது இக்பாலைப் பற்றிச் சொல்லியிருந்தது. அவர் பிறந்த கிராமத்தின் பெயரைப் படித்ததும், உருது கவி இக்பால் பிறந்த ஊரை நமது குழந்தைகள் தெரிந்து கொள்வது அவ்வளவு அவசியமா என்று நான் யோசித்துக் கொண்டிருந்த போதே ஸ்ரீ அனந்தாச்சாரியார், குழந்தைகளைக் கேள்வி கேட்கத் தொடங்கினார். ஹிந்தி பாஷையில்தான்.

"முகமத் இக்பால் யார்?"

"பஞ்சாப் மாகாணத்தின் பிரசித்த கவி!"

"நமது தமிழ் நாட்டின் பிரசித்த கவியின் பெயரைச் சொல்ல முடியுமா?"

உடனே, ஒரு குழந்தை, "கம்பன்" என்று பதில் சொன்னாள்.

இந்த பதில் எங்களுக்கு ஏமாற்றம் அளித்தது. கம்பனைப் பற்றி ஏமாற்றம் இல்லை. பாரதியார் பெயரைக் குழந்தைகள் சொல்லும் என்று எதிர்பார்த்தபடியால் தான் ஏமாற்றம் உண்டாயிற்று.

மறுபடியும் அத்தியட்சகர் "இந்தக் காலத்துப் பிரசித்த கவியின் பெயரைச் சொல்லு"!

என்று கேட்டதும் கொஞ்சம் நம்பிக்கை ஏற்பட்டது. ஆனால் மறுபடியும் ஏமாற்றந் தான். ஏனெனில் வந்த பதில் இது:

"நாமக்கல் ராமலிங்கம் பிள்ளை!"

இந்த பதிலில் கவி பிறந்த ஊரும் இருந்தபடியால், மேற்கேள்வி கேட்பதற்கு இடமில்லையல்லவா? ஆனால் இத்துடன் அனந்தாச்சாரியார் விடவில்லை. "இன்னொரு பிரசித்த கவியின் பெயர்?" என்று கேட்டார்.

அப்பா! நல்ல வேளை!

"பாரதியார்!" என்ற பதில் இன்பத்தேன் மாதிரி காதில் பாய்ந்தது.

"பாரதியார் பிறந்த ஊர் எது தெரியுமா?"

"எட்டயபுரம்!"

இந்த பதில் வந்ததும் எல்லாருக்கும் மன அமைதி உண்டாயிற்று.

மேலே கண்ட கேள்விகள், பதில்கள் எல்லாம் ஹிந்தியிலேதான் என்பதை மறுபடியும் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். பதில் சொன்ன குழந்தைகளுக்கு ஆறு வயது முதல் பத்து வயதுவரை இருக்கும்.

இவ்வளவு தூரம் ஹிந்தி பாஷை, ஹிந்தி இலக்கணம், தமிழ் இலக்கணம், பொது விஷய அறிவு—இத்தனையும் அந்தச் சின்னஞ் சிறு குழந்தைகளின் தலையில் எப்படித்தான்

ஏறினவோ என்று எண்ணி எண்ணி வியந்தேன். இதெல்லாம் எனக்கு ஒரு பெரிய அற்புதமாகவே தோன்றியது.

ஒரு சொந்த விஷயத்தைச் சொல்லிவைக்கிறேன். ஹிந்தி பாஷைக்கும் எனக்கும் ரொம்ப விரோதம். ஹிந்தி பாஷையின் மேல் எனக்கு விரோதம் ஒன்றும் இல்லை; ஆனால் ஹிந்தி பாஷைக்குத்தான் என்மேல் விரோதம்.

ஹிந்தி பாஷையைக் கற்றுக் கொள்வதற்கு நான் செய்த முயற்சிகளைச் சொன்னால் அது ஒரு பெரிய 'டன் கெர்க்' இதிகாசமாக இருக்கும்.

மொத்தத்தில் ஹிந்துஸ்தானி ஒரு பொல்லாத பாஷை. தமிழ் முதலிய பாஷைகளில் மக்கள், தேவர், நரகருக்குத்தான் ஆண்பால், பெண் பால் என்ற பாகுபாடு உண்டு. ஹிந்துஸ்தானியிலே அஃறிணைப் பொருள்களுக்குக்கூட ஆண்பால் பெண்பால் என்கிற வித்தியாசம் உண்டு. மரம், கல், மலை, புத்தகம், பூ, ரொட்டி, சட்டி, தட்டு, பட்டம் ஒவ்வொன்றும் ஆண் பால், அல்லது பெண்பாலாக இருக்கும். ஆண்பாலா பெண்பாலா என்று மேற்படி பொருள்களைப் பார்த்துத் தெரிந்து கொள்ள

முடியாது. வேறு அதற்கான இலக்கண விதியும் கிடையாது. ஒவ்வொன்றுக்கும் உபாத்தியாயரைக் கேட்டுத்தான் தெரிந்து கொள்ள வேண்டும்.

ஆண்பாலா யிருந்தாலென்ன, பெண்பாலா யிருந்தாலென்ன — எப்படியாவது இருந்து விட்டுப் போகட்டுமே என்று விட முடியுமா ? முடியாது.

"நான் புத்தகம் படித்தேன்" என்று சொல்ல வேண்டுமானல், புத்தகம் ஆண்பாலா, பெண் பாலா என்று தெரிந்து கொள்ளாமல் சொல்ல முடியாது. ஹிந்துஸ்தானியில் புத்தகம் பெண் பால்தான். ஆகையால் "நான் புத்தகம் படித்தேன்" என்று தமிழில் சொல்வதை, "நானவன் புத்தகம் படித்தாள்!" என்று ஹிந்தியில் சொல்ல வேண்டும்! (மைனே கிதாப் படீ) இந்தமாதிரி எத்தனேயோ சங் கடங்கள் அந்த பாஷையில் உண்டு.

இவ்வளவு இலட்சணமான பாஷையைப் பத்து வயதுக்குட்பட்ட சிறுவர்களும் சிறுமிகளும் இலக்கண வழுவில்லாமல் சக்கைப் போடாகப் பேசுகிருர்கள். கேட்ட கேள்விக்கு மூச்சு விடுவதற்கு முன்னல் பதில் சொல்கிருர்கள் என்ருல், இதை ஒரு ஆச்சரியம், அற்புதம், அபரிமிதம், என்றெல்லாம் சொல்வது தவருகுமா ?

மேற்கூறிய அற்புதம், அதிசயம், அசாத்தியம் எல்லாம் நடைபெற்று நான் பார்த்தது, வாலாஜா பேட்டை என்ற பட்டணத்தில். சென்னையிலிருந்து 65 மைல் தூரத்தில் வேலூர் மார்க்கத்தில் உள்ள மேற்படி பழைய புராதனப் பட்டணத்தில் ஸ்ரீ ஆக்கூர் அனந்தாச்சாரியார் என்னும் பல முறை சிறை சென்ற தேசத் தொண்டர் காலஞ்சென்ற கலைஞர் கிட்டப்பாவின் ஞாபகார்த்தமாகக் கிட்டப்பா இலவச ஹிந்தி சங்கீத பாடசாலை நடத்தி வருகிறார்.

ஏற்கெனவே மேற்படி பள்ளிக்கூடத்தை ஸ்ரீ ஆக்கூர் அனந்தாச்சாரியார் திருவல்லிக்கேணியில் நடத்தி வந்தார். ஜப்பான் படையெடுப்புப் பீதியினால் சென்னை நகரின் ஏழு லட்சம் மக்கள் நிலைகுலைந்து ஓடிய காலத்தில் கிட்டப்பா இலவச சங்கீத—ஹிந்தி பாடசாலையும் வாலாஜா பேட்டைக்குச் சென்றது. ஆனால், வாலாஜா பேட்டையில் ஒரு கிளை ஸ்தாபனத்தை வைத்து விட்டுத் திருவல்லிக்கேணிக்கே அடுத்த வருஷம் தலைமை ஸ்தாபனத்தைக் கொண்டு வந்து விடப் போவதாக ஸ்ரீ அனந்தாச்சாரியார் பயமுறுத்தி யிருக்கிறார்! வாலாஜா பேட்டையிலேயே தலைமை ஸ்தாபனம்—கிளை ஸ்தாபனம் எல்லாம் இருப்பது நல்லது என்று என் அபிப்பிராயம். திருவல்லிக்கேணிக்குக் கொண்டுவந்தால் என்னை

யும் மேற்படி பாடசாலையில் சேர்ந்து ஹிந்தி இலக்கணம் கற்றுக் கொள்ளச் சொல்வாரோ என்ற பயத்தினுல்தான் சொல்கிறேன்.

தமிழ் நாட்டிலே கவிஞர்களுக்கும் காலஞ் சென்ற தேசபக்தர்களுக்கும் ஞாபகார்த்தம் ஏற்படுத்தும் பல முயற்சிகள் நடந்து வருகின்றன. இதற்கு மத்தியில், கலைஞர் கிட்டப்பாவின் ஞாபகார்த்தத்தை நிலை நாட்டவும் அவர் பெயரால் ஒரு ஸ்தாபனத்தை நிறுவவும் ஒரு தேசபக்தத் தொண்டர் பெருமுயற்சி செய்து வருகிறார் என்பது சிலருக்கு வியப்பு அளிக்கலாம். ஆனால், பதினைந்து—இருபது வருஷத்துக்கு முந்திய தமிழ் நாட்டு நாடக மேடையைப் பற்றி அறிந்தவர்களுக்கு அது ஆச்சரியமளிக்காது. அந்த நாளில், சங்கீதக் கலையிலும் நாடகக் கலையிலும் பற்றுள்ளவர்களுக்கு, 'கிட்டப்பா' என்று சொன்னால் உடம்பு புல்லரிக்கும். "தசரத ராஜகுமாரா!" என்று பாடிக்கொண்டே கண்ணீர் விடத் தொடங்குவார்கள். "காயி சத்திய பாமா!" என்று கதவைத் தட்டத் தொடங்குவார்கள்.

"கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் வகை கிடைத்த குளிர் தருவே" என்ற அருட்பாவை அவர் இசைத் தட்டில் பாடியிருப்பதைக் கேளுங்கள். பாவின்

சொற்களும் இசையும் எப்படி ஒன்றுடன் ஒன்று கலந்து வருகின்றன? சொற்களை அப்படியே அந்தரத்தில் தொங்க விட்டு விட்டு, ராக விஸ்தாரத்தில் புகுந்து விடுகிறாரா, பாருங்கள்! கிடையாது. அங்கங்கே முக்கியமான சொற்களில் நின்று இசையமுதத்தைக் கலந்து பொழிகிறார். "கனியே!" "பூங்காற்றே!" "மணவாளா!" முதலிய சொற்களில், சொல்லின்பமும்; பொருளின்பமும், இசையின்பமும் ரஸபாவத்துடன் கலந்து பெருகுகின்றன.

என்னுடைய நண்பர்களில் ஒருவர் நல்ல ரஸிகர்; அறிவாளி; நல்ல அந்தஸ்திலும் உள்ளவர். கிட்டப்பா காலமான போது, "இனி தமிழ் நாடகத்துக்கே போவதில்லை" என்று அவர் விரதம் எடுத்துக் கொண்டார். இன்று வரையில் அவர் அதை நிறைவேற்றி வருகிறார்!

ஸ்ரீ கிட்டப்பாவின் நாடகத்தைப் பார்த்து அவர்மேல் அபிமானம் கொண்டவர்களைத் தவிர, அவருடன் நெருங்கிப் பழகிச் சிநேகிதர்களானவர்கள் அவருடைய சிறந்த குணங்களுக்குத் தங்களுடைய இதயத்தைப் பறி கொடுத்திருக்கிறார்கள். அப்படிப் பட்டவர்களில், ஸ்ரீ ஆக்கூர் அனந்தாச்சாரி ஒருவர். "கிட்டப்பா பாடசாலை"யின் வருஷாந்திர அறிக்கையின் முன்னுரையில் ஸ்ரீ ஆக்கூர் அனந்தாச்சாரியார், ஸ்ரீ கிட்டப்பாவின்

உயர்ந்த குண நலங்களைப் பற்றி எழுதியிருப்பதைப் படிக்கும் போது, மேற்படியார் இருவர்களிடமும் நமது மதிப்பு பன்மடங்கு உயர்ந்து விடுகிறது.

"மனிதர் என்ருல் இவர் அல்லவா மனிதர்!" என்றும், "சினேகம் என்ருல் இதுவல்லவா சினேகம்?" என்றும் எண்ணிப் பூரித்துப் போகிருேம்.

❦ ❦ ❦

ஸ்ரீ எஸ். ஜி. கிட்டப்பா அவருடைய காலத்தில் நாடக மேடையில் இணையற்ற கலைஞராய் விளங்கிஞர்.

கிட்டப்பாவின் சாரீர மேன்மையைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. மேல் ஸ்தாயியில் அநாயாசமாகச் சஞ்சரிக்கும் சக்தியுடையது. பனிக் காலத்தில் காலை வேளையில் பவளமல்லிகைச் செடியிலிருந்து பனித் துளிகளும் புஷ்பங்களும் கலகல வென்று உதிர்வது போல் சங்கதிகளை உதிர்க்கும் இயல்பு வாய்ந்தது; கேட்போர் செவியையும் உள்ளத்தையும் ஒருங்கே பரவசப்படுத்தும் மோஹன சக்தி பொருந்தியது. அந்த சாரீரம் இசைத் தட்டுக்கு எடுத்ததாயும் அமைந்தது இன்னும் விசேஷமாகும்.

கிட்டப்பா சிட்சைப் பட்டவரல்ல; அதாவது குருவினிடம் முறையாகப் பாடம் படித்து சங்கீதம் பயின்றவரல்ல. பூர்வ ஜன்ம சுகிர் தத்தினல்—இசைவாணியின் அருள் விலாஸத் தினல்—சங்கீதம் தானே தேடி வந்து அவரை அடைந்தது. ஆகவே சாதாரண வித்வான் கள் போகத் துணியாத இடங்களுக்கெல்லாம் அவர் அநாயாசமாகப் போவார். வித்வான் கள் பிரமித்து நிற்பார்கள்; "அம்மம்மா! இது நம்மாலாகாது!" என்பார்கள். "இது சம்பிர ரதாயத்துக்கு விரோதம்; அது யாரும் போகாத புது வழி; இங்கே எல்லை கடந்து போய் விட்டார்" என்றெல்லாம் பண்டிதர் கள் முணுமுணுக்கவும் செய்வார்கள். ஆனல் இலக்கியத் துறையில் வரகவிகள் செய்யும் 'பிழை'களே பிற்காலத்தில் 'இலக்கண'மாகி விடுகின்றன. சங்கீதத்திலும், எத்தனையோ, விவாதத்துக்கிடமான பிரச்னைகளைப் பெரி யோர்களின் 'பிரயோக'ங்களைக் கொண்டு தானே முடிவு கட்டுகிறார்கள்? ஸ்ரீமான் கிட்டப்பா சங்கீதத் துறையிலேயே தனித்து ஈடுபட்டிருந்தால் அவருடைய 'பிரயோக'ங் களே பிற் காலத்தில் எடுத்துக் காட்டுகளாக ஆகி யிருக்கும். தமது அபூர்வ இனிமை வாய்ந்த சாரீரத்தில் அற்புத கந்தர்வ கானத் தைப் பொழிந்து லட்சக் கணக்கான தமிழர் களைப் பரவசப் படுத்தினர். அவருடைய நாடகம் ஒன்றைப் பார்த்தவர்கள் அதைப்

பற்றி ஒரு வருஷம் வரையில் பேசிக் கொண்டிருப்பார்கள். அப்படிப்பட்ட கலைஞர் பன்னிரண்டு வருஷத்துக்கு முன் காலமானார். அவருக்கு ஒரு ஞாபகச் சின்னத்தை நிலை நாட்ட வேண்டுமென்று எண்ணி அதற்கான பிரயத்தனம் வேறு யாரும் தொடங்கவில்லை. அத்தகைய எண்ணம் தேசத் தொண்டர் ஸ்ரீ ஆக்கூர் அனந்தாச்சாரியாருக்குத் தான் உண்டாயிற்று. ஸ்ரீ கிட்டப்பாவுடன் நெருங்கிப் பழகி அவருடைய தேச பக்தி, தயாள குணம் இவற்றை நன்கு அறிந்திருந்தபடியால், ஸ்ரீ அனந்தாச்சாரியாருக்கு மேற்படி எண்ணத்தை நிறைவேற்றுவதில் ஆர்வமும் ஊக்கமும் ஏற்பட்டன. சாதாரணமாய்ப் பல பெரிய மனிதர் சேர்ந்து பெரும் பிரயத்தனங்கள் செய்து நடத்த வேண்டிய ஒரு காரியத்தைத் தன்னந் தனியாகத் தொடங்கித் தீரத்துடனும் பிடிவாதத்துடனும் நடத்தி வருகிறார். தேசத்துக்கு மிகவும் உபயோகமான முறையில் நடத்தி வருகிறார். எவ்வளவோ இடையூறுகளையும் தடங்கல்களையும் சமாளித்துக் கொண்டு தளரா ஊக்கத்துடன் நடத்தி வருகிறார்.

ஸ்ரீ கிட்டப்பாவின் ஞாபகார்த்தமாக நடைபெறும் மேற்படி அரிய ஸ்தாபனத்தில் குழந்தைகளுக்குச் சங்கீதமும் ஹிந்தியும் போதிக்கப்படுகின்றன. ஸ்ரீ கிட்டப்பா சங்கீதக் கலை-

ஞர்,—அதற்காகச் சங்கீதம்; ஸ்தாபனத்தை நடத்தும் ஆக்கூர் அனந்தாச்சாரியார் தேசத் தொண்டர்,— அதற்காக ஹிந்துஸ்தானி. நல்ல பொருத்தமான சேர்க்கைதான். இப்படி சங்கீதத்தையும் ஹிந்துஸ்தானியையும் சேர்த்ததில் இன்னொரு பெரிய சௌகர்யம் இருக்கிறது. இந்தக் காலத்தில் சங்கீதத்தில் ஒரே மோகம். குழந்தைகள் சங்கீதம் கற்றுக் கொள்ள வேண்டுமென்று ஆசையில்லாத பெற்றோர்கள் இல்லை. ஆகையால் சங்கீதம் கற்றுக்கொள்வதற்காகக் குழந்தைகளை அனுப்புவார்கள். வந்த குழந்தைகளுக்கு ஹிந்துஸ்தானியையும் கற்றுக்கொடுத்து அனுப்பினால் வேண்டாம் என்று சொல்லப் போகிறார்கள்?

இதற்குப் பரிகாரமாக ஆக்கூர் அனந்தாச்சாரியார் இன்னொரு காரியமும் செய்திருக்கிறார். குழந்தைகளுக்கெல்லாம் தக்ளியில் அபூர்வமான திறமையுடன் நூல் நூற்கக் கற்றுக்கொடுத்திருக்கிறார்!

இந்தப் பள்ளிக்கூடத்தில் படிக்கும் பெண்கள் தங்களுக்கும் தங்கள் கணவன்மார்களுக்கும் வேண்டிய துணிமணிகளுக்கு நூல் நூற்றுக் கொடுத்துவிடுவார்கள். கலியாணம் செய்து கொள்கிறவனுக்குப் பாதி குடும்பக் கவலை விட்டது.

நவம்பர் மீ 20வ ஸ்ரீ கிட்டப்பாவின் பன்னி ரெண்டாவது வருஷாப்தீக தினமும், கிட்டப்பா இலவச இந்தி—சங்கீத பாடசாலை ஆண்டு விழாவும் வாலாஜாபேட்டையில் சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியாரின் தலைமையில் கொண்டாடப்பெற்றன. இந்த விசேஷமான வைபவத்தைக் கண்டும் கேட்டும் களிக்கும் பாக்யம் எனக்கும் கிடைத்தது. ஆக்கூர் அனந்தாச் சாரியாரின் தொண்டை வாலாஜாபேட்டை வாசிகள் எவ்வளவு தூரம் மதித்துப் பாராட்டுகிறார்கள் என்பதை நேரில் பார்த்தேன். கிட்டப்பா ஞாபகார்த்த பாடசாலைக்குத் தர்மமாகக் கிடைத்திருக்கும் நிலத்தையும் அதில் நாட்டப்பெற்றிருக்கும் அஸ்திவாரக் கல்லையும் பார்த்தேன். ராஜாஜியின் அரிய சொற்பொழிவைக் கேட்டேன். ஆக்கூர் அனந்தச்சாரியாரின் உருக்கமான பேச்சைக் கேட்டேன்.

எல்லாம் வெகு திருப்திகரமாக இருந்தது. நல்ல கலைஞருக்கு ஞாபகார்த்தம். ஸ்தாபனம் வெகு நல்ல ஸ்தாபனம். வேலை மிக மிக உபயோகமானது. நடத்துகிறவர் அரிய தேசத் தொண்டர். ஒரே ஒரு குறைதான் தெரிந்தது. அது நல்ல முயற்சிகளுக்கெல்லாம் உலகத்தில் சாதாரணமாக ஏற்படுகிற குறையேயாகும். வேறு என்ன? பணம் இல்லாத குறைதான். கிட்டத்தட்ட வெறுங்

கை முழும் போடுவதற்கு உதாரணமாகச் சொல்லக்கூடிய வண்ணம் ஸ்ரீ அனந்தாச்சாரியார் இந்த அரிய பெரிய பணியை நடத்தி வருகிறார். அவருக்கு உதவி செய்து ஊக்கமளிப்பது தமிழ் மக்களின் கடமையாகும்.

# வீழ்ந்த ஆலமரம்

எங்கள் ஊர்ப் பள்ளிக்கூடத்தின் அருகில் சாலை ஓரத்தில் ஆலமரம் ஒன்று வானோங்கி வளர்ந்திருந்தது. அதன் கிளைகள் நாலாபுறமும் விசாலமாகத் தழைத்து விழுது விட்டு நெடுந்தூரத்துக்கு நெடுந்தூரம் பசுமையாகப் படர்ந்து குளிர்ந்த நிழலைத் தந்து வந்தன. வெயில் காலத்தில் மத்தியான நேரத்தில் ஆயிரக்கணக்கான பட்சிகள் அந்த ஆலமரத்தில் தங்கி வித வித மான குரல்களில் இன்ப கீதம் இசைத்துக் கொண்டிருக்கும். ஊதாச் சிவப்பு நிறம் வாய்ந்த ஆலங்கனிகள் முழுசாகவும் பட்சி களால் பாதிகொத்தித் தின்னப் பட்டவையாக வும் தரையெல்லாம் உதிர்ந்து கிடக்கும் காட்சி கண்களுக்கு விருந்தாயிருக்கும்.

மத்தியான நேரத்தில் சாலையோடு போகும் வழிப்போக்கர்கள் எவ்வளவு அவசரமான காரியமாயிருந்தாலும் அந்த ஆலமரத்தின் குளிர்ந்த நிழலில் சிறிதுநேரம் உட்காராமல் போக மாட்டார்கள். சிலர் அம் மரத்தினடியில் கட்டுச்சாத மூட்டையை அவிழ்த்துச் சாப்பிட்டுவிட்டுப் பக்கத்திலிருந்த குளத்தில் தண்ணீர் குடித்துவிட்டு ஆலமரத்தடியில் சிறிது நேரம் சாவகாசமாகப் படுத்து இளைப்பாறி விட்டுச் செல்வார்கள்.

மத்தியான நேரத்துக்குப் பள்ளிக்கூடம் விட்டதோ இல்லையோ, பிள்ளைகள் எல்லாரும் இந்த ஆலமரத்தடியை நாடுவோம். கொஞ்ச நேரத்திற்கு அங்கே குதிப்பும் கொம்மாளமுமாய்த்தானிருக்கும். பிள்ளைகளுடைய குதூகலமான சிரிப்பின் கலகல த்வனியானது பறவைகளின் இனிய குரலோசையுடன் கலந்து நாலு திசைகளிலும் பரவிக் குளத்துக்கு அக்கரையிலிருந்த கோவில் மண்டபத்தில் எதிரொலியை உண்டாக்கும்.

இந்த ஆலமரம் இருந்த இடமானது இப்போது வெறுமையாயிருக்கிறது என்பதை எண்ணும்போதே என் கண்களில் நீர் துளிக்கிறது. ஆம்; சில வருஷங்களுக்கு முன்னல் அடித்த பெரும் புயல்காற்றில் அந்த ஆலமரம் விழுந்து விட்டது. லோகல்பண்டு இலாகா உத்தியோகஸ்தர்கள் அதை ஏலம் போட்டார்

கள். ஏலம் எடுத்தவன் மரத்தைத் துண்டு துண்டாய் வெட்டி எடுத்துக்கொண்டு போய் விட்டான். புயல் அடித்த சிறிது காலத்துக்குப் பிறகு நான் எங்கள் கிராமத்துக்குப் போன போது, அந்த ஆலமரம் இருந்த இடத்தில் ஒரு பெரிய குழி இருப்பதைக் கண்டேன். இந்தக் காட்சி என்னை என்னவோ செய்தது. அந்த உணர்ச்சியை என்னால் விவரிக்க முடியாது.

எங்கள் கிராமத்தைப் போலவே தான் தமிழுலகம் இன்று வெறிச்சிட்டுப்போயிருக்கிறது. விசாலமாகத் தழைத்து விழுதுவிட்டு வளர்ந்திருந்த ஆலமரம் வீழ்ந்ததைப்போல் மகா மகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் நம்மைப் பிரிந்து சென்று விட்டார். திருவட்டீசுவரன்பேட்டை 'தியாகராஜவிலாச'த்தின் மேல் மாடியில் தமிழ்த் தாத்தா இன்று இல்லை — விசு பலகையில் படுத்தவண்ணம் ஓலைச் சுவடியையோ புத்தகத்தையோ பார்த்துக்கொண்டிருக்கவில்லை. சீடப் பிள்ளைகளிடம் எழுதுவதற்கு விஷயம் சொல்லிக்கொண்டிருக்கவில்லை — என்பதை நினைத்தால் நெஞ்சை என்னவோ செய்கிறது. தமிழ்த்தாத்தா போய்விட்டார்; அவருடைய ஸ்தானம் இனி எக்காலத்தில் பூர்த்தியாகப் போகிறது?

அற்பாயுளுக்குப் பெயர்போன நமது தேசத்தில் ஒரு மனிதர் 60 வயதிருந்தாலே எல்லாருக்கும் திருப்தி உண்டாகிவிடுகிறது. எழுபது வயதுக்குப்பிறகு ஒருவர் காலஞ்சென்றால் அநேகமாக யாரும் அதிருப்திப்படுவதில்லை. சரியான காலத்தில் அவர் சரியான காரியத்தைச் செய்ததாகவே எண்ணுகிறார்கள்!

இன்னும் ஒரு மனுஷர் எழுபத்தைந்து வயதுக்குமேல் இருந்துவிட்டால் அவர் அநுசிதமான காரியத்தைச் செய்வதாகவே எண்ணிவிடுகிறோம். "மனுஷருக்கு உயிர் ரொம்ப கெட்டி!" என்று வியப்புடன் கூறுகிறோம். அப்படிப்பட்டவர் கடைசியாக மரணமடையும்போது "முதிர்ந்த வயது, ஒருமாதிரி அவர் காலம் ஆகிவிட்டது; இனிமேல் இருந்தால் அவருக்கும் கஷ்டம்— இருக்கிறவர்களுக்கும் கஷ்டந்தால்" என்று கூடப் பட்டவர்த்தனமாய்ப் பேசுவதை கேள்விப்பட்டிருக்கிறோம்.

மகாமகோபாத்தியாய சாமிநாத ஐயர் எண்பத்தாறு வயது பூர்த்தியாகி, எண்பத்தேழாம் வயதில் காலஞ்சென்றார். ஆனாலும், நமக்கு இன்னமும் குறையாகத்தான் இருக்கிறது. ஏதோ நடக்கக்கூடாத காரியம் நடந்துவிட்டதாகவே தோன்றுகிறது. பாழும் யமன் இன்னும் சிலகாலம் பொறுத்திருக்கக் கூடாதா என்று ஆத்திரப்படுகிறோம்.

தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் அவர் அப்படிப்பட்ட தொண்டைச் செய்துவந்தார். அத்தகைய தொண்டை இதற்குமுன் யாரும் செய்ததுமில்லை; இனிமேல் செய்யப்போவது மில்லை. அவருடைய மரணத்தினால் தமிழுல கத்துக்கு ஏற்பட்டிருக்கும் நஷ்டம், பூர்த்தி செய்யமுடியாத நஷ்டமேயாகும்.

❖ ❖ ❖

டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் தமிழ்த் தாய்க்குச் செய்திருக்கும் தொண்டுகளைப்பற்றி தெரியாதவர்கள் இருக்க முடியாது. அநேகர் பெயரளவில் மட்டும் கேள்விப்பட்டிருந்த பழந் தமிழ் இலக்கியங்களை அவர் கண்டுபிடித்து அச்சேற்றித் திருத்தமான உயர்ந்த பதிப்பு களாக வெளியிட்டார். அவற்றில் 'சீவக சிந்தாமணி', 'சிலப்பதிகாரம்', 'மணிமேகலை', 'புற நானூறு', 'பத்துப்பாட்டு' என்னும் நூல்கள் முக்கியமானவை. இந்த நூல்களைக் கண்டு பிடித்து வெளியிடும் முயற்சியில் அவர் அடைந்த சிரமங்களுக்கு அளவேயில்லை. எத்தனையோவித எதிர்ப்புகளும், எதிரிகளும் அவருக்கு ஏற்பட்டார்கள். அவருடைய எதிரி களில் முக்கியமான எதிரி கறையான்! கறை யான் படைகளுடன் அவர் நடத்திய போரை ஒரு மகாகவி வர்ணிக்கவேண்டுமே தவிரச் சாதாரண வார்த்தைகளில் எழுத முடியாது.

ரயில் பாதையில் வெகு தூரத்திலுள்ள ஒரு கிராமத்தில், ஏதோ ஒரு வீட்டின் பரணில், ஒரு ஓலைச்சுவடி கிடக்கும். இதை ஆகாரமாக் உட்கொண்டு விடுவதென்ற தீர்மானத்துடன் கறையான் படைகள் முன்னேறி வந்து கொண்டிருக்கும். இதே சமயத்தில் மேற்படி ஓலைச்சுவடி மேற்படி வீட்டுப் பரணில் கிடக்கும் செய்தியை டாக்டர் உ. வே. சாமி நாதய்யர் எப்படியோ தெரிந்து கொண்டு விடுவார். அவர் மேற்படி கிராமத்தை நோக்கி விரைந்து வருவார். ரயிலோ கட்டை வண்டியோ, கால்நடையோ—ஏதுவாயிருந்தா லும் அவருக்கு லட்சியமில்லை. பகல் இராத்திரி என்று பாராமல் ஓடிவருவார்.

கறையான்களும் கொஞ்சம் கொஞ்சமாகச் சுவரில் ஏறி, உத்திரத்தை சாப்பிட்டுக் கொண்டு முன்னேறி, நாளுக்குநாள் ஓலைச் சுவடியை நெருங்கிக்கொண்டிருக்கும். இதோ ஓலைச்சுவடி கிடக்கும் இடம் அவற்றின் பார்வைக்கு வந்துவிட்டது.

"பேஷ்! பல நாளைக்கு ஆகாரம் ஆயிற்று!" என்று அவை கொம்மாளம் அடித்துக் கொண்டு நெருங்குகின்றன. ஓலைச் சுவடியை ருசியும் பார்த்தாகிவிட்டது. நாக்கைச் சப்புக் கொட்டிக்கொண்டு அவை சுரு சுருப்பாக வேலை தொடங்குகின்றன.

அப்பேர்ப்பட்ட சமயத்தில் அந்த வீட்டைத் தேடி வந்து சேர்கிறார் ஸ்ரீ உ. வே. சாமிநாத ஐயர். வீட்டு எஜமானைப் பார்த்து, "ஐயா! உங்கள் வீட்டில் பழைய ஓலைச் சுவடி ஒன்று இருக்கிறதாமே?" என்று கேட்கிறார்.

"பரண் மேலே கிடந்தது. என்னத்திற்குக் கேட்கிறீர்கள்?" என்கிறார் வீட்டுக்காரர்.

அவரிடம் ஸ்ரீ சாமிநாத ஐயர் பழந் தமிழ் இலக்கியங்களின் பெருமையைப் பற்றிப் பேசி, ஓலைச் சுவடியைப் பார்க்க வேண்டும் என்கிறார்.

"சாயங்காலம் பார்ப்போம்; இப்போது வயலுக்குப் போகிறேன்" என்கிறார் வீட்டுக்காரர்.

இதற்குள் சுவரில் உள்ள கறையான் கூட்டின் மேல் ஸ்ரீ சாமிநாத ஐயரின் பார்வை விழுகிறது. "ஐயையோ! பரண்மேல் கறையான் ஏறிக்கொண்டிருக்கிறதே! சுவடி போய்விடப் போகிறதே! உடனே பார்த்தால் தேவலை!" என்கிறார் சாமிநாதய்யர்.

அவருடைய பதை பதைப்பை வீட்டுக்காரர் பார்த்துவிட்டு, பரண்மேல் ஏணி வைத்து ஏறி ஓலைச்சுவடியை எடுத்துக் கீழே போடுகிறார்.

சுவடியின் ஓரங்களில் கறையான் வாய் வைத்திருக்கும் அடையாளங்கள் தெரிகின்றன.

ஸ்ரீ சாமிநாதய்யர் அதை அவசரமாக உதறி எடுத்துத் தம் சிரமீது வைத்துக்கொண்டு ஆனந்தக் கண்ணீர் வடிக்கிறார்.

பிறகு, ஓலைச் சுவடியைப் பிரித்துப் பார்க்கிறார். ஐயரின் கண்கள் விரிகின்றன. வியப்பினால் அல்ல; அளவிலாத ஏமாற்றத்தினால்! ஏனெனில், அவர் தேடிவந்த பழந் தமிழ் நூல் ஒன்றும் அந்த ஓலைச் சுவடியிலில்லை. சமீப காலத்தில் எழுதப்பட்ட உபயோகமற்ற ஸ்தல புராணம் அது. "இவ்வளவுதானா?" என்று எண்ணிப் பெருமூச்சு விடுகிறார். "இதுவும் ஒரு மூலையில் கிடக்கட்டும்; ஏதாவது பிரயோஜனப்படும்" என்று எண்ணி ஓலைச் சுவடியை எடுத்துக்கொண்டு கிளம்புகிறார். எங்கே? இன்னொரு ஊரில் இன்னொரு வீட்டுப் பரணில் கிடக்கும் இன்னொரு ஓலைச்சுவடியைத் தேடிக் கொண்டுதான்!

தமிழன்பு என்பது இந்தக் காலத்தில் தமிழ் மக்களிடையே பரந்து பரவியிருக்கிறது. 'தமிழன்பு' பற்றி அடிக்கடி பேசுகிறோம்; எழுதுகிறோம். தமிழுக்குத் தொண்டு செய்கிறவர்களைப் பாராட்டுகிறோம். அத்தகைய பாராட்டுக் கூட்டங்களுக்கு ஆயிரக்கணக்கான ஜனங்கள் வந்து கூடுகிறார்கள்; ஆரவாரிக்கிறார்கள்.

டாக்டர் சாமிநாதய்யர் தமிழ்த் தொண்டு ஆரம்பித்த காலத்தில் இப்படிப்பட்ட தூண்டு தல் ஒன்றுமே கிடையாது. எங்கேயாவது அத்தி பூத்ததுபோல் ஒரு ஜமீன்தார், ஒரு மடாதிபதி, தமிழபிமானம் கொண்டவரா யிருந்து தமிழ்த் தொண்டைப் பாராட்டுவார். அவரிடம் ஒடுக்கத்துடன், நல்ல சமயம் பார்த் துப் போய் நிற்கவேண்டும். மற்றப்படி தமிழ்த் தொண்டுக்கு அந்நாளில் கௌரவம் கிடை யாது. தமிழ் நாட்டில் தமிழ்த் தாய் ஆங்கில ராணியின் முன்னால் கைகட்டி நின்று பணி விடை செய்த காலம். அத்தகைய காலத்தில் டாக்டர் சாமிநாதய்யர் தமிழ்த் தொண்டைத் தொடங்கினார். இடைவிடாமலும் சோர்வடை யாமலும் செய்து வந்தார். தமிழன்பு என்பது அவருடைய இரத்தத்திலேயே ஊறியிருக்க வேண்டும். தமிழ்ப் பணியில் ஆர்வமானது அவருடைய சதை நரம்புகளில் கலந்து, மூச்சு விடுவதைப்போல் இயற்கையோடு இயற்கை யாய்ச் சேர்ந்திருக்க வேண்டும். அத்தகைய தமிழன்பரை—தமிழ்த் தொண்டரை— இனி எங்கே காணப் போகிறோம்? எப்போது காணப் போகிறோம்?

மகாமகோபாத்தியாய சாமிநாதய்யர் பழைய தமிழ்ப் பண்டிதர்களில் பழுத்துக் கனிந்த

தமிழ்ப் பண்டிதர்; நவீன இலக்கிய ஆராய்ச்சி யாளரில் தலை சிறந்த ஆராய்ச்சியாளர்; நவ யுகத் தமிழ் எழுத்தாளரில் முதன்மையான எழுத்தாளர்!

சாதாரணமாக மனுஷ்யர்களுக்கு வயதாக ஆக, நோக்கம் குறுகிப் போவதையும், புதிய எண்ணங்களைக் கிரஹிக்கும் சக்தி குன்றிவிடு வதையும் பார்க்கிறோம். அதிலும் தமிழ்ப் புலவர்கள் வயது ஆக ஆகக் கறடு தட்டிய 'பண்டித' மனப்பான்மையை அடைகிறார்கள். டாக்டர் உ. வே. சாமிநாதய்யரிடம் இதற்கு நேர்விரோதமான இயல்பைக் கண்டோம். வயதாக ஆக, அவருடைய மனம் விசாலமாகி வந்தது. தமிழ் வசன நடையில் ஏற்பட்டு வந்த மாறுதல்களை அவர் பெரிதும் ரஸித்து அநுபவித்தார்! அதைவிட ஆச்சரியம் என்ன வென்றால், புதிய எளிய தமிழ் நடையைத் தாமே பின்பற்றி எழுதவும் தொடங்கினார்: அதில் வெற்றியும் அடைந்தார். இலக்கிய உலகத்தில் இது ஒரு பெரிய அற்புதம் என்றே கூறவேண்டும்.

சுமார் பத்து வருஷத்துக்கு முன்பு டாக்டர் உ. வே. சாமிநாதய்யரை முதன் முதலாக நான் பார்த்தேன். ஒரு விசேஷ ஆண்டு மலருக்குக் கட்டுரை கேட்கும் நோக்கத்துடன்

அவரிடம் சென்றேன். போகும் போது நெஞ்சு கொஞ்சம் வேகமாக அடித்துக் கொண்டிருந்தது. அந்தப் பழந் தமிழ்ப் பண்டிதர் நம்மை எவ்விதம் நடத்துகிருரோ என்ற பயந்தான் காரணம். காலஞ்சென்ற வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியாரைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறேன். அவரிடம் வருகிறவர்களைப் பார்த்து சாஸ்திரியார் “நீவிர் யாண்டுப் போந்தீர்?” என்று கேட்பாராம். தமிழ்த் தாத்தா அப்படியெல்லாம் என்னைத் திண்டாட வைக்கவில்லை. நம்மையெல்லாம் போல் சாதாரண வீட்டுத் தமிழிலேயே பேசினர். நான் இன்னுரென்று தெரிவித்துக் கொண்டதும், “டி. கே. சிதம்பரநாத முதலியார் உம்மைப் பற்றிச் சொல்லியிருக்கிருர்” என்ருர். எனக்கு அப்போது டி. கே. சிதம்பரநாத முதலியார் இன்னுர் என்பதே தெரியாது. அவர் எதற்காக என்னைப் பற்றிச் சொல்லியிருக்கப் போகிருர் என்று திகைத்தேன். என்னுடைய திகைப்பை அதிகமாக்கும்படியாகத் தமிழ்த் தாத்தா மேலும் ஒரு விஷயம் சொன்னுர். அதற்குச் சிலகாலத்துக்கு முன்பு, முதல் முதல் வெளியான தமிழ் பேசும் படத்தைப் பற்றி, “தமிழ்ப் பாட்டி” என்ற தலைப்புடன் ஒரு கட்டுரை எழுதியிருந்தேன். “தப்பிலி கப்” என்ற கதையொன்றும் வெளியாகியிருந்தது. மேற்படி கட்டுரையையும் கதையையும் பற்றித் தமிழ்த் தாத்தா திருப்பித் திருப்பித் தமது

பாராட்டுதலைத் தெரிவித்தார். தாம் ரஸித்த சில சில வாக்கியங்களையும் அப்படியே சொன்னார். எனக்கு இதெல்லாம் ஒரு பக்கம் சந்தோஷமாயிருந்தாலும், இன்னொரு பக்கம் சங்கடமாயிருந்தது. எனவே, பேச்சை மாற்றும் பொருட்டுச் சுற்றிலும் இருந்த ஓலைச் சுவடிகளைப் பற்றிப் பிரஸ்தாபித்தேன். உடனே தமிழ்த் தாத்தா தமது பழைய அனுபவங்களைப் பற்றிப் பேச ஆரம்பித்தார். அவை மிகவும் ரஸமாயிருந்தன. உணர்ச்சியுடன் நகைச் சுவை பொருந்தியும் இருந்தன. அன்று அவர் சொன்னவற்றில் ஒன்று இன்னமும் எனக்கு மிகத் தெளிவாக ஞாபகமிருக்கிறது:—

மற்றவர்களைப் புத்தகம் எழுதச் சொல்லித் தம் பெயரால் வெளியிடும் மகாநுபாவர் ஒருவர் இருந்தாராம்! அவர் ஒருநாள் ஐயர்வாளைப் பார்க்க வந்தார். வந்தவர், அந்த அறையில் அடுக்கியிருந்த ஓலைச் சுவடிகளை எடுத்துப் பார்க்க ஆரம்பித்தாராம். உடனே ஐயர்வாள் “இதோ பாரும்! நீர் என்னைப் பார்க்கத்தானே வந்ததாகச் சொன்னீர்? என்னைப் பார்க்க வந்திருந்தால், என்னைப் பார்த்துப் பேசும்; இல்லாவிட்டால் நடையைக் கட்டும். அங்கே இங்கே பார்த்து விழிக்க வேண்டாம்!” என்றாராம்.

இம்மாதிரி எவ்வளவோ சம்பவங்கள் சொன்னார். ஒரு சமயம் ரசிகரான ஒரு

ஜமீன்தார் முன்னிலையில் ஸ்ரீ சாமிநாதய்ய ரும், இன்னொரு தமிழ்ப்பண்டிதரும் இருந்தார் களாம். ஜமீன்தார் அந்த இன்னொரு தமிழ்ப் பண்டிதரைப் பரிகாசமாய்ப் புகழ்ந்து “சாமிநாதய்யருக்கு என்ன தெரியும்? பழைய ஓலைச் சுவடிகளைப் புரட்டிக்கொண்டிருப்பார். உம்மைப்போல் அவரால் நிமிஷத்துக்கு ஒரு பாட்டுப்பாட முடியுமா?” என்றாராம். இந்தப் புகழ்ச்சியை அந்தப்பண்டிதர் உண்மை என்று நினைத்துத் தம்முடைய மார்பைப் பார்த்துக் கொண்டு சந்தோஷப்பட்டாராம்.— இதை ஐயர்வாள் சொன்னவுடனே, நான் “தாங் கள் கூடக் கொஞ்ச நேரத்துக்கு முன்னால் என்னுடைய எழுத்துத் திறமையை ரொம்ப வும் பாராட்டினீர்கள். சிறு பிள்ளையாச்சே என்று ஊக்கப்படுத்துவதற்காகத் தாங்கள் சொன்னதையெல்லாம் நான் அப்படியே நிஜ மென்று எடுத்துக்கொள்ளலாமா?” என் றேன். தமிழ்த் தாத்தா ‘குபீர்’ என்று சிரித்த சிரிப்பின் ஒலி இன்னும் என் காதில் தொனிக்கிறது.

இதை யெல்லாம் விடப் பெரிய ஆச்சரி யம் எனக்குக் காத்திருந்தது. ஆண்டு மல ருக்குத் தமிழ்த்தாத்தாவின் கட்டுரை வந்தது. ‘பரம்பரைக் குணம்’’ என்னும் தலைப்புடன், உண்மையாகவே நடந்த சம்பவம் ஒன்றை, எளிய பேச்சு முறையில் ரஸமாக எழுதியிருந்

தார். பழைய காலத்துத் தமிழ்ப் பண்டிதர் ஒருவர்—அதிலும் பண்டித உலகில் இவ்வளவு எளிய நடையில் எழுதக்கூடும், எழுதும் துணிச்சல் அவருக்கு ஏற்படும் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை.

அது முதல் நான் சில சமயம் தனியாகவும், பெரும்பாலும் டி. கே. சி. யுடனும் தமிழ்த் தாத்தாவை அடிக்கடி பார்க்கப் போவதுண்டு. அப்போதெல்லாம் அப்பெரியாரின் வாழ்க்கை அநுபவங்கள் சிலவற்றை அவருடைய வாய் மொழியாகக் கேட்க நேரும். கேட்கக் கேட்க, அந்த அநுபவங்களை யெல்லாம் அவர் புத்தக மாக எழுதவேண்டும் என்று ஆசை உண்டா கும். "உங்களுடைய சுய சரித்திரத்தை நீங் கள் எழுத வேண்டும்" என்று அடிக்கடி தெரிவித்துக் கொள்வோம். மகாத்மா, ஜவா ஹர்லால் நேரு முதலியவர்கள் 'சுய சரிதம்' எழுதியிருப்பதையும் எடுத்துக் காட்டுவோம். "என்னுடைய சரித்திரத்தை நானே எழுதிக் கொள்வது என்பது பிடிக்கவில்லையே?" என் பார் ஐயர்வாள். ஆனாலும் நாங்கள் விடுவ தில்லை. "அதில் ஒரு பிசகும் கிடையாது. தங்களுடைய சுய சரித்திரம் என்றால், அது தமிழ் நாட்டின் எண்பது வருஷத்துச் சரித் திரமாக அல்லவா இருக்கும்?" என்று வற் புறுத்துவோம். எங்களுடைய வேண்டுகோளை அவருடைய அருமைப் புதல்வர் ஸ்ரீ கல்யாண சுந்தரமய்யரும், அவருடைய தலை சிறந்த சிஷ்

யரான ஸ்ரீ கி. வா. ஜகந்நாதய்யரும் ஆதரித்த படியால், கடைசியில் எங்கள் மனோரதம் நிறைவேறிற்று. தமிழ்த் தாத்தா தமது சுய சரித்திரத்தை எழுதச் சம்மதித்து எழுதியும் வந்தார். அது பூர்த்தியாவதற்குள் அவர் காலஞ்சென்றது தமிழ் நாட்டின் பாக்கியக் குறைவேயாகும்.

தமிழ்த் தாத்தாவை நான் பார்க்கப் போன சமயங்களில் அவரிடம் நான் கண்ட ஒரு அருமையான குணம் சிஷ்யர்களிடம் அவருக்கிருந்த அன்புதான். அவருடைய சிஷ்யர்களில் எனக்குத் தெரிந்தவர் வித்வான் ஸ்ரீ கி. வா. ஜகந்நாதன். "கலைமகள்" பத்திரிகையின் துணை ஆசிரியராயிருந்து திறம்பட நடத்தி வருகிறவரும், புது முறையில் சிறு கதைகள் பல எழுதியுள்ளவருமான ஸ்ரீ ஜகந்நாதன், குருவையே தெய்வமாகக் கருதும் உத்தம சிஷ்யர். அவருடைய குரு பக்திக்கு ஈடாக, அவரிடம் தமிழ்த் தாத்தா கொண்டிருந்த அன்பைத்தான் சொல்லலாம். நான் 'தியாகராஜ விலாச'த்துக்குப் போகும் சமயங்களில் ஸ்ரீ ஜகந்நாதன் அங்கு இல்லாவிட்டால், டாக்டர் சாமிநாதய்யர், "உங்கள் நண்பருக்குச் சதா உங்கள் ஞாபகந்தான். அவரை இதோ அழைத்துவரச் செய்கிறேன்" என்பார். உண்மையில் அவர் இந்தச் சாக்கிட்டுத் தமது சிஷ்யரைப்பார்க்க விரும்புகிறார் என்று எனக்குத் தோன்றும். அந்திய காலத்தில்,

தமிழ்த் தாத்தாவின் ஆராய்ச்சி வேலைகளுக்கும் எழுத்துத் தொண்டுக்கும் உற்றதுணையாயிருந்தவர் ஸ்ரீ ஜகந்நாதய்யர்; அய்யர்வாளின் வரலாறு முழுவதையும் அவரிடம் பலமுறை கேட்டறிந்தவர். ஆகவே, குரு தமது சுய சரிதத்தை விட்ட இடத்திலிருந்து ஆரம்பித்துச் சீடர் அவருடைய வரலாற்றைப் பூர்த்தி செய்வாரென்று நம்புகிறேன்.

எப்பேர்ப்பட்ட மகான்களையும், பெரியவர்களையும் நாக்கில் நரம்பில்லாமல் தூஷிக்கக்கூடிய புண்ணியாத்மாக்கள் நம் நாட்டில் இருக்கிறார்கள். காந்திஜியும், ராஜாஜியும் படுகிற பாட்டில் மற்றவர்கள் எல்லாம் எந்த மூலை? "உ. வே. சாமிநாதய்யர் அப்படி என்ன பிரமாதமான தமிழ்த் தொண்டு செய்துவிட்டார்? புத்தகம் போட்டுப் பணம் சம்பாதித்தார்!" என்று சொல்லப்படுவதை நான் கேட்டிருக்கிறேன். புத்தகத் தொழிலைப் பற்றி ஒன்றும் தெரியாதவர்கள் இதை நம்பவும் கூடும். எத்தனை பக்கம்? என்ன அச்சு? எந்த மாதிரி பைண்டு? என்ன காகிதம்? என்பதொன்றும் தெரியாமலே 'விலை ஆறு ரூபாயா? கொள்ளை!' என்று சொல்லுகிறவர்களும் இருக்கிறார்கள். ஆனால், நமது தமிழ்த் தாத்தா புத்தகம் போட்டுப் பணம் சம்பாதித்த கதையை நான் அறிவேன். சாதாரணமாய், 'ரெயி

ஹல்ட்ஸ்' நாவல்களை மொழிபெயர்த்து வெளி யிட்டவர்கள் அடைந்த லாபத்தைக்கூடஅவர் அடையவில்லை. ஏனென்ருல், எவ்வளவோ உழைப்பின் பேரில் அவர் பரிசோதித்து வெளியிட்ட அரிய நூல்கள் எல்லாம் மிகச் சில தமிழன்பர்களே வாங்கக்கூடியவை. ஆயிரம் பிரதிகளுக்குக் குறைந்து எந்தப் புத்தகமும் வெளியிட முடியாது. வெளியிட்டால் அசாத் திய விலை வைக்க வேண்டும். தமிழ்த் தாத்தா போட்ட புத்தகங்களோ வெளியான ஒரு வரு ஷத்திற்குள் சாதாரணமாக 200, 300 பிரதி கள்தான் விற்பனையாகும். அப்புறம் மாதத் துக்கு ஒரு புத்தகம் விற்ருல் பெரிய காரியம். அரிய தமிழ்ப் பொக்கிஷங்கள் என்று சொல் லக்கூடிய புத்தகங்கள் விற்பனையாகாமல் ஒரு வீடு நிறையக் கிடப்பதை நான் அறிவேன். வீட்டுக்கு வாடகை வேறு கையை விட்டுக் கொடுத்து வருகிருர்கள்! மகாமகோபாத்தி யாய தாக்ஷிணாத்ய கலாநிதி திராவிட வித்யா பூஷணம் டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் தமக்கு வினைத்தெரிந்த காலத்திலிருந்து தமிழ்த் தாய்க்குச் செய்து வந்திருக்கும் ஒப் பற்ற தொண்டுக்கு நாம் நன்றி செலுத்த விரும்பினேமானல், அவருடைய ஞாபகத் தைப்போற்ற விரும்பினேமானல் அதற்கு மேற்படி புத்தகங்களில் சிலவற்றை வாங்கிக் கொள்வதைக் காட்டிலும் சிறந்த மார்க்கம் வேறு எதுவுமே கிடையாது.

# சாபம் நீக்கிய கவிஞர்

"ஐயா! கார்டு ஐயா! ரயில் வண்டியின் சக்கரம் எல்லாம் சரியா யிருக்கிறதா? நன்றாய்ச் சோதித்துப் பார்த்தீர்களா?" என்று கேட்டேன்.

ரயில் கார்டு, என்னை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, "எல்லாம் சரியாய்த்தானிருக்கிறது!" என்றார்.

"வழியில் தண்டவாளம் எல்லாம் இருக்க வேண்டிய இடத்தில் பத்திரமாய் இருக்கிறதா? நன்றாய் விசாரித்தீர்களா?" என்றேன்.

கார்டு அவசரமாகத் தலையை அசைத்துவிட்டு ஊதலை வாயில் வைக்கப் போனார்.

"கொஞ்சம் பொறுங்கள்! என்ஜினுக்கு நல்ல கரியாய்ப் போட்டிருக்கிறதா? தண்ணீர் சரியாய் விட்டிருக்கிறதா? யுத்தகால மாயிற்றே? ரொம்பப் பழைய என்ஜினா யிருக்குமே! சமீபத்தில் பழுது பார்த்திருக் கிறதா? ஒரு வேளை மழை பெய்தால் ஒழுகாமல் இருக்குமா? டிரைவர் சரியான மனோ நிலையில் இருக்கிறாரா? ஸர்ச் லைட் சரியா யிருக்கிறதா??...." என்று ஒரே மூச்சில் கேட்டுக்கொண்டே போனேன்.

கார்டு தனது மூக்குக் கண்ணாடியைத் துடைத்துப் போட்டுக் கொண்டு என்னை உற்றுப் பார்த்துவிட்டு, "தங்களுக்கு எந்த ஊர், ஸார்!" என்று கேட்டார்.

"கீழ்ப்பாக்கம்!" என்று நான் சொன்னதும் அவர் ஏதோ அபூர்வமான உண்மையைக் கண்டுபிடித்தவர் போல் புன்னகை புரிந்து விட்டுப் பச்சைக் கொடியை ஆட்டினார்.

பைத்தியக்கார மனுஷர்! நானும் இன்னும் ஐந்தாறு நண்பர்களும் அந்த பெங்களூர் எக்ஸ்பிரஸ் ரயிலில் எதற்காகப் போகிறோம் என்று தெரிந்திருந்தால், என் கேள்விகளை அவர் அவ்வளவு அலட்சியம் செய்திருப்பாரா?

சென்ற 1945-ம் வருஷத்தில் நமது அருமைச் செந்தமிழ் நாட்டில் பல அதிசய சம்பவங்கள் நடைபெற்றன. அவற்றில் முக்கியமானது, தமிழர்கள் தமிழ்க் கவிகளை மதிப்பது, அவர்களைப் போற்றி, மரியாதை செய்வது என்கிற சம்பிரதாயம் ஏற்பட்டதுதான். காலஞ் சென்ற கவிஞர்களை மாத்திரமல்லாமல் ஜீவிய வந்தர்களா யிருக்கும் கவிகளையும் தமிழர்கள் பாராட்டத் தொடங்கினார்கள். வாயினால் பாராட்டியதோடல்லாமல் கவிஞர் களின் நிதிக்குப் பணம் கொடுக்கவும் முன் வந்தார்கள். எட்டயபுரம் பாரதியார் ஞாபகார்த்த நிதிக்கு ரூ. 40 ஆயிரத்துக்கு மேல் வசூலாயிற்று. ஜூன் மாதம் மூன்றாந் தேதி எட்டயபுரத்தில் பாரதி மண்டப அஸ்திவார விழா ராஜாஜியின் தலைமையில் கோலாகலமாய் நடந்தது.

காலஞ் சென்ற கவிஞரின் ஞாபகத்தை நிலை நாட்டப் பொருள் உதவியதோடு தமிழர்கள் நிற்கவில்லை. நம்மிடையே நமது அதிர்ஷ்ட வசமாக ஜீவிய வந்தராய் விளங்கும் நாமக்கல் கவிஞர் ஸ்ரீ இராமலிங்கம் பிள்ளை அவர் களுக்கு நிதி வசூலித்துக் கொடுத்தார்கள். இவ்விதம் கவிஞர்களைப் போற்றும் வழக்கம் சென்ற புண்ணிய 1945-ம் வருஷத்தில் செந்தமிழ் நாட்டிலே மட்டுமல்லாமல் தமிழ கத்துக்கு வெளியே தூர தூர தேசங்களுக்குப் போயிருந்த தமிழர்களையும் பிடித்திருந்தது.

பெங்களூரில் உள்ள தமிழர்களும் தமிழன்பர்களும் தனியாக ஒரு நிதி வசூலித்து நாமக்கல் கவிஞருக்கு நேரில் கொடுக்க ஏற்பாடு செய்திருந்தார்கள். மேற்படி நிதியளிப்பு வைபவம் ஸர் புட்டண்ண செட்டி ஹாலில் டாக்டர் சுப்பராயன் அவர்கள் தலைமையில் நடைபெற ஏற்பாடாகி யிருந்தது. புகழ் பெற்ற விஞ்ஞானி ஸர் ஸி. வி. ராமன் அவர்களின் தர்மபத்னியான ஸ்ரீமதி லோக சுந்தரி ராமன் அவர்கள் நிதி முடிப்பை அளிப்பார்கள் என்றும் அறிவிக்கப் பட்டிருந்தது.

மேற்படி வைபவத்தை முன்னிட்டுத்தான் டாக்டர் சுப்பராயன், ஸ்ரீ சிவஞான கிராமணி, ஸ்ரீ திரிகூட சுந்தரம் பிள்ளை, 'தியாகி' ஸ்ரீ இராம-சடகோபன், தமிழ்ப்பண்ணை சின்ன அண்ணாமலை ஆகியவர்களோடு நானும் பெங்களூர் எக்ஸ்பிரஸில் புறப்பட்டேன். போகும்போதெல்லாம் யாருக்கும் ரயிலில் சரியாகத் தூக்கம் வரவில்லை. ரயில் ஓடும்போது, "இதென்ன இப்படி நிற்காமல் ஓடிக்கொண்டிருக்கிறதே?" என்றும், ரயில் நிற்கும்போது "இதென்ன இப்படி வெகு நேரமாய் நிற்கிறதே?" என்றும் கவலைப்பட்டோம். வழியில் ஜோலார்ப்பேட்டையில் ஒரு பெரிய பயங்கரமான 'படீர்' சத்தத்துடன் கதவு திறக்கப்பட்டுத் 'திடீர், என்று ஒருவர் உள்ளே புகுந்தபோதுஎல்லாரும் 'சடீர் சடீர்'

என்று எழுந்து உட்கார்ந்தோம். வந்தவர், எங்களைப்போல் பெங்களூர் வைபவத்துக்கு வரும் ஸ்ரீ சா. கணேசன் அவர்கள்தான் என்று தெரிந்த பிறகுதான் மறுபடியும் படுக்க முடிந்தது.

"எதற்காக ரயிலைப்பற்றி இவ்வளவு கவலை, பயம் எல்லாம்? அதுவும் 1945-ம் வருஷத்தில்?'' என்று யாராவது கேட்கும் பட்சத்தில் அவர்கள் நாமக்கல் கவிஞர் எழுதியிருக்கும் "என் கதை'' என்னும் அற்புதமான வசன புத்தகத்தைப் படியாதவர்களாய்த் தான் இருக்கவேண்டும். அந்த நூலில் நாமக்கல் கவிஞர் தமக்குப் பொருளுதவி செய்து தம்முடைய பணக் கஷ்டத்தைத் தீர்ப்பதற்கு முயன்ற நண்பர்களுக்கு நேர்ந்த கதியைப் பற்றிச் சாங்கோபாங்கமாக, உணர்ச்சி பொங்கித் ததும்ப, ரோமம் சிலிர்க்கும் படியான நடையில் எழுதி யிருக்கிறார்.

"ராமலிங்கம்! நீ கவலைப்பட வேண்டாம்! உன்னுடைய கடனை யெல்லாம் தீர்த்து உன் பணக் கஷ்டத்தை அடியோடு நிவர்த்தி செய்து விடுகிறேன்!'' என்று சொல்லிவிட்டுப் போன நண்பர் ஒருவர், அவ்வாறு திரும்பி வருவதற்குள் இந்தப் பூவுலகத்தை விட்டே போய்விட்டார்.

அதேமாதிரி கடனைத் தீர்த்து உதவி செய்ய முன்வந்த இன்னொரு நண்பர் 1942 ஆகஸ்டு

இயக்கத்தில் கைதியாகி ஏழு வருஷம் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டார்.

இப்படி ஒவ்வொரு சம்பவத்தையும் விவரித்து விட்டு "எல்லாம் என் அதிர்ஷ்டம்தான்!" என்ற பல்லவியையும் நல்ல வசனத்தில் பாடியிருக்கிறார் கவிஞர்.

கவியின் வாக்கே அப்படியிருக்கும்போது, பெங்களூரில் பண முடிப்பு அளிப்பதற்காக ஏற்படுத்தியிருக்கும் வைபவம் சரியாக நடைபெற்று முடிய வேண்டுமே, அந்த வைபவத்துக்கென்று நாங்கள் பிரயாணம் செய்யும் ரயிலுக்கு ஆபத்து ஒன்றும் நேராமலிருக்க வேண்டுமே என்று நாங்கள் கவலைப்பட்டது இயற்கையே அல்லவா?

என்னுடைய வாழ்க்கையில் நான் கண்டு அநுபவித்த ஆனந்தகரமான காட்சிகளில் ஒன்று பெங்களூர் புட்டண்ணை செட்டி நகர மண்டபத்தில் 21—7—'45 மாலை கண்ட காட்சியாகும். அந்த ஆனந்தக் காட்சியைக் கண்டு வானுலகத்துத் தேவர்களும் ஆனந்தக் கண்ணீர் சொரிவதுபோல் மண்டபத்திற்கு வெளியே வானம் யாருக்கும் அதிகத் தொந்தரவு கொடுக்காமல் சிறு தூற்றல் போட்டுக்கொண்டிருந்தது. மண்டபத்துக்குள்ளே மகாஜனங்கள் நிறைந்திருந்தார்கள். பெரும்பாலும் பெங்களூர்த் தமிழர்கள்தான். தமிழ்நாட்டுக் கவிஞர் ஒருவரைக் கௌரவிப்ப

தற்காகப் பெங்களூர்த் தமிழர்கள் அந்தக் கூட்டத்தைக் கூட்டி யிருக்கிறார்கள் என்று அறிந்து அந்த 'அதிசய' சம்பவத்தைப் பார்ப்பதற்காக ஸ்ரீ சம்பத்கிரி ராவ் முதலிய சில கன்னட ரஸிகர்களும் விஜயம் செய்திருந் தார்கள். தற்காலத் தமிழர்களுக்குத் தமிழ் அபிமானம் அவ்வளவு போதாது, தமிழ்க் கவிஞர்களையும் தமிழ் ஆசிரியர்களையும் தமிழர் கள் அவ்வளவாக உற்சாகத்துடன் பாராட்டுவ தில்லை யென்னும் விஷயம் நமது அக்கம் பக்கத்து மாகாணங்களில் பரவாமல் இருக்க முடியுமா? ஆகையினாலேதான் அவர்களுக்கு மேற்படி சம்பவத்தைப் பற்றி அவ்வளவு அதிசயம்!

மண்டபத்தின் பிரசங்க மேடை நாடகம் நடத்தக் கூடிய அரங்க மேடையைப் போலத் திரைகள், பக்கப் படுதாக்கள் முதலியவற் றுடனே அலங்கரிக்கப்பட் டிருந்தது. அக்கிராசனர் டாக்டர் சுப்பராயன், ஸ்ரீமதி லோகசுந்தரி ராமன், நாமக்கல் கவிஞர் முதலியோர் மேடையை மிக்க அடக்கத்துடன் அலங்கரித்தனர். எதிர் பார்த்தபடி விபத்து ஒன்றுமில்லாமல் வைபவம் மிகச் சிறப் பாக நடைபெற்றது. ஸ்ரீ இராமசடகோபன், ஸ்ரீ சா. கணேசன், ஸ்ரீ திரிகூடசுந்தரம்பிள்ளை, ஸ்ரீ. அ ஸ்ரீநிவாஸராகவன் முதலியோர் நாமக்கல் கவிஞரைப் பற்றிச் சொல்மாரி பொழிந்தார்கள். இடை யிடையே

தமிழ்ப்பண்ணை அண்ணாமலை நாமக்கல் கவிஞரின் பாடல்களைக் கம்பீரமான குரலில் பாடி முழக்கினார்.

கவிஞரைப் பற்றி நானும் சில வார்த்தைகள் கூறினேன். அவர் "என் கதை" யில் விவரித்துள்ள விபரீத சம்பவங்களைக் குறிப்பிட்டு விட்டு, ரயில் புறப்பட்டதிலிருந்து நாங்கள் அடைந்திருந்த பீதி யெல்லாம் பொய்யாகி இந்த வைபவம் இவ்வளவு சீரும் சிறப்புமாக நடந்தது பற்றி எனது மகிழ்ச்சியைத் தெரிவித்தேன். ஆனாலும், "கவிஞரின் கையில் பணம் போய்ச் சேரும் வரையில் கொஞ்சம் கவலைதான்!" என்று சொன்னேன். ஸ்ரீமதி லோகசுந்தரி ராமன் வெள்ளித் தட்டிலே வைத்திருந்த ரூபாய் மூவாயிரத்தையும் நாமக்கல் கவிஞரின் கையிலே ஒப்புவித்து விட்டு, உடனே பக்கத்திலிருந்த என்னைப் பார்த்து, "இனிமேல் உமக்குக் கவலை இல்லையே?" என்று கேட்டார்.

"இல்லை" என்று சொல்லிவிட்டு உடனே ரயிலுக்குப் புறப்பட்டேன்.

நல்ல வேளையாக நான் உடனே புறப்பட்டேன். இரண்டு நாள் கழித்துத் தமிழ்ப்பண்ணை அண்ணாமலை பெங்களூரிலிருந்து திரும்பி வந்தார். அவரிடம், "நான் ரயிலுக்குப் புறப்பட்ட பிறகு கூட்டம் நன்றாக நடந்து முடிந்ததல்லவா?" என்று கேட்டேன்.

"ஆம்; நடந்து முடிந்தது. ஆனால் நல்ல வேளையாக நீங்கள் அப்போது புறப்பட்டீர்கள், இல்லாவிட்டால் .......?" என்றார்.


"இல்லாவிட்டால் என்ன?" என்று சிறிது வியப்புடன் கேட்டேன்.

"நீங்கள் புறப்பட்ட சிறிது நேரத்துக்கெல்லாம் ஸ்ரீ திரிகூடசுந்தரம் பிள்ளை பேசிக்கொண்டிருந்தார். அப்போது மேலே சுருட்டிக் கட்டியிருந்த திரை திடீரென்று அவிழ்ந்து விழுந்தது! நீங்கள் உட்கார்ந்திருந்த நாற்காலிக்கு நேரே படீரென்று விழுந்தது! நல்ல வேளை! உங்கள் தலைக்கு வந்தது நீங்கள் உட்கார்ந்திருந்த நாற்காலியோடு போயிற்று!" என்றார்.

"யாருக்கும் ஒன்றும் நேரவில்லையே?" என்று கவலையோடு கேட்டேன்.

"இல்லை; திரை விழுந்த அதிர்ச்சியில் தரையில் கிடந்த சோடாப்புட்டி துள்ளிக் குதித்து அக்கிராசனர் மேஜை மேல் ஏறி உட்கார்ந்து கொண்டது. டாக்டர் சுப்பராயன் ஒரு நிமிஷம் திகைத்துப் போனார். மற்றப்படி ஒன்றுமில்லை!" என்றார்.

பெங்களூரில் புட்டண்ண செட்டி மண்டபத்துக் காட்சியைக் காட்டிலும் பன்மடங்கு ஆனந்தமான காட்சியை அடுத்த ஆகஸ்டு




நாமக்கல் கவிஞர் நி நி
அளிப்புவிழா சென்னை
கோகலே ஹாலில்
ஆரம்பமாகிவிட்டது
நகர மக்களின் சார்பா
மேயர் ராதாகிருஷ்ண
பிள்ளை அவர்கள் எல்
லோரையும் வரவேற்
கிறார்.



விழாத் தலைவர் ராஜாஜி பேசுவதை நாமக்கல் கவிஞர் சுவாரஸ்யமாகக் கேட்டுக்
கொண்டிருக்கிறார். எல்லோருடைய முகத்திலும் ஆனந்தம் தென்படுகிறது





நாமக்கல் கவிஞரை வாழ்த்தி
வந்திருக்கும் செய்திகளை ராஜாஜி
கவிஞரிடம் கொடுக்கிறார்



நாமக்கல் கவிஞரும்
அவரது மனைவி
மக்களும்

மாதம் பதினோராந் தேதி சென்னை கோகலே மண்டபத்தில் கண்டோம். ராஜாஜி தலைமை வகிக்க, தமிழ் நாட்டின் அரசியல் பிரமுகர்கள், இலக்கியப் பிரமுகர்கள் அவ்வளவு பேரும் மேடையில் வீற்றிருந்தார்கள் மண்டபத்திலோ எள்ளுப் போட்டால் தரையில் விழ முடியாதபடி நெருங்கிய கூட்டம். கோகலே மண்டபத்தில் அவ்வளவு கூட்டம் அதற்கு முன்னாலும் கூடியதில்லை, பின்னாலும் கூடப் போவதில்லை என்று சொல்லும்படி கூடியிருந்தது.

கூட்டத்தின் ஆரம்பத்திற்குக் குறிப்பிட்டிருந்த மணி ஐந்து அடித்தது. ஆனால் கவிஞர் வந்து சேரவில்லை. என் நெஞ்சு டக்கு, டக்கு என்று அடித்துக் கொள்ள ஆரம்பித்தது. பழைய பீதிதான் காரணம். "என் கதை"யில் கவிஞர் குறிப்பிட்டிருந்த விபரீத சம்பவங்கள் ஒவ்வொன்றாக ஞாபகத்துக்கு வந்துகொண்டிருந்தன. மணி ஐந்தே கால் ஆயிற்று. இன்னமும் கவிஞர் வரவில்லை. என் இருதயம் டக் டக், டக் டக் என்று துரித காலத்தில் அடித்துக்கொள்ள ஆரம்பித்தது. ஏனெனில், அந்த நாளில் சென்னை நகரின் வீதிகளில் இராணுவ மோட்டார் லாரிகளின் ஆர்ப்பாட்டம் ரொம்ப அதிகம். சாலையோடு போகிறவர்களைத் துரத்திக் கொண்டுபோய் மோதுவதில் மேற்படி இராணுவ லாரிகளுக்கு

அளவில்லாத மோகம். அதிலும் ஒரு தமிழ்க் கவிஞர் தம்மைக் கௌரவிப்பதற்காகக் கூடி யிருக்கும் கூட்டத்துக்குப் போகிறார் என்று தெரிந்தால், மேற்படி ராணுவ லாரிகளின் மோகம் அளவு மீறிப்போய் விடலாமல்லவா? அவை கவிஞரைத் துரத்தவே ஆரம்பித்து விடலாமல்லவா?

நல்ல வேளையாக, அப்படியெல்லாம் ஒன்றும் நேராமல் மணி 5-30க்கு நாமக்கல் கவிஞர் தமது தர்மபத்தினி சகிதமாக மண்டபத் துக்குள் பிரவேசித்தார். அந்த மூதாட்டி யைப் பார்த்ததும், தாமதத்துக்குக் காரணம் வேறு ஒன்றுமில்லை யென்று எல்லாருக்கும் தெரிந்து போய்விட்டது. பிறகு வைபவம் மிகச் சிறப்பாக ஆரம்பமாகிக் கோலாகலமாக நடைபெற்றது. பிரசங்கிகள் இடையிடையே வறண்டுபோன தொண்டையைச் சோடா விஞல் நனைத்துக் கொண்டு சரமாரியாகப் பிரசங்கமாரி பொழிந்தார்கள். ரூ. 13 ஆயிரம் சொச்சம் வைத்திருந்த வெள்ளித் தட்டை நாமக்கல் கவிஞர் பெற்றுக்கொண்டு அருகில் அமர்ந்திருந்த தம் மனைவியாரிடம் கொடுக்க, தலைவர் ராஜாஜி "பணம் சேரவேண்டிய இடத்தில் சேர்ந்து விட்டது!" என்று சொன்னதும் மண்டபமே இடிந்து விடும் போல் சபையில் ஆரவாரம் எழுந்தது.

அதே நிமிஷமே கவிஞரின் "என் கதை" யைப் படித்ததினுல் எனக்கு ஏற்பட்டிருந்த கவலே அடியோடு நீங்கிற்று. அந்த நிமிஷமே "தமிழ்க்கவிகளேயும் தரித்திரத்தையும் பிரிக்க முடியாது" என்று ஏற்பட்டிருந்த சாபக் கேடும் தீர்ந்தது! அந்த நிமிஷமே தமிழ்க் கவிகளேத் தமிழ் மக்கள் பாராட்டுவதில்லே யென்ற வசைமொழியும் ஒழிந்தது!

"நாமக்கல் கவிஞர் வைபவங்களேப் பற்றி இவ்வளவு தூரம் எழுதுகிறீரே, அது யார் அந்த நாமக்கல் கவிஞர்?" என்று இப்போது வாசகர்கள் கேட்டாக வேண்டும். அவ்விதம் 'யார் அது?' என்று கேளுங்கள் என்பதாக நாமக்கல் க வி ஞ ரே நம்மெல்லாரையும் கேட்டுக் கொள்கிறுர். அதற்காகவே தாம் கவிகள் எழுதப் புகுந்ததாகவும் தெரிவித்துக் கொள்கிறுர்.

"சங்கொலி" என்னும் அழகான கவிதைப் புத்தகத்தின் முன்னுரைப் பாடலில் கவிஞரின் மேற்படி கோரிக்கை வெளியாகி யிருக்கிறது. கேளுங்கள்:—

நாரத கீதமென்ன
நயந்திகழ் பாடலாலே
பாரத நாட்டை யென்றும்
பணிந்திடும் சுப்ரமண்ய
பாரதி பாட்டைக் கண்ட
பழைய இத் தமிழர் நாட்டில்
'யாரது?' என்று கேட்க
யானுமிக் கவிகள் சொன்னேன்.

கம்பர் தமது இராமாயணத்தின் பாயிரத்தில் வால்மீகி முனிவரைக் கவிதா சிம்மாசனத்தில் ஏற்றி வைத்து வணக்கம் செலுத்தி விட்டு மேலே தமது பாடலைத் தொடங்குவது போல, நாமக்கல் கவிஞரும் பாரதியாரைக் கவிதா சிம்மாசனத்தில் ஏற்றி வைத்து வணங்கி விட்டுப் பிறகு தமது கவிதைச் சங்கை எடுத்து ஒலிக்கத் தொடங்குகிறார். அந்தச் சங்கொலி யிலேதான் என்ன என்ன மதுர கீதங்களை யும், இனிய ஓசைகளையும், கம்பீர நாதங்களை யும் கேட்கிறோம் !

அந்த நாதங்கள் எல்லாவற்றுக்கும் மேலே எழுந்து நம் காதில் ஒலிக்கும் நாதம் தமிழை யும், தமிழ் மகனையும், தமிழ் நாட்டையும் புகழ்ந்து பாராட்டித் தட்டியெழுப்பித் தைரிய மூட்டும் சுதந்திர நாதமே யாகும்.

சங்கொலி எழுந்தது
சங்கடம் அழிந்தது
தைரியம் கொள்வாய்
தமிழ் மகனே !
கங்குலும் கழிந்திடும்
கதிரொளி பொழிந்திடும்
கவலை யெல்லாம் விடு
தமிழ் மகனே !

என்று படித்த பிற்பாடும் ஒரு தமிழ் மகன் கவலையை உதறித் தள்ளிவிட்டுத் துள்ளி எழுந்திருக்கவில்லை யென்றால், நல்லது, பின் வரும் பாட்டை அந்தப் புண்ணியவான் கொஞ்சம் படித்துப் பார்க்கட்டும்:—

மன்னவன் நானே மந்திரி என்சொல்
மற்றவர்யாருக்குச் சுற்றமிது?
என்னுடை நாடு என்னுடை வீடு
யாரிதில் என்னை மிரட்டுவது?
அன்னியர் இங்கே உள்ளவர் யாரும்
அண்டிப் பிழைத்திட வந்தவரே
என்னுடை ஏவல் சொன்னதைச் செய்தோர்
என்னை அடக்குதல் இன்னுமுண்டோ?

ஒருவேளை ஜனநாயகத்தில் ஆர்வ மிகுதியினால் ராஜா-மந்திரி முதலிய வார்த்தைகளையே பிடிக்காதவர்கள் சிலரும் இருக்கலாம் அல்லவா? அப்படிப்பட்டவர்கள், நாமக்கல் கவிஞர் விரும்புகிற இலட்சிய நாடு எது என்பதைப் பின் வரும் கவியில் தெரிந்து மகிழ்வார்களாக:—

மன்னவன் என்ற மனிதனில்லை அங்கே
மந்திரி தந்திரி யாருமில்லை
சின்னவர் என்று எவருமில்லை - பட்டம்
தேடியலைந்திடும் மக்களில்லை!

இதுமட்டும்தானா? நமது நாமக்கல் கவிஞர் விரும்புகிற இலட்சிய நாட்டில், கச்சேரி என்றொரு கட்டிடம் இல்லை; அதைக் கண்டு யாரும் நடுங்குவதும் இல்லை; பள்ளிப் படிப்புக்குச் சம்பளமில்லை; பரீட்சைக்குப் பணம் என்றும் பந்தாடப் பணம் என்றும் பிச்சுப் பிடுங்குதல் இல்லை. வேலையில்லாதார் யாரும் அந்த நாட்டிலில்லை; ஆனால், வீணருக்கு மட்டும் அங்கு வேலை ஒன்றும் இல்லை. வாது வழக்குக்கு அந் நாட்டில் நேரம் இல்லை. சூது

செய் பந்தயம் ஏதும் இல்லை; கால்வாய் மேஸ்திரி என்ற தொல்லை இல்லை; கள்ளர் பயம் என்ற சள்ளை கிடையவே கிடையாது!

இதையெல்லாம் படித்ததும் அப்பேர்ப்பட்ட அதிசயமான நாட்டுக்கு உடனே ஒரு மூன்றும் வகுப்பு டிக்கட் வாங்க வேண்டும் என்ற விருப்பம் தோன்றாதவர்கள் யார் இருக்க முடியும்? இப்போதெல்லாம் உள்ள ரயில் நெருக்கடியை முன்னிட்டு ஒருவேளை டிக்கட் கிடைப்பது கஷ்டமாயிருந்தால் கவிஞரின் கற்பனை நாட்டைப் பற்றி அவருடைய கவிதையிலே படித்தாவது மகிழ்வோமாக.

"திலகர் விதைத்த வித்து பாரதியாக முளைத்தது. காந்தி தூவின விதை நாமக்கல் கவிஞராகத் தோன்றியது" என்று ஒரு சமயம் ராஜாஜி கூறினர்.

நாமக்கல் கவிஞருக்குக் "காந்திய கவி" என்று சிலரால் பட்டம் சூட்டப்பெற்றிருக்கிறது. அந்தப் பட்டம் முற்றிலும் பொருத்தமானது என்பதை அவருடைய கவிதைகள் சிலவற்றிலிருந்து நன்கு அறியலாம். காந்திஜியின் பேரிலும், காந்தீயத்தின் பேரிலும் நாமக்கல் கவிஞருக்கு அளவில்லாத பக்தி. ஆனல் அப்பேர்ப்பட்ட காந்தி மகான் பெருமையை உணராதவர்களை நினைத்தால் நமது கவிஞருக்குக் காந்தீய தத்துவங்களைக் கூடப்

பறக்க விடும்படியான அவ்வளவு கோபம் பொங்கி வந்துவிடுகிறது. அவர்களை மனமார —நாவாரத் திட்டி வசைக் கவியே பாடி விடுகிறார்:—

மண்டலம் முழுவதும்
சண்டைகள் மலிய
மாந்தர்கள் பெருந்துயர்
சேர்ந்துளம் நலிய
கண்டுள பின்னரும்
காந்தியை நினையார்
கல்லையும் மண்ணையும்
கட்டையும் அணையார்.

கவிஞரின் கோபம் ஒருபுற மிருக்க, அவருடைய பின்வரும் வரிகளில் கண்ட உண்மையை யார்தான் மறுக்க முடியும்?

மன்னரும் வீரரும்
மந்திரி மார்கள்
மண்ணொடு மண்ணாய்
மறைந்திடு வார்கள்
உன்னரும் காந்தியின்
பெரும் பெயர் ஒன்றே
உலகினில் நிரந்தரம்
உயர்ந்திடு மன்றோ!

தமிழ் நமது தாய்மொழி. தமிழை நாம் போற்றிப் பாராட்டுவதற்கு அது நம் தாய் மொழி யென்ற ஒரு காரணமே போதும்.

ஆனால், தமிழ் மொழிக்கு வேறு பல சிறப்புக்களும் இருக்கத்தான் செய்கின்றன. உலகிலே வேறு எந்த பாஷைக்கும் இல்லாத ஒரு

தனிப்பெருஞ்சிறப்பும் தமிழ்மொழிக்குஉண்டு. உலகின் பழம் பெரும் பாஷைகளான ஸம்ஸ்கிருதம், கிரீக், லாட்டின், ஹீப்ரு ஆகிய பாஷைகள் இப்போது மக்களின் நாவில் நடமாடவில்லை. மேற்கண்ட பாஷைகளில் இப்போது கவிதை புனைவோரும் வசனம் இயற்றுவோரும் இல்லை. புத்தகங்களிலும் சுவடிகளிலும் புலவர்களிடத்துமே மேற்படி பாஷைகளைக் காணவேண்டும்.

ஆங்கிலம் முதலிய நவீனச் சிறப்பு வாய்ந்த பாஷைகள் சமீப காலத்தில் தோன்றி வளர்ந்தவை. அந்தப் பாஷைகளின் துரித மான வளர்ச்சி சில நூற்றாண்டு காலத்தில் அவற்றை உருத் தெரியாமல் செய்து விடுகின்றன. ஆங்கிலம், பிரஞ்சு, ஹிந்தி, வங்காளி முதலிய பாஷைகளில் ஆயிரம் வருஷத்துக்கு முற்பட்ட இலக்கியம் எதுவும் கிடையாது.

ஐந்நூறு வருஷத்துக்கு முன்னால் சாஸர் என்பவர் எழுதிய இங்கிலீஷ் இலக்கியம் இப்போதுள்ள ஆங்கிலேயருக்கு — அதைத் தனிப்படக் கற்றால் அன்றி — வேறு பாஷை போலவே தோன்றும். சொற்களும், சொற்றொடர்களும் அவ்வளவு உரு மாறிப் போயிருக்கின்றன.

ஆனால், தமிழ் பாஷையிலோ மூவாயிரம் வருஷங்களுக்கு முன்பு முத்தொள்ளாயிரம்

பாடிய கவிகளும், இரண்டாயிரம் வருஷங் களுக்கு முன்பு திருக்குறள் இயற்றிய வள்ளு வரும், ஆயிரம் வருஷங்களுக்கு முன்பு இராமா யணம் பாடிய கம்பரும் நேற்றுப் பாடிய தேசிய மகா கவி பாரதியாரும், இன்று பாடும் நாகர்கோவில் கவிஞர் தேசிகவிநாயகம் பிள்ளையும் நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளையும் ஒரே விதமான தமிழ் பாஷையைக் கையாளுகிறார்கள். அன்றுபோலவே இன்றும் தமிழ் மக்களின் நாவில் உலவும் தமிழ் பாஷையைக் கையாளுகிறார்கள். வள்ளுவர் உபயோகித்த தமிழ்ச் சொற்களையும் சொற் றொடர்களையும் அதே பொருளில் கம்பர் கையாண்டார்; பாரதியார் கையாண்டார்; இன்று நாகர்கோவில் கவிஞரும் நாமக்கல் கவிஞரும் கையாளுகிறார்கள்.

அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்

என்ற குறளில் எத்தகைய தெள்ளிய பளிங்கு போன்ற தமிழ் நடையை வள்ளுவர் கையாண்டிருக்கிறார்.

இன்றைக்கும் அதே சொற்களை அதே பொருளில் நமது கவிஞர்களும் நாமும் உபயோகப் படுத்துகிறோமல்லவா?

இதை எண்ணிப் பார்க்கப் பார்க்க ஒரு மகத்தான அற்புதமாகவே தோன்றுகிறது. தமிழ் மொழியின் இந்தச் சிறப்பை நினைக்க நினைக்க வியப்பு அதிகமாகிறது. அந்த வியப்பைத்தான் "கன்னித் தமிழ்" என்ற பாடலில் நாமக்கல் கவிஞர் வெளியிட்டிருக்கிறார்.

கவிஞர்கள் என்றால் யாராவது காதலியைக் கண்டுபிடித்து வர்ணனை செய்தாக வேண்டும். இல்லாவிடில் அவர்களுடைய கவிதைத் தாகம் தணியவே தணியாது. பாரதியார் கண்ணபிரானைக் கண்ணம்மா ஆக்கி வர்ணித்துக் காதலித்து மகிழ்ந்தா ரல்லவா?

அவ்விதமே நமது நாமக்கல் கவியும் ஒரு காதலியைத் தேடிக் கண்டு பிடித்தார்! கண்டு பிடித்ததும் தாம் அமரனாகி விட்டதாகவே எண்ணி ஆனந்தத்தில் துள்ளினார்.

குமரிமலர் கொண்டுவந்தனள்-பல
கொத்துக் கொத்தா யின்பந்தந்தனள்
அமரநிலை கொண்டு துள்ளுவேன்--அந்த
ஆனந்தம் என்னென்று சொல்லுவேன்!

காதலியைக் கண்டு பிடித்த ஆனந்தத்தினால் கவிஞர் துள்ளி அமர்ந்த பிறகு அவளை வர்ணனை செய்யத் தொடங்குகிறார்.

வட்டவடிவத் திகைமும்--புது
வண்ணம் தொடுத்த மலர்களும்
பட்டும் ஜரிகையும்......

இவை போன்ற செயற்கை அழகுகள் அந்தக் காதலிக்கு இல்லையென்று சொல்வதற்கே கவிஞர் இவ்வளவு ஆர்ப்பாட்டம் செய்கிறார்!

பட்டும் ஜரிகையும் இன்றியும்--தங்கப்
பாவை எனும்படி நின்றனள்.

இத்தகைய தங்க விக்கிரகம் போன்ற இலட்சணமான பெண்ணாயிருந்த போதிலும், பேச்சு வார்த்தை மாத்திரம் கொஞ்சம் மட்டந் தான்— அவள் பேசியது கிராமிய பாஷை தான் என்று கவிஞர் வர்ணனைக்கிடையே உண்மையைச் சொல்லிவிடுகிறார்:—

பாமரச் சொற்களிற்பேசினள் -- வெறும்
பண்டித வார்த்தைகள் கூசினள்

என்று படிக்கும்போது நாமக்கல் கவிஞர் மேற்படி வரிகளை நமது ரசிகமணி டி. கே. சி.யின் கவனத்தைக் கவர்ந்திழுப்பதற்காகவே பாடினரோ என்று தோன்றுகிறது. "தமிழ் மக்களின் நாவிலே நடமாடும் பேச்சுத்தமிழ் தான் உண்மையான தமிழ்; அந்தப் பேச்சுத் தமிழ்நடைதான் நல்ல வசன நடை" என்பது ரசிகமணியின் திடமான கொள்கையல்லவா ? இருக்கட்டும்; இப்படிப் பாமர பாஷையிலே பேசும் கவிஞரின் காதலிக்குப் பிராயம் என்னவென்று பார்ப்போம்.

தயவு செய்து திடுக்கிட்டுப் போகாதீர்கள்! நாமக்கல் கவிஞர் காதலிக்கும் பெண்ணின் பிராயம் பல ஆயிரம் ஆண்டுகள்!

பற்பல ஆயிரம் ஆண்டுகள் -- இந்தப்
பாரில் இருந்தறம் பூண்டவள்
அற்புதம் இன்னமும் கன்னியே -- புது
அழகுதரும் தமிழ் அன்னையே!

என்னவெல்லாமோ எப்படியெல்லாமோ ஒரு பெண்ணை வர்ணனை செய்து யாரோ காதலியைத்தான் வர்ணிக்கிறார் என்று நம்மை நினைக்கச் செய்து ஏமாற்றிவிட்டுக் கடைசியில் "அன்னை!" என்று முடிக்கிறார் கவிஞர்.

ஆனால் எப்பேர்ப்பட்ட அன்னை! பல்லாயிரம் ஆண்டு பிராயம் ஆகியும் இன்னும் கன்னியாக இருக்கும் அன்னை! பழைய கர்நாடகமா யிராமல் காலத்துக் கேற்பப் புதிய புதிய அழகுகளைத் தந்துகொண்டிருக்கும் அன்னை.

அத்தகைய அன்னையைக் குறித்து "அற்புதம்! அற்புதம்!" என்று எத்தனை தடவை சொன்னால்தான் என்ன?

கவிதையிலும் கன்னியின் வர்ணனையிலும் ஈடுபட்டதில் எந்தக் கேள்வியைக் கேட்டுக் கொண்டு ஆரம்பித்தோமோ அதை மறந்து விட்டோம்.

அதாவது, இந்த நாமக்கல் கவிஞர் என்பவர் யார் ?

நல்லது ; நான் பதில் சொல்கிறேன். பதில் சொல்வதற்கு நான் ஓரளவு உரிமையுள்ளவன். முதன் முதலாக 1922-ம் ஆண்டில் கரூரில் நாமக்கல் கவிஞரை நான் சந்தித்தேன். அந்த வருஷம் ஜனவரி மாதத்தில் அவருடைய அக்கிராசனத்தின் கீழ் நடந்த பொதுக்கூட்டத்தில் பேசியதன் பலனாகத்தான் நான் ஒரு வருஷம் கடுங்காவல் தண்டனை அனுபவிக்க நேர்ந்தது.

அது முதல் நாமக்கல் கவிஞரை நான் நன்கு அறிவேன். அவருடன் நெருங்கிப் பழகியிருக்கிறேன். அவருடைய குண விசேஷங்களைத் தெரிந்து கொண்டிருக்கிறேன். அவருடைய பாடல்களைப் பிரசாரம் செய்து பரப்பியிருக்கிறேன். "கத்தியின்றி ரத்தமின்றி" என்று ஆரம்பிக்கும் உப்பு சத்தியாக்கிரஹப் பாடலைக் கூட்டத்தோடு சேர்ந்து பாடிக்கொண்டு ஊர் ஊராகச் சென்றிருக்கிறேன்.

ஆகவே, "நாமக்கல் கவிஞர் யார் ?" என்று இதோ சொல்கிறேன்.

நாமக்கல் கவிஞர் ஓர் அரிய கலைஞர்; தலை சிறந்த தேச பக்தர்; தேசத்துக்காகத் தியாகம் பல செய்தவர்; சிறைவாசம் புரிந்தவர்; ஒழுக்கத்தில் உயர்ந்தவர்; நண்பர்களின் அன்பைக் கவர்ந்தவர்; கள்ளங் கபடற்ற உள்ளத்தினர்; புகழுக்கும் பொருளுக்கும் ஆசைப்படாதவர்; ஆடம்பரத்தை அடியோடு வெறுப்பவர்.

"ஆடு ராட்டே சுழன்றாடு ராட்டே!"

என்று பாடி, அந்தப் பாட்டின் மயக்கத்தில் தமிழ் நாட்டையே சுழன்றாடச் செய்தவர்.

அவர் நீடூழி வாழ்க!

சுபம்.

## அனுபந்தம்

*1945-ம் வருஷம் ஜூன் 3-ந் தேதி நடைபெற்ற பாரதியார் ஞாபகார்த்த மண்டப அஸ்திவார விழா நிகழ்ச்சிகள் 'கல்கி'யில் வெளிவந்தது.*

# பொழுது புலர்ந்தது

தினந் தினம் பொழுது புலரத்தான் செய்கின்றது; சூரியனும் உதயமாகின்றது. ஆனாலும் கடந்த 1945-ம் வருஷம் ஜூன் மீ 3உ சூரியோதயம் ஒரு தனி மகிமை பெற்று விளங்கிற்று. அந்த மகிமையை மற்ற இடங்களில் உள்ளவர்கள் கண்டார்களோ, என்னமோ, தெரியாது. அன்று காலை எட்டயபுரத்தில் தமிழ் நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் கூடியிருந்தவர்கள் நிச்சயமாய்க் கண்டார்கள்.

கண்டதோடு, "இது சாதாரணமாய்த் தினந் தோறும் உதயமாகும் சூரியன் அல்ல; தமிழ் நாட்டின் மகோந்நதத்தைப் பிரகாசிக்கச் செய் வதற்காகவே உதித்த தனிப் பெருமை வாய்ந்த சூரியன்" என்பதாக அறிந்தார்கள்.

"பொழுது புலர்ந்தது ; யாம் செய்த தவத்தால்
புன்மை இருட்கணம் போயின யாவும்
எழுபசும் பொற்சுடர் எங்கணும் பரவி
எழுந்து விளங்கிய தறிவெனும் இரவி"

என்று பாரதியார் பாடியது அந்த ஜூன் மீ 3வ சூரியோதயத்தைப் பற்றித்தான் என்றும் உணர்ந்தார்கள்.

அன்று அதிகாலையில் பலபலவென்று கிழக்கு வெளுத்துக் கொண்டிருந்தபோதே, பாரதியார் ஞாபகார்த்த மண்டபம் அமையப்போகும் நிலத்தில் அஸ்திவார விழாவுக்காகப் போட்டி ருந்த விஸ்தாரமான பந்தலில், ஜனங்கள் திரள் திரளாக வந்து கூட ஆரம்பித்து விட்டார்கள். சூரியன் உதிப்பதற்கு முன்பே சுமார் 3000 பேர் கூடிவிட்டார்கள். சரியாகச் சூரியோத யம் ஆகிக்கொண்டிருந்த சமயத்தில் ஸ்ரீ சக்கர வர்த்தி இராஜகோபாலாச்சாரியார், ஸ்ரீ டி. கே. சிதம்பரநாத முதலியார், எட்டயபுரம் சமஸ்தான மகாராஜா, நாமக்கல் கவிஞர், டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன், டாக்டர் சுப்ப ராயன், ஸ்ரீ ஏ. வைத்தியநாத ஐயர் முதலிய தலைவர்கள் பந்தலுக்கு வந்து சேர்ந்தார்கள்.

உடனே பாரதியார் ஞாபகார்த்த மண்டபத் தின் அஸ்திவார நாட்டு விழா ஆரம்பமாயிற்று.

அஸ்திவாரத்துக்காகத் தோண்டப் பட்டிருந்த பள்ளத்தில், ராஜாஜியும், எட்டயபுரம் மகாராஜாவும் இறங்கினர்கள். ஏற்கெனவே கொத்தனர் அங்கு ஆயத்தமா யிருந்தார். எட்டயபுரம் ராஜா எடுத்துக் கொடுத்த செங்கல்லை ராஜாஜி தமது இரு கரங்களினலும் வாங்கித் தரையில் வைத்தார். கொத்தனர் கரணையில் எடுத்துக் கொடுத்த சுண்ணம்பை மேலே தடவி, மீண்டும் அங்கிருந்த ஏழெட்டுச் செங்கல்களையும் ஒவ்வொன்ருய் எடுத்து வைத்துச் சுண்ணம்பு தீற்றினர்.

அச்சமயம் பாரதியாருடைய இரு புதல்விமார்களும் பேத்தியும்,

"முருகா முருகா முருகா
வருவாய் மயில் மீதினிலே
வடிவேலுடனே வருவாய் !"

என்னும் தமிழ்க் கடவுளின் அரிய தோத்திரப் பாடலை அருமையாகப் பாடிக் கொண்டிருந்தார்கள்.

ராஜாஜி எல்லாச் செங்கல்களையும் எடுத்து வைத்துவிட்டுப் பள்ளத்திலிருந்து மேலே ஏறிய போது 'கல்கி' ஆசிரியர் ராஜாஜிக்கு மலர் மாலைகள் அணிந்து வரவேற்று, "தங்களை அஸ்திவாரக் கல் மட்டுந்தான் நாட்டச் சொன்னேம். தாங்கள் கட்டிடத்தையே கட்டி விடுவீர்கள் போலிருக்கிறதே!" என்று கூற, அருகிலிருந்தவர்கள் எல்லாரும் 'கொல்' என்று நகைத்தார்கள். இப்படிக் குதூகலமான சிரிப்புக் கிடையே

தலைவர்கள் எல்லோரும் மேடைக்குச் சென்று அமர்ந்தார்கள்.

கான ஸரஸ்வதி ஸ்ரீமதி டி. கே. பட்டம்மாள் "பொழுது புலர்ந்தது" என்னும் பாரதியாரின் மதுர கீதத்தைப் பூபாளம், பிலஹரி முதலிய நாலு ராகங்களில் பாடிய பின்னர், நடவடிக்கைகள் ஆரம்பமாயின.

**சபை யமைப்பு**

மேடையிலிருந்து பார்த்தால், அந்தச் சூரியோதய வேளையில் பந்தலில் ஆயிரக் கணக்கான ஜனங்கள் அமர்ந்திருந்த காட்சி கண் கொள்ளாக் காட்சியா யிருந்தது.

அஸ்திவாரக் கல் நாட்டும்போது மூவாயிரம் பேராயிருந்த கூட்டம் வரவரப் பெருகி, ராஜாஜி பேசும் சமயயத்தில் பதினாயிரம் பேருக்குமேல் ஆகிவிட்டது.

மேடைக் கெதிரே பத்திரிகை நிருபர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் தனியாக இடம் வகுக்கப்பட்டிருந்தது. அவ்வாறே மேடைக்குப் பக்கத்தில் ஸ்திரீகளுக்குத் தனியாக இட வசதி செய்யப்பட்டிருந்தது. சுமார் நூறு பெண் மணிகளுக்கு மேல் அந்த அதிகாலை நேரத்தில் அங்கு வந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

பந்தலில் கூடியிருந்தவர்களில் குறைந்த பட்சம் சுமார் இரண்டாயிரம் பேர், வெளியூர்களிலிருந்து அதாவது தமிழ் நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் வந்திருக்கலாம் என்று மதிப்

பிடப்பட்டது. கொழும்பிலிருந்து இந்த வைபவத்துக்காகவே ஒரு அன்பர் வந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

சபை ஏழு மணிக்கு ஆரம்பமாகிச் சரியாக 12-30 வரையில் மொத்தம் 5-30 மணி நேரம் நடைபெற்றது. அத்தனை நேரமும் மேலும் மேலும் ஜனங்கள் வந்துகொண்டிருந்தார்களே யல்லாமல், ஒருவராவது பந்தலிலிருந்து எழுந்து செல்லவில்லையென்பது குறிப்பிடத் தக்கது. ஜூன் மீ 3உயன்று எட்டயபுரம் வந்திருந்தவர்களைத் தவிர, நாடெங்கும் பரவிப் படர்ந்துள்ள தமிழன்பர்களின் உள்ளங்கள் எல்லாம் அன்று எட்டயபுரத்திலேதான் இருந்திருக்க வேண்டுமென்று வந்திருந்த ஏராளமான வாழ்த்துச் செய்திகளின் மூலம் தெரியவந்தது. வாழ்த்துச் செய்திகளில் எல்லாவற்றிலும் முக்கியமானது காந்தி மகாத்மாவினிட மிருந்து வந்த ஆசிச் செய்தி என்று சொல்லவேண்டியதில்லை. மகாத்மாவின் திருக்கரத்தினால் தமிழிலே எழுதப்பட்டிருந்த மேற்படி செய்தி, காந்திஜி படத்துடனும் பாரதி படத்துடனும் சேர்த்துச் சட்டம் போடப்பட்டு மேஜைமீது வைக்கப்பட்டிருந்தது. காந்திஜியின் ஆசிச் செய்தியை ராஜாஜி படித்துச் சபையோருக்குப் படத்தையும் காண்பித்த பிறகு, தந்திச் செய்திகளில் முக்கியமானவற்றை ஸ்ரீ டி. சதாசிவம் படித்தார். பிறகு, தமிழில் எழுதப்பட்டிருந்த வாழ்த்துக் கடிதங்களிலிருந்து சிற்சில பகுதிகளை ராஜாஜியே படித்துக்காட்டினார். ஸ்ரீ சுத்தானந்த பாரதியாரின் கடிதத்தில் ஒரு பகுதி

யைப் படித்து விட்டு. "இதற்குமேல் பேஹாக் ராகம் தெரிந்தவர்கள் படிக்கலாம்!" என்று கடிதத்தைச் சபையோர் முன் நீட்டிய போது, ஒரே கல கலப்பும் சிரிப்பும் ஏற்பட்டன. பேஹாக் ராகம் தெரிந்தவர்கள் யாரும் படிப்பதற்கு முன் வராமற்போகவே, சுவாமிகளின் கீர்த்தனத்தையும் ராஜாஜியே வசன நடையில் படித்துக் காட்டினார்.

வாழ்த்துச் செய்திகள் படிக்கப்பட்ட பின்னர், தலைவர்களுக்கு வரவேற்புப் பத்திரங்கள் படிக்கப்பட்டன. எட்டயபுரம் பாரதி இலக்கிய மன்றத்தின் சார்பாகவும், எட்டயபுரம் பஞ்சாயத்து போர்டார்-ஏழைகளின் பண்டகசாலை சார்பாகவும், எட்டயபுரம் ஜவுளி வர்த்தகச் சங்கத்தார் சார்பாகவும், இன்னும் சில சங்கங்களின் சார்பாகவும் வரவேற்புப் பத்திரங்கள் அளிக்கப்பட்டன. திருவிழாவில் தலைவர் ராஜாஜி, எட்டயபுரம் சமஸ்தான மகாராஜா, ஸ்ரீ டி. கே. சிதம்பரநாத முதலியார், டாக்டர் ராஜன், டாக்டர் சுப்பராயன், நாமக்கல் கவிஞர், "கல்கி" ஆகியவர்களுக்கு மேற்கண்ட ஸ்தாபனங்கள் ஒவ்வொன்றின் சார்பாகவும் வரவேற்புப் பத்திரம் அளிக்கப்பட்டது.

வாழ்த்துப் பத்திரங்கள் படிக்கப்பட்டபோது மேடையில் சில சமயம் துவந்த யுத்தங்கள் நிகழ்ந்து கொண்டிருந்தன. அவரவர்கள் தங்களுக்குரிய பத்திரங்களைப் படிக்க ஆரம்பிக்கும்போதே பிடுங்கிக்கொள்ள முயல்வதும், படித்துக் கொண்டிருந்தவர் மேலும் படிக்க

முயல்வதுமாயிருந்த போதுதான் மேற்படி துவந்த யுத்தம் நிகழ்ந்தது.

## தலைவரின் முகவுரை

உபசாரப் பத்திர துவந்த யுத்தங்கள் எல்லாம் ஒருவிதமாக முடிந்த பிறகு ராஜாஜி முகவுரையாகச் சில வார்த்தைகள் கூறினார்:—

"ஒரு நாட்டில் கவிகளின் பெருமையை அறிந்து பாராட்டி ஞாபகச் சின்னம் அமைப்பதற்கு வெகு காலம் செல்லும். ஆனால் பாரதியாருக்கு இவ்வளவு சீக்கிரத்திலேயே ஞாபகச் சின்னம் ஏற்படுத்துவது நமது நாடு கெட்டுப் போகவில்லை, மக்களிடையே சிறந்த உணர்ச்சி இருக்கிறது என்பதையே காட்டுகிறது. இத்தகைய சிறப்பு வாய்ந்த கூட்டத்துக்குத் தலைமை வகிக்கும் கௌரவத்தை எனக்கு அளித்ததற்காக நன்றி கூறுகிறேன். இங்கிலாந்திலுள்ள பிரதம மந்திரி சர்ச்சிலிடம் போய், 'நீங்கள் பிரதம மந்திரி பதவியை விட்டு விட்டு ஷேக்ஸ்பியர் ஞாபகச் சின்னத்துக்கு அஸ்திவாரக் கல் நாட்ட வரவேண்டும்' என்று கேட்டுக் கொண்டால், சர்ச்சில் உடனே சந்தோஷமாகத் தமது மந்திரிப் பதவியை விட்டு அஸ்திவாரக் கல் நாட்டவே முன் வருவார். அப்படிப்பட்ட சிறப்பான காரியம் இது. ஒரு நாட்டின் பிரதம மந்திரியாக இருப்பதைக் காட்டிலும் இம்மாதிரியான ஒரு வைபவத்துக்குத் தலைமை வகிப்பதே எனக்குப்

பெரும் மகிழ்சியைத் தருகிறது. இந்த சபை யில் என்னைக் காட்டிலும் இப்பதவியை நன்கு வகிக்கத் தகுந்தவர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்களில் ஒருவர் ஸ்ரீ டி. கே. சிதம்பரநாத முதலியார். கவிதையின் உண்மை இயல்பு என்ன என்பதை டி. கே. சி. யிடம்தான் நான் தெரிந்து கொண்டேன்" என்று கூறி ஸ்ரீ முதலியாரைப் பேசும்படி கேட்டுக்கொண்டார்.

ஸ்ரீ டி. கே. சி.

கவிகள் பிறக்கும் இடங்கள் விசேஷ மகிமை பெற்று விடுகின்றன. இங்கிலாந்தில் ஷேக்ஸ் பியர் பிறந்த ஸ்டாபோர்டு-ஆன்-ஏவன் என்னும் ஊரை ஆங்கிலேயர் புண்ணிய ஸ்தலமாகப் போற்றுகிறார்கள். தமிழ்நாட்டில் மகாகவி பாரதியார் பிறந்த எட்டயபுரம் அத்தகைய பாக்கியத்தைப் பெற்று விட்டது. சாதாரண மாக ஒரு நல்ல கவியை ஒரு கவிஞர் நமக்குத் தந்து விட்டால் அதற்காகவே அவருக்குக் கோயில் கட்டிப் போற்றலாம். பாரதியாரோ எத்தனையோ அற்புதமான கவிகளை நமக்குக் கொடுத்திருக்கிறார்" என்று டி. கே. சி. ஆரம் பித்து "வெற்றி எட்டுத் திக்கு மெட்டக் கொட்டு முரசே" என்ற பாட்டை உணர்ச்சியுடனும் உற்சாகத் துடனும் பாவம் விளங்கும்படி பாடிக் காண்பித் தார். "பாரதியார் பாடியுள்ள முரசு நாம் கோயில்களிலே பார்க்கும் சாதாரண முரசு அல்ல; ஆயிரம் மைல் நீளமும் ஆயிரம் மைல் அகலமும் உயரமும் உள்ள முரசு" என்று

டி. கே. சி. சொல்வதற்கு முன்னல், அவர் பாடலைப் பாடிக் காண்பித்தபோதே, அத்தகைய பிரம்மாண்டமான முரசு—வானத்தையும் பூமியையும் அளாவிய முரசு—சபையோரின் மனக்கண் முன்னல் வந்து விட்டது!

## பாரதியின் சிஷ்யர்

மதுரை ஸ்ரீ வைத்தியநாதய்யர், "நான் பாரதியாரின் சிஷ்யன். அவரிடம் இரண்டு மாதம் தமிழ் படித்தவன்" என்று சொல்லிக்கொண்டு தமது பேச்சை ஆரம்பித்தார். ஸ்ரீ வைத்தியநாதய்யர் ஹைஸ்கூலில் படித்துக் கொண்டிருந்தபோது வழக்கமான தமிழ்ப் பண்டிதர் இரண்டு மாதம் லீவில் போயிருந்தாராம். அவருக்குப் பதிலாகப் பாரதியார் தமிழ்ப் பாடம் கற்பிக்க வந்தாராம். "அப்போதே அவருடைய கண்களில் ஏதோ ஒரு விசேஷ சக்தி இருப்பது தெரிந்தது. ஆனல் அவருடைய பெருமை முழுதும் தெரியவில்லை. பிறகு 1921-ல் காந்திஜியின் ஒத்துழையாமை இயக்கம் ஆரம்பமானபோது பாரதியாரின் பாட்டுக்களை மதுரையின் வீதிகளில் ஸ்ரீநிவாச வரதன், தியாகராஜ சிவம், சதாசிவம் ஆகியவர்கள் உணர்ச்சியுடன் பாடிக்கொண்டு போனதைக் கேட்டேன். தினந்தோறும் அந்தப் பாடல்களைக் கேட்கக் கேட்க என் மனதில் ஏதோ சங்கடம் உண்டாயிற்று. சட்டப் புத்தகங்களில் மனது செல்லவில்லை. அதன் பலனுகவே நான் தேசத் தொண்டிற்கு வந்து சேர்ந்தேன்.

நான் மட்டுமா? காலஞ்சென்ற ஸ்ரீ எஸ். ஸ்ரீநிவாச ஐயங்கார் பாரதியாரின் பாடல்களைக் கேட்டு விட்டுத்தான் தேசீய இயக்கத்தில் நாம் ஈடுபட்டதாக ஒரு முறை என்னிடம் கூறினர். பாரதியாரின் பாட்டுக்களின் மகிமைக்கு வேறு அத்தாட்சி வேண்டியதில்லை யல்லவா?"

ஸ்ரீ வைத்தியநாதய்யர் பேசி முடித்ததும் ராஜாஜி எழுந்திருந்து 'டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன் பேசுவார்; ரொம்பவும் சுருக்கமாகத் தான் பேசுவார்" என்று சபையோருக்கு அறிவித்துவிட்டு, மற்றொரு விஷயத்தையும் கூறினர். ராஜாஜி சமய சந்தர்ப்பங்களை அறிந்து காரியங்களைச் செய்பவர் என்பதற்கு இதுவும் ஒரு உதாரணமா யிருந்தது. விஷயம் என்ன வென்றால், ஸ்ரீ வைத்தியநாதய்யர் பேசி முடிக்கும்போது மணி ஒன்பதரை ஆகி விட்டது. சபையில் முக்கால்வாசிப் பேர்களுக்குமேல் அப்போது பட்டினியாகவே இருந்தார்கள். இதை முன்னிட்டு ராஜாஜி "ஆகாரம் செய்யாதவர்களெல்லாம் அப்படியே கொஞ்சம் கொஞ்சமாக எழுந்திருந்து போய்க் காலை ஆகாரத்தை முடித்துக்கொண்டு வந்து விடுவது நல்லது. கூட்டத்தை ஒரே மூச்சில் நடத்தி முடித்துவிட உத்தேசமாகையால் கூட்டம் முடிவதற்கு நேரம் ஆகலாம்" என்றார். இப்படி ராஜாஜி சொன்னதிலேயே எல்லாருக்கும் ஆகாரம் சாப்பிட்டது போன்ற திருப்தி ஏற்பட்டு விட்டதாகத் தோன்றியது! சபையிலிருந்து ஒருவரும் எழுந்து போகவில்லை

**டாக்டர் ராஜன்**

"பாரதியார் அமரத்துவம் அடைந்த கவி என்பதாகச் சிலர் சொல்லுகிறார்கள். அமரத்வம் எப்படி அடைவது என்பது எனக்குத் தெரியாது. நான் ஒரு டாக்டர். என் கையினால் வியாதியஸ்தர்கள் இறந்து போவதைத்தான் நான் பார்த்திருக்கிறேன்!" என்று டாக்டர் ராஜன் கூறியபோது சபையில் ஏற்பட்ட சிரிப்பினால் கொட்டகையே அதிர்ந்தது.

பிறகு, பாரதியாரின் கவிதைச் சிறப்புக்குச் சிறந்த உதாரணம் ஒன்றை டாக்டர் ராஜன் கூறினார். ஜஸ்டிஸ் ஸி. சங்கரன் நாயர் ஒரு தடவை ஒரு வழக்கு விசாரணை சம்பந்தமாகப் பாரதி பாடல்களைப் படித்து விட்டு "**இறந்தவனும் உயிர் பெற்று எழக்கூடிய பாட்டு**" என்று பாராட்டியதைக் குறிப்பிட்டார். அப்புறம் திருநெல்வேலியில் தாமிரபரணி நதிக்கரையில் பல வருஷங்களுக்கு முன்பு பாரதியாரின் ஞாபகார்த்தமாகத் தாம் ஒரு கல் நாட்டியதாகவும், அந்த அஸ்திவாரக் கல் இன்னும் பேச்சு மூச்சில்லாமல் இருந்த இடத்தை விட்டுக் கிளம்பாமல் அப்படியே இருக்கிறது என்றும் கூறித் தமது துரதிருஷ்டக் கைகளை நொந்து கொண்டார்! டாக்டர் ராஜன் இந்த விஷயத்தைச் சோகமும் ஹாஸ்யமும் கலந்து சொன்னபோது சபையிலிருந்தவர்களுக்கு ஒரு பக்கம் வருத்தமும் ஒரு பக்கம் சிரிப்புமாயிருந்தது.

பிறகு, ராஜாஜியின் திருக்கரங்களினால் போடப்பட்ட இந்த அஸ்திவாரக் கல் கூடிய சீக்கி

ரம் கட்டிடமாகிக் கிளம்பிப் பாரதியாருக்கு அழியாத ஞாபகச்சின்னமாக விளங்க வேண்டு மென்று பிரார்த்திப்பதாகக் கூறிமுடித்தார்.

**கவிஞர் வாழ்த்து**

பிறகு, நாமக்கல் கவிஞர் எழுந்திருந்து "நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்" என்ற பாட்டைக் கம்பீரத்வனியில் பாடி விட்டு, தாம் பாரதியாரின் பரம்பரையில் வந்த கவி என்றும், கவிகளின் பிரதிநிதி என்ற முறையில் பாரதி ஞாபகச் சின்ன முயற்சிக்கு வாழ்த்துக் கூறுவதாகவும் சொன்னார்.

''பாரதியாரை வெகு காலமாகக் காணவேண்டு மென்று எனக்கு அவா. நான் அவரைக் காணும் பொருட்டு ஒரு சமயம் சென்னையில் போய் ஒரு வாரம் அலைந்துவிட்டு வந்தேன். அப்போது அவர் அகப்படவில்லை. பின்னொரு சமயம் அவரைப் பார்க்கச் சென்றேன். அப் போது நான் ஒரு சித்திரக்காரன். கவிகளும் புனையத் தெரியும். இருந்தாலும் பாரதியா ருக்கு நான் ஒரு சித்திரக்காரன் என்ற முறை யிலேயே அறிமுகம் செய்து வைக்கப்பட்டேன். பாரதியார் என்னைப் பார்த்ததும், 'நீர் என்னை ஓவியத்தில் தீட்டும்; நான் உம்மைக் காவியத் தில் தீட்டுகிறேன், என்று கூறினார். பிறகு எனக்குக் கவி எழுதவும் தெரியும் என்பதைப் பாரதியார் அறிந்ததும் பாரதியார் என்னை ஒரு பாட்டுப் பாடச் சொன்னார்.

'தம்மரசைப் பிறர் ஆள விட்டுவிட்டுத்
தாம் வணங்கிக் கைகட்டி நின்றபேரும்'

என்ற பாட்டின் முதல் அடியைப் பாடியதும், பாரதியார் ஆவேசத்துடன் 'பாண்டியா! நீ புலவனடா!' என்றார். அது முதல் நானும் என்னைப் பாரதி பரம்பரைக் கவிஞனாக எண்ணலானேன்!''

ஒரு சமயத்தில் தூத்துக்குடியில் ஒரு பாட்டுப் போட்டி நடத்தினார்களாம். அந்தப் போட்டிக்கு நாமக்கல் கவிஞரும் பாரதியாரும் அனுப்பியிருந்த இரண்டு பாட்டுக்களையும் பரிசுக்குத் தகுதியில்லை என்று தள்ளி விட்டார்களாம்! இது விஷயத்திலும் பாரதியாருக்கும் தமக்கும் ஒற்றுமை உண்டு என்று நாமக்கல் கவிஞர் சொன்னதைச் சபையோர் பெரிதும் ரஸித்தார்கள்.

பாரதி பரம்பரையில் வந்த கவி என்று தம்மை நாமக்கல் கவிஞர் கூறிக் கொண்டதைச் சபையோர் அங்கீகரித்ததற்கு அறிகுறியாக அவருக்கு மேடையில் மாலை சூட்டப் பெற்றபோது சபையில் பெருங் கரகோஷம் கிளம்பியது.

## ராஜாஜியின் பேருரை

தலைவர் சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் பிறகு பேசினார். சுமார் முக்கால் மணி நேரம் பேசினார். பேச்சு அற்புதமாயிருந்தது. அதை அந்தப் பெரிய சபை கேட்டு அநுபவித்த விதம் அதைவிட அற்புதமாயிருந்தது.

ராஜாஜியின் பேச்சில் மூன்று விஷயங்கள் முக்கியமானவை :—(1) பாரதியாரைப் பற்

றிய ராஜாஜியின் சொந்த அனுபவங்கள்; (2) பாரதியார் கவிதையின் சிறப்பு; (3) பாரதியாரைத் தமிழ்நாடு போற்ற வேண்டிய முறை. பின்வருமாறு பேச்சு ஆரம்பமாயிற்று:—

இந்நாளில் பலர் பாரதியாரைப் பற்றித் தங்களுடைய சொந்த அநுபவங்களையும் ஞாபகங்களையும் சொல்கிறார்கள். அவர்கள் எல்லாரையும் விடப் பாரதியாரை எனக்கு அதிகமாய்த் தெரியும்; அதிக காலமாயும் தெரியும். இதற்குக் காரணம் என்னவென்றால், அவர்கள் எல்லாரையும்விட எனக்கு வயது அதிகம். (சிரிப்பு) அவருடைய மாமாவைத் தவிரச் சொல்கிறேன். வயது எனக்கு அதிகமானதினாலேயே சில விஷயங்களில் அனுபவமும் அதிகமாய்த் தானே இருக்க வேணும்? 1906-ம் வருஷத்திலேயே பாரதியாரை எனக்குத் தெரியும். அவரும் நானும் கல்கத்தா காங்கிரஸுக்கும் அடுத்த வருஷம் சூரத் காங்கிரஸுக்கும் போனோம். பாரதியார் தீவிர வாதி. நானும் அப்போது அப்படித்தான். அந்தக் காலத்தில் தீவிரவாதம் என்றால் சாதாரண விஷயமல்ல. சூரத் காங்கிரஸில் நாற்காலிகள் வீசி எறியப்பட்டன. செருப்புகளும் பறந்தன. ஆனால் இந்த அமர்க்களமெல்லாம் நடந்து கொண்டிருந்தபோது பாரதியார் தூரத்தில் போய் ஸ்ரீ ஜி.எ. நடேசனுடன் உட்கார்ந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார். அவர் கவினுராகையால் அப்படிச் செய்தார். கவிகள் சாதாரண மனிதர்களைப் போல் காரியங்களில்

இறங்கி விட்டால் அவர்கள் கவிகளாயிருக்க முடியாது.''

"அந்தக் காலத்தில் பாரதியாரைப் போற்றும் விஷயத்தில் சாதியை யாரும் கவனிக்கவில்லை. உண்மையில் அவர் என்ன சாதி என்பது கூட அநேகருக்கு அப்போது தெரிந்திருக்க வில்லை. நானும் என் நண்பர் ஒருவரும் ஒரு சமயம் புதுச்சேரிக்குப் போய்ப் பாரதியாரைப் பார்த்தோம். அப்போது எங்களுக்குள் பாரதியார் என்ன சாதி என்ற கேள்வி எழுந்தது. பாரதியார்மேல் பூணூல் இல்லையாதலால் விவாதத்தை எங்களுக்குள் தீர்த்துக் கொள்ள முடியவில்லை.எனவே பாரதியாரையே கேட்டு விடுவது என்று தீர்மானித்துக் கேட்டோம். அவர் பிராம்மண சாதி என்று அறிந்ததும், 'பூணூல் எங்கே?' என்று கேட்டோம். 'அது எங்கே போயிற்றோ? யார் கண்டது?' என்றார். இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், நமது நாட்டில் எப்போதுமே கவிகளைப் போற்றும் விஷயத்தில் சாதி குறுக்கிட்டது கிடையாது என்பதற்காகத்தான்.''

பாரதியார் உயிரோடிருந்த போது அவரை யாரும் ஆதரிக்க வில்லை யென்றும், பட்டினி கிடந்து கஷ்டப்பட்டாரென்றும் அடிக்கடி புகார் சொல்லப்படுகிறதல்லவா? இதைக் குறிப்பிட்டு ராஜாஜி சொன்னதாவது— "பாரதியார் பட்டினி கிடந்தார் என்று பலர் சொல்லுகிறார்கள். ஆனால் என்னுடைய அதிர்ஷ்டம், அந்த பாரதியாரே எனக்குச் சாப்பாடு போட்டார்.

சாப்பாடு ரொம்ப நன்றாகத்தான் இருந்தது. பாரதியாரின் வறுமையைப் பற்றி நாம் இப்போது ஓயாமல் வருத்தப்பட வேண்டியதில்லை. அவருக்கு ஏராளமாக யாராவது பணம் கொடுத்திருந்தாலும், ஒரே நாளில் செலவழித்து விட்டிருப்பார். அவரால் பணத்தைச் சேர்த்து வைத்துக் கொண்டு சௌக்கியமாக இருந்திருக்க முடியாது. அவருடைய சுபாவம் அது. அதனால்தான் அவர் அற்புதமான கவிகளைப் பாட முடிந்தது!"

பிறகு, பாரதியார் தமக்குச் சாப்பாடு போட்டதோடு மட்டுமில்லை, தமக்காக ஒரு பாட்டும் பாடிக் கொடுத்தார் என்று ராஜாஜி சொன்னார். அந்த நாளிலேயே பௌதிக நூல்களைத் தமிழ்ப் படுத்த வேண்டும் என்ற முயற்சி சேலத்தில் ராஜாஜியினால் தொடங்கப்பட்டிருந்தது. தமது இயக்கத்துக்குச் சாதகமாகப் பாரதியாரை ஒரு பாடல் பாடித் தரும்படி கேட்டுக் கொண்டார். அதன் பேரில்தான், '**ஆதிசிவன் பெற்று விட்டான்**' என்ற பாடலைப் பாரதியார் பாடினார். அந்தப் பாட்டினால் பௌதிக சாஸ்திரத்தைத் தமிழிலே சொல்ல முடியாது என்று எண்ணுகிறவர்களைக் குறித்து '**என்றந்தப் பேதை உரைத்தான்!**' என்று காரசாரமாகப் பாரதியார் குறிப்பிட்டிருப்பதைக் காணலாம்.

கடைசியாக, பாரதியார் வாழ்க்கையைப் பற்றி ராஜாஜி குறிப்பிட்ட ஒரு சம்பவம் சபையின் மனதைப் பெரிதும் உருக்கி விட்டது. அது வருமாறு:—

"புதுச்சேரியை விட்டு வெளி வந்த பிறகு பாரதியார் சென்னைக்கு வந்தபோது அவரை வரவேற்பதற்காக நான் ரயில்வே ஸ்டேஷனுக்குப் போனேன். பாரதியார் ரயிலிலிருந்து இறங்கினார். அவரைப் பார்த்ததும் எனக்கு ஒரே துக்கமாய்ப் போய் விட்டது. ஏற்கெனவே நான் அவரைப் பார்த்தபோது அவருடைய முகம் பூரண சந்திரனைப் போன்ற தேஜஸ் பொருந்தியதா யிருந்தது. ஆனால், இப்போதோ களை யிழந்து வற்றி உலர்ந்து போயிருந்தது. 'ஐயோ! இவர் இப்படிப் போய் விட்டாரே!' என்று நான் வருத்தப் பட்டேன்" என்று ராஜாஜி சொன்னபோது, அந்த உருக்கமான வார்த்தைகளில் மன முருகாதவர்கள் அந்தச் சபையில் யாரும் இல்லை என்று சொல்லலாம்.

ஒத்துழையாமை இயக்கத்தை முன்னிட்டு ராஜாஜி வக்கீல் தொழிலை விட்டபோது, பாரதியார், "வக்கீல் வேலையை விடுவதாவது! பைத்தியக்காரத்தனம்! உனக்குப் பணம் வேண்டாமென்றால் சம்பாதித்து என்னிடம் கொடு!" என்று சொன்னதைக் குறிப்பிட்டு, பிற்பாடு பாரதியார் தமது கருத்தை மாற்றிக் கொண்டதையும் தெரிவித்தார்.

"பாரதியார் திலகர் கோஷ்டியைச் சேர்ந்தவர். முதலில் அவருக்கு மகாத்மா காந்தியின் இயக்கத்தில் நம்பிக்கை இல்லை. ஆனால் அந்த இயக்கம் தேசத்தில் பலமாகத் திரண்டு எழுந்ததைக் கண்டதும் தமது கருத்தை மாற்றிக்

கொண்டார். மகாத்மாவைப் பற்றிப் பாடலும் பாடினர்" என்று குறிப்பிட்டார்.

பிறகு, ராஜாஜி உண்மையான கவிதையின் இயல்பு என்னவென்பதை விளக்கிக் கூறினர். மிக உயர்ந்த இலக்கிய விஷயத்தை அதிகப் படிப்பில்லாத கிராமாந்தர ஜனங்கள்கூடத் தெரிந்து கொள்ளுமாறு தெளிவு படுத்திக் கூறினர். "கவிதையில் விஷயத்தைப் போலவே முக்யமான அம்சம் அதன் உருவம். இதை டி.கே.சி. அடிக்கடி வற்புறுத்திச் சொல்வார். நல்ல கருத்து ஒன்றை வசனத்திலும் சொல்லலாம். ஆனல் அதற்கு அவ்வளவு வலிவு கிடையாது. அதே விஷயத்தைக் கவிதை உருவம் கொடுத்துச் சொல்லும்போது ஒன்றுக்கு நூறு மடங்கு வலிவு ஏற்பட்டு விடுகிறது. அப்படிக் கொடுக்கும் உருவம் சரியான கவி உருவமாயிருக்க வேண்டும். எல்லாராலும் அது முடியாது. உண்மையான கவிஞனல்தான் முடியும்" என்று சொல்லி, விஷயம் நன்கு விளக்கமாகும் பொருட்டுப் பின்வரும் உதாரணமும் கூறினர்:—

"ரோஜாப் புஷ்பத்தின் வாசனையுள்ள திராவகத்தை ஒரு புட்டியில் போட்டு விற்கிருர்கள். வாசனை அப்படியேதான் இருக்கிறது. ஆனல், அது ரோஜாப்பூ ஆகுமா? மலரை நாம் பார்த்து முகர்ந்து அநுபவிக்கிற சந்தோஷம் புட்டியில் அடைத்த திராவகத்தினல் ஏற்படுமா? கருத்து மட்டும் நன்ருயிருந்தால் அது வெறும் வாசனை திராவகம் மாதிரி. நல்ல

கவிதை உருவம் அதற்கிருந்தால் ரோஜாப் புஷ்பம் மாதிரி. கவிதையும் ரோஜாப் புஷ்பத்தைப் போல முழுமையாகப் பார்த்து அநுபவிக்க வேண்டும். இதழ் இதழாகப் பிய்த்து நாசம் செய்யக்கூடாது. மற்றும், ரோஜாப் புஷ்பம் உயர்வானதா மல்லிகைப் புஷ்பம் உயர்வானதா என்பது போன்ற வீண் விவாதங்களும் செய்யக் கூடாது. நமக்கு ரோஜா, மல்லிகை எல்லாம் வேண்டியதுதான். சிலர் குழந்தைகளைப் பார்த்து 'உனக்கு அப்பா வேண்டுமா? அம்மா வேண்டுமா?' என்று கேட்பதுண்டு. அப்படிக் கேட்கிறவர்களைக் கன்னத்தில் அறையலாம் என்று எனக்குத் தோன்றும். அது போலவே, கவிகளில் எந்தக் கவி உயர்ந்தவர் என்று விவாதிப்பதும் தவறு. 'கம்பர் உயர்ந்தவரா, பாரதி உயர்ந்தவரா' என்றெல்லாம் விவாதிக்கக் கூடாது. நமக்குக் கம்பரும் வேண்டும்; பாரதியும் வேண்டும். உண்மைக் கவி எது என்று தெரிந்து கொண்டு எல்லாவற்றையும் அநுபவிப்பதற்கு முயற்சிக்க வேண்டும்."

இவ்வாறு கவிதை இயல்பைக் குறித்துப் பேசி விட்டு, ராஜாஜி பாரதியாரின் கவிதைகளுக்கு வந்தார். "பாரதியார் உண்மையான கவி. எத்தனையோ மணமுள்ள மலர்களைச் சிருஷ்டித்துக் கொடுத்திருக்கிறார். தேசத்துக்கு அவசியமான எல்லா விஷயங்களையும் பற்றிப் பாடியிருக்கிறார். அவர் தொடாத விஷயம் இல்லை. ஆனால் சமூக சீர்திருத்தத்திற்காவது அரசியல் கொள்கைகளுக்காவது கவிகளிடம்

பிரமாணம் தேடவேண்டிய அவசியமில்லை. அப்படித் தேடினேமானுல் சில சமயம் முரண்பட்டது போல் தோன்றும் கருத்துக்களைக் கண்டு குழப்பமடைவோம். அவ்வப்போது தேசத்தில் ஆவேசத்தை உண்டாக்கியிருந்த இயக்கங்களைக் குறித்துப் பாரதியார் பாடியிருக்கிறார். பாரதியார் எதைப் பற்றிப் பாடினுர் என்பதைக் காட்டிலும், அவர் ஒரு கவி என்பதுதான் மகத்தான விஷயம். முக்கியமாக, **நம் காலத்தில் பாரதியார் பிறந்து பாடியதனுல், இந்தத் தமிழ் ஜாதியின் சக்தி அவிந்துவிட வில்லையென்று நிச்சயமாய்த் தெரிகிறது.** அப்பேர்ப்பட்ட கவிஞன் ஞாபகத்தை நாம் என்றென்றைக்கும் போற்ற வேண்டும். அப்படிப் போற்றுவதினுல் இன்னும் பல கவிகள் தமிழ் நாட்டில் வருங் காலத்தில் தோன்றக் கூடும்" என்று கரகோஷத்தினிடையே கூறிவிட்டு, கடைசியில் பாரதி ஞாபகார்த்த முயற்சிக்கு ஆசி கூறினுர்.

"பாரதியாருக்குச் சிறந்த ஞாபகச் சின்னம் அவருடைய பாடல்கள்தான். தமிழன் ஒவ்வொருவன் உள்ளத்திலும் அந்தப் பாடல்கள் ஊறிவிட வேண்டும். இதனுல் வேறு ஞாபகச் சின்னங்கள் வேண்டாம் என்பதில்லை. ஞாபகச் சின்னக் கட்டிடங்களும் அவசியமானவைதான். பாடல்கள் பரவுவதற்கே இவை உபயோகமாயிருக்கும். டாக்டர் அழகப்பச் செட்டியார் சொன்னபடி புதுச்சேரியிலும் சென்னையிலும் இன்னும் தமிழ் நாட்டின் ஒவ்வொரு ஊரிலும் பாரதியாருக்கு ஞாபகச் சின்னம்

ஏற்படவேண்டியதுதான். ஆனால் பாரதியார் பிறந்த ஊராகிய எட்டயபுரத்தில் ஏற்படும் ஞாபகச் சின்னத்துக்கு ஒரு தனி விசேஷம் உண்டு. இது தமிழ்நாடு முழுவதற்கும் பொது வான ஞாபகச்சின்னமா யிருக்கும். இந்த ஞாபகச் சின்னக் கட்டிடத்தை எழுப்பிய பிறகு அதை எப்படி உபயோகப் படுத்துவது என்று தீர்மானிக்க வேண்டும். பாரதி நூல் களைப் பிரசுரிப்பது போன்ற நிரந்தரமான வேலை நடைபெற வேண்டும். வருஷா வருஷம் பாரதி திருவிழா நடத்த வேண்டும். இதை யெல்லாம் நடத்துவதற்கு ஒரு நிரந்தரமான ஸ்தாபனம் வேண்டும். 'பாரதி சங்கம்' என்ற பெயருடன் அப்படி ஒரு நிரந்தர ஸ்தாபனம் ஏற்படுத்த வேண்டு மென்று நான் யோசனை சொல்லுகிறேன். வருஷ சந்தாவைக் குறை வாக வைத்தால் அதாவது, 2 அணா, 4 அணா அல்லது 8 அணாவாக வைத்தால் தமிழ்நாடு முழுதும் ஆயிரக்கணக்கில் அங்கத்தினர்கள் சேர்ந்து விடுவார்கள். அந்தச் சந்தாவைக் கொண்டே வருஷாந்திர விழாவை நடத்தி விடலாம். சங்கத்தின் மூலம் இன்னும் எவ் வளவோ நல்ல காரியங்கள் செய்யலாம்" என்று கூறி ராஜாஜி தமது பிரசங்கத்தை முடித்து உட்கார்ந்ததும், இத்தனை நேரமும் ஏதோ வேறு ஒரு உலகத்தில் சஞ்சரித்தவர்கள் போல் பரவசமாய்க் கேட்டுக் கொண்டிருந்த சபையி னர் திரும்பவும் இந்த உலகத்துக்கு வந்து சேர்ந்து, அதற் கறிகுறியாகப் பெரும் கர கோஷம் செய்து ஆரவாரித்தார்கள்.

ராஜாஜி பேசிக்கொண்டிருந்தபோது தூத்துக்குடியிலிருந்து கால் நடையாகப் புறப்பட்டு இந்த வைபவத்துக்காக நடந்துவந்த நாற்பது இளம் மாணவர்கள் அடங்கிய கோஷ்டி பந்தலுக்கு வந்து சேர்ந்தது. ராஜாஜியின் பேச்சு நடந்து கொண்டிருப்பதை அறிந்ததும் அவர்கள் தங்கள் ஜெயகோஷத்தை நிறுத்திக் கொண்டு அமைதியாகப் பந்தலுக்குள் வந்து உட்கார்ந்தது குறிப்பிடத்தக்க சம்பவமாகும்.

## வந்தனேபசாரம்

வந்தனேபசாரம் கூறுவதற்காக எழுந்த 'கல்கி'' ஆசிரியர் பின்வருமாறு ஆரம்பித்தார்: "பல வருஷ காலமாக எந்தக் காரியத்திலும் ராஜாஜியை ஆதரிப்பது எனக்கு வழக்கமாய்ப் போயிருக்கிறது. இன்றைக்கு ஒரு நாளாவது அவரை மறுத்துப் பேசும் சந்தர்ப்பம் கிடைக்கும் என்று எதிர்பார்த்தேன். ராஜாஜி இந்தப் பாரதி ஞாபகச் சின்ன விஷயமாக நான் செய்த முயற்சியைக் குறித்து ஏதாவது பாராட்டிப் பேசுவார் என்றும், அதை நான் மறுத்து 'அப்படி ஒன்றும் நான் பிரமாதமாய்ச் செய்துவிடவில்லை' என்று தெரியப் படுத்தலாம் என்றும் நினைத்திருந்தேன். ஆனல் ராஜாஜி நான் எதிர்பார்த்தபடி சொல்லவில்லை 'கல்கி என்ன பிரமாதமாய்ச் செய்துவிட்டார்? ஒன்றும் இல்லை. பாரதியார் பாடல்களுக்காக அல்லவா பணம் வந்தது?' என்று கூறினர். எனவே, இது விஷயத்திலும் ராஜாஜியை நான் ஆதரிக்க வேண்டியே வந்திருக்கிறது.

உண்மையிலேயே நான் ஒன்றும் செய்துவிட வில்லை. செய்தவர்கள் எல்லாம் மற்றவர்கள் தான். அவர்கள் என்னிடம் வந்தனத்தை எதிர்பார்க்க வில்லையென்றாலும் பொதுஜனங் களுக்குத் தெரியவேண்டு மென்பதற்காகச் சொல்லுகிறேன்.''

இவ்விதம் பீடிகை போட்டுக்கொண்டு, முதன் முதலில் ஐந்து ரூபாய் அனுப்பிப் பாரதி நிதியை ஆரம்பித்து வைத்த ஸ்ரீ ரகுநாதனுக்கு நன்றி செலுத்தினார். ''ஸ்ரீ ரகுநாதன் இந்த வைபவத்துக்கு வந்திருப்பதாகவும், இந்தப் பந்தலில் எங்கேயோ இருப்பதாகவும் கேள்விப் படுகிறேன். இது உண்மையானால், தயவு செய்து அவர் இங்கே மேடைக்கு வரவேண்டும்'' என்று கூறியதும், கூட்டத்தின் மத்தியில் உட்கார்ந்திருந்த ஸ்ரீ ரகுநாதனைப் பக்கத்தில் உட்கார்ந்திருந்தவர்கள் தூண்டி எழுந்திருக்கச் செய்ய, அவரும் மிக்க சங்கோசத்துடன் மேடைக்கு வந்தார். பலமான கரகோஷத் துக்கிடையே மேடையில் அவருக்குப் பூமாலை போடப்பட்டது.

பிறகு, எவ்வளவோ சிரமங்களைப் பாராட் டாமல் இந்த வைபவத்துக்கு விஜயம் செய்த தலைவர்கள் ஆரம்பத்தி லிருந்து ஒத்துழைத்து உதவி புரிந்து வந்த பத்திரிகாசிரியர்கள், எழுத் தாளர்கள், கேட்டதற்கு மேல் பன்மடங்கு நிதிக்குப் பொருளுதவிய பொது மக்கள், திரு விழாவை இவ்வளவு அமோகமாக நடத்தி வைத்த எட்டயபுரம் சமஸ்தான மகாராஜா,

அவருடைய மைத்துனர் ஸ்ரீ அமிர்தசாமி, பாரதி இலக்கிய மன்றத் தலைவர் ஸ்ரீ மு. கந்த சாமி செட்டியார், மேற்படி மன்றத்தைச் சேர்ந்த காரியதரிசி ஸ்ரீ சாமிநாதன், ஸ்ரீ கே. பி. எஸ். நாராயணன் முதலிய இளைஞர்கள், விழாவுக்கு வந்து கச்சேரி செய்து சிறப்பித்த வித்வான்கள், கட்டிடப் பிளான் போட்டுக் கொடுத்து உதவிய பிரசித்த கட்டிடக்கலை நிபுணர் ஸ்ரீ சித்தலே, விழாவுக்கு ஒரு வாரத்துக்கு முன்பே எட்டயபுரம் சென்று தொண்டு புரிந்த கோயமுத்தூர் ஸ்ரீ சுப்ரி ஆகியவர்களுக்கு வரிசைக் கிரமமாக வந்தனம் கூறினர். இவ்விதம் எட்டயபுரம் பாரதி ஞாபகச் சின்ன அஸ்திவார விழாவானது டாக்டர் திரிமூர்த்தி தமது செய்தியில் குறிப்பிட்டிருந்த பிரகாரம், "இதுவரை தமிழ்நாட்டில் இம்மாதிரி இலக்கிய விழா நடந்ததைக் கண்டதுமில்லை; கேட்டதுமில்லை!" என்று சொல்லும்படியாக இனிது நடைபெற்று முடிந்தது.

☆